773

உ

பெரிய எழுத்து பவளக்கொடி மாலை.

4 - NOV 1924

இ. ராமசாமிக்கோன்,

புத்தகவியாபாரம்,

வடக்காவணிமூலவீதி, மதுரை.

…ன் விலை] 1924. [அணா 10

EXCELSIOR PRESS,
MADURA.

D-, IGPU, P
N24
178003.

உ

ஸ்ரீராமஜெயம்.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

பவளக்கொடி மாலை.

இது

திண்டுக்கல் புக்ஷாப்,

ம. அழகர்சாமிபிள்ளை,

பார்வையிடப்பட்டு,

மதுரை, வடக்காவணிமூலவீதி

புஸ்தகவியாபாரம்,

இ. ராமசாமிக் கோனாரால்,

மதுரை,

எக்ஸெல்ஸியர் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1924. [ணா

4 NOV 19

காமன் பண்டிகை எரிந்தகட்சி

மன்மதன் லாவணி.

துவாதசாந்த ஸ்தலவாசகர்,

ஸ்ரீமான் அழகணிக்குமாரு சுவாமிகள் இயற்றியது.

இதில் காமன் பண்டிகையின் சிறப்பும், மதுரை மஹால் வர்ணனையும், பண்டிகை மேடையின் சிங்காரமும் லாவணி மெட்டுகளில் பாடியுள்ளது. படிக்கப்படிக்கத் தமாஷாய் இருக்கும்.

மன்மதன் இரதி தேவியாரிடம் விடைபெற்றுச் செல்லுங்கால் இருவருக்கும் ஏற்படும் தர்க்கம் விசித்திரமாயிருக்கும்.

இரதி புலம்பல் ஒப்பாரிகள் மிக்க உருக்கமாயிருக்கும். மன்மதன் எரிந்தகட்சிக் கேள்வி லாவணிகள் பாட்டிற் சிறந்தும் புராண ஆராய்ச்சிகள் நிறைந்துமிருக்கும். விலை அணா 6.

மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

டிராமாச் சரித்திரங்கள்.

வெளியாகி விட்டது! 12-ம் ஒரே புத்தகம் வெளியாகி விட்டது!

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தகம்.

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்ரம், அல்லியரசாணி சரித்ரம், மயில்ராவணன் சரித்ரம், மதுரைவீரன் சரித்ரம், துரோபதைவஸ்திராபரஹரணம், கீசக சம்மாரம், புதிய வர்ணமெட்டு பார்வதி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்ரம், முதலிய அற்புத சரித்திரங்கள் 12-ம் ஒன்று சேர்ந்தது.

தற்கால நாகரிக நூதன அற்புத வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றது. விலை ரூ 1-4-0

விடாநகைப்பை விளைவிக்கும்

விநோதவிகட சிந்தாமணி.

நண்பர்காள்! இதுவரை விகடப்புத்தகங்கள் அநேகம் பார்த்திருப்பீர்கள். ஆயினும் இதைப்போல் பூராவும் விகடமாய் இராதென்பது திண்ணம். விலை அணா 4.

ஷை இரண்டாம் பாகம்.

இதில் விகடப்பிரசங்கத்திற்குரிய கதைகள் ஏராளமாய் அடங்கியது. ... கள் நினைக்குந்தோறும் சிரிப்பை உண்டாக்கும். விலை அணா 6.

...ளிப்பாட்டு விகடமாகவே இருக்கும் அணா 1.

உ

கடவுள் துணை.

பவளக்கொடி மாலை.

காப்பு-கலிவிருத்தம்

வேதமாநெறி சேரும்வினைகளும்
தாகபோக விடாததளர்ச்சியும்
சோகவாரியினுல் வருந்துன்பமும்
போகவானை முகவானைப்போற்றுவாம்.

விநாயகர் தோத்திரம்.

அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்திக்கணபதியே சரிந்தவயிற்றோனே
சாரானைமாமுகனே கணபதியேமுன்னடவாய்
ஸ்ரீராமர்தன்மருகா செல்வக்கணபதியே
பேழைவயிற்றோனே பெருச்சாளிவாகனனே
கந்தருக்குமுன்பிறந்த கற்பகமேமெய்ப்பொருளே
வந்தெனக்குமுன்னடவாய் மாயன்மருகோனே

கலைமகள்துதி.

வாணிசரஸ்வதியே மறையவனார்தேவியரே
சொல்லுவழுவாமல் சொற்குற்றம்வாராமல்
நாவுதவாராமல் நடத்துமம்மாவிக்கதையை
ஐந்தெழுத்தையோரெழுத்தாயமத்துமம்மாஎன்னுவில்
எட்டெழுத்தையோரெழுத்தாயெழுதுமமாஎன்னுவில்

துரோபதை துதி.

தோராவடிவழகி துரோபதைபாஞ்சாலி
அக்கினியில்வந்துதித்த ஆதிபராசத்தியே
நெருப்பில்பிறந்தவளே நீலவர்ணன்தங்கையே
மந்தாரகுந்தியட்கு முந்திவந்தமருமகளே

சந்தனவடிவழகன் தருமராசன்தேவியரே
பாடத்தொடங்கினேன் பாஞ்சாலன்சீர்மகளே
உன்கதையை நான்பாட ஊழ்வினைகள்வாராமல்
பவளக்கொடிமாலை பாடத்தொடங்கினேன்யான்
கற்றோர்க்குக்குற்றங்கள் காதுவழிநேர்ந்தாலும்
உற்றபிழைகளெல்லாம் உயர்ந்தோர்மனம்பொறுத்து
அம்புவியோரெல்லோரும் ஒப்பிமனமகிழ
அன்றுநடந்தகதை அடியேனுரைத்திடுவேன்

அல்லி அரசிருக்கை.

அல்லிப்பெருமாள் அரசாளும்நாயகியாள்
ஆராயிரபாண்டியற்கு அரியதுரைமகளாம்
மதுரைநகராளும் வாழ்பாண்டிநாடுடையாள்
நாலுமலையாளம் நடுவானதென்மதுரை
தென்மதுரையாளுகிற தேன்மொழியாளல்லியம்மாள்
ஆணரசாண்டாளே அழிந்துபோம்சீமையென்று
பெண்ணரசாளவென்று பிறந்தாளே அல்லியிலே
ஒருவர்வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரில் உள்ளேமணற்சேறுமுண்டு
அடிக்கிறகாற்றதனில் அலைகாற்றுரும்புமுண்டு
காலகாலநாதருக்குக் கண்டங்கருப்புமுண்டு
சந்திரற்குமச்சமுண்டு சற்றேகருப்புமுண்டு
குண்டுமணிக்காலும் கொஞ்சங்கருப்புமுண்டு
அவள்-மயிரேகருப்பொழிய மற்றுகருப்புமில்லை
புருவங்கருப்பொழிய பின்னேகருப்புமில்லை
மன்னன்விசையனுடன் மடலூர்ந்தமாதேவி
காளைவிசையன் கட்டழகிமாதேவி
[illegible]ராபத்திலே எதிர்த்துவந்த நீண்முகனை
[illegible]கலித்து வீரபட்டம்கட்டிக்கொண்டாள்
[illegible]ரளி [illegible]மைவிருதுகட்டிப் பூமியெல்லாமாளுகிறாள்

அல்லி அரசிருக்கை. புலந்திரன் தாயாரைப் பவளத்தேர்கேட்பது.

அல்லியென்றுபேர்சொன்னால் அழுதபிள்ளைவாய்மூடும்
கொம்பனையாள்பேர்சொன்னால் குருவிதண்ணீர்குடியா
கட்டழகிபேர்சொன்னால் கல்லுதெய்வம்கூத்தாடும்
அல்லியின்பேர்சொன்னால் அறுத்ததலைகொக்கரிக்கும்
கட்டழகியல்லியருங் காலையில்தானெழுந்து
முத்துசிவிகையது யேறிமிருகுழலாள்
தாதியருத்தாதியருந்தையல்மார்சூழ்ந்துவர
பூங்காவனச்சோலை போயிறங்கியல்லியரும்
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
பொய்கையில்போயிறங்கி பொன்முகஞ்சுத்திசெய்து
முத்துநிகர்த்தபல்லும் முருக்கம்பூசெவ்வாயும்
காலோடுங்கைகளும் கனிவாயிஞ்சுத்திசெய்து
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்பணிந்து
மதுரைமீனாட்சியனை மனதிலேதானினைந்து
சொக்கரடிபணிந்து செவிமீதிற்பூச்சொருகி
சந்தனமும்பந்நீரும் சவ்வாதுதானணிந்து
பார்ப்பார்பரதேசிபண்டாரஞ்சங்கமற்கு
அந்தணர்வேதியற்கும் அதிதிபரதேசியற்கும்
தானம்வழங்கிவரத் தாமரைசூழ்வாழ்மாரி
தருமத்தைச்செய்தவளும் தண்டிகையின்மீதேறி
பூங்காவனத்தைவிட்டு பொற்கொடியும்வாறுளே
ஆனையின்மேல்பேரிகை அகுபடுதுகுமுகுமென்று
ஒட்டையின்மேல்பேரிகை ஓசைகிளம்புகுது
பேய்த்தாரையூதிவரப் பெரியடமாடோலடிக்க
சங்கீதமேளம் சபையில்முழங்கிவர
ஐங்காதவழிதூரம் பேய்த்தாரையூதிவர
நாற்காதவழிதூரம் நாகசுரமூதிவர
முக்காதவழிதூரம் முரசுமுழங்கிவர
திந்திமித்தோமென்று சிறுபெண்களாடிவர
தத்திமித்தோமென்று தாளங்கள்போட்டுவர
கட்டியங்கவிபாடக் கட்டியங்களாற்பரிக்க

புலவர்புகழ்ந்துவர புபங்கள் தூவிவர
நட்டுவர்பாடிவர பாவையர்களாடிவர
ஆட்டாதகூத்துகளும் அரிச்சந்திரநாடகமும்
கேளிக்கைபார்த்துமல்லோ கிளிமொழியாள் வாராளே
தெத்துக்கடந்து தெருவீதிதான் கடந்து
கடையுங்கடந்தெருவு கருமாரவீதிவிட்டு
அங்காடிவீதிகளும் அரண்மனையுந்தான்கடந்து
மாடந்தெருகடந்து மண்டபமருகில்வந்து
பல்லக்கைவிட்டிறங்கி பார்மனையினுட்புகுந்து
முத்துமிதியடியைத் தொட்டுமிகநடந்து
மாணிக்கக்கிரீடங்கள் மகுடமுடிதுலங்க
தாதியர்கள்சூழ்ந்து தனிக்கவரிவீசிவர
மாதர்புடைசூழ மண்டபஞ்சென்றேறினாள்
ஓராம்படித்தளமாம் ஓலைப்பூமண்டபமாம்
இரண்டாம்படித்தளமா மிரத்தினகிரிமேடைகளாம்
மூன்றும்படி த்தளமாம் முத்துசெம்பொன்படிவாசல்
நான்காம்படித்தளமாம் நாகரத்னமண்டபமாம்
ஐந்தாம்படித்தளமாம் அரக்குமணிமேடைகளாம்
ஆறும்படித்தாளமாம் அழகானமேடைகளாம்
ஏழாம்படித்தளமாம் எழிலானமண்டபமாம்
எட்டாம்படித்தளமாம் எண்ணெய்க்கால்மண்டபமாம்
ஒன்பதாம்படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
பத்தாம்படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
ஆயிரங்கல்மண்டபத்தில் அல்லியரும்வந்தமர்ந்தாள்
பொன்னுமலைநாடாளும் போகலதிவந்தமர்ந்தாள்
பன்னிரண்டுமந்திரியும் படைத்தலைவர்வந்தமர்ந்தார்
மந்திரிபிரதானிகளும் மற்றுமுள்ளராசாக்கள்
முந்நூறுகோடி முடிமன்னர்வந்தமர்ந்தா[illegible]
நானூறுகோடி நகரத்தார்வந்தமர்ந்தார்
முடியோடுமுடிநெருங்கும் முருகுழலாளம்ப[illegible]த்தில்
சட்டையோடுசட்டை நெருக்குஞ்சபைதனிலே

அமரதரும்சமரதரும் ஆஸ்தானமகாதரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியர்மராட்டியரும்
நிறைந்தகொலுவாயிருக்கும் நேரிழையாளம்பலத்தில்
அப்பெரியசபைதனிலே அல்லியவள்கொலுவிருக்க
காணவருவாரும் கைகட்டி நிற்பாரும்
பார்க்கவருவாரும் பாண்டியபெருமானை
தூரத்துராசாககள் சுருளோலைகொண்டுவந்தார்
காதத்துராசாக்கள் கையோலைகொண்டுவந்தார்
செம்பொன்னும்பூட்டிவருந் தீவுகிளிப்பிள்ளைவரும்
இந்தவிதமா யிருக்கின்றவேளையிலே

புலந்திரன் விளையாடல்.

அந்தச்சமயத்தில் அழகுபுலந்திரனும்
சென்றுமறவானும் சினேகிதரைப்பிரியானும்
கோட்டைமறவானும் கூட்டாளிதரியானும்
தாயாரைச்சுற்றிவந்து தயிருக்கழுவானும்
பாதத்தைசுற்றிவந்து பாலுக்கழுவானும்
விளையாடிவீட்டில்வந்து வெண்ணெய்க்கழுவானும்
வாயைமுகந்தாக்கா முலைப்பால்கவுச்சடிக்கும்
வீதிவிலாசமதாய் விளையாடும்வேந்தனவன்
தங்கத்தேரோட்டித் தனஞ்செயனார்வீதியெல்லாம்
செம்பொன்தேரோட்டி திகழ்வேந்தர்வீதியெல்லாம்
மாணிக்கத்தேரோட்டி மன்னர்தெருவீதியெல்லாம்
முத்துத்தேரோட்டியே முடிமன்னர்வீதியெல்லாம்
வசந்தமணிமண்டபத்தில் வழியேவருகும்போது
பஞ்சவர்ணக்கிளிகளைக் கண்டந்தப்பாண்டியனும்
இப்படிக்கொரத்தேர் இயற்றவென்றுபுலந்திரனும்
தாயார்கொலுவிற்கு வந்தான்புலந்திரனும்
தண்டையும்சயச் சதங்கைகல்கலென
அரைஞாண்கிங்கிணியு மறையில்நிழல்காட்ட
கண்டசரமும் கனவயிரத்தாழ்வடமும்

மார்பில்பதக்கமின்ன வச்சிரக்கலாய்கள்மின்ன
வட்டமிட்டநெற்றியிலே வயிரமுடிதுலங்க
பட்டுதட்டிஓட்டியாணம் பசும்பொன்னுல்சமுதாடி
கட்டிப்புரண்டாடக் கட்டழகன்வாருனும்
சிறுகால்மிதியடியாம் சிங்காணிவில்லழகாம்
பக்கமிருபுறமும் பரிசுபிடித்துவர
கட்டமகன்பின்னுக கத்திசுழட்டிவர
ஈட்டிபிடித்தவர்கள் இருபுறமும்சூழ்ந்துவர
தாயார்கொலுசபையில் தார்வேந்தன்வந்து நின்ருன்
வந்துநின்றதன்மகனைக் கண்டந்தவாழ்மாரி
அப்பாவருக அழகானகண்மணியே
பிள்ளைகலிதீர்த்தவனே பெருமாளோவாருமென்ருள்
கண்மூன்றுடைய கைலாசநாதனே
அண்டத்துசந்திரனே அருகிருக்கும்பார்க்குடமே
சொக்கர்திருமாளிகைக்குத் தூண்டாமணிவிளக்கே
வைகைக்கரைதனக்கு மண்சுமந்தசொக்கரே
கப்பலுஞ்சோங்குங் கரைதுறையுமுள்ளவனே
சங்கின்றமுத்தே சல்லாபமுடையவனே
ஆயிரம்பாண்டியற்கு அழகானபேரனையோ
வாராய்மகனேயென்று வாரிமடியில்வைத்து
எந்திமடியில்வைத்தாள் இருகொங்கைபாலொழுக
சட்டையைநீக்கியே சரீரமெல்லாமுத்தமிட்டாள்
உச்சிமுகர்ந்தாள் உள்ளங்கால்முத்தமிட்டு
மைந்தன்புலந்திரனை மடிமேலேவைத்திருந்தாள்
என்னவேணும்மகனே எனக்கறியக்கூறுமென்ருள்

புலந்திரன் தாயாரைப் பவளத்தேர் கேட்டது.

எண்ணிப்புலந்திரனும் ஏங்கிவுரைக்கலுற்ருன்
தாயார்முகம்பார்த்து தார்வேந்தனே துரைப்பான்
உலகாதியாகையினுல் உன்மைந்தனுனபடி
மதுராபுரிதுரையாள் என்மைந்தனுனபடி

நானெறிவிளையாட வியலான தங்கரதம்
தங்கத்தேர்தந்தாரே தனஞ்செயனுரென்பாட்டன்
மாணிக்கத்தேர்தந்தாரே மன்னர்துரைராசாக்கள்
சித்திரவீதிகளும் சிறப்பானதோப்புகளும்
மட்டில்லாவீதியது மதுரைப்பெருந்தெருவில்
செம்பொன்தேர்தந்தாரே திகழ்வேந்தரென்பாட்டன்
வாழ்பாண்டிநாடும் மதுரையுஞ்சுற்றிவர
பாண்டியப்பெருமாளே பவளத்தேர்வேண்டுமம்மா
போசனம்வேண்டாமென்று பிணங்கினுனிந்திரனும்
மைந்தனதுவார்த்தையை கேட்டந்தவாழ்மாரி
கேளாக்கருமத்தை கேட்டாயேகண்மணியே
தங்கத்தேர்வேண்டிக் கேளாமல்கண்மணியே
முத்துத்தேர்வேண்டி முடிமன்னுகேளாமல்
மாணிக்கத்தேர்வேண்டி மைந்தனேகேளாமல்
என்னுடையராச்சியத்தில் இல்லையேபவளமது
இல்லாக்கருமத்தைக் கேட்டபுலந்திரனே
என்று-உற்று நினைந்தாளே ஒருகோடிபுத்திகளை
மைந்தனவன்கேட்டது மனதுதுயரமதாய்
அப்பெரியசபைதனிலே அனந்தமானராசர்முன்னே
ஆயிரம்பாண்டியர்கள் ஐயன்மார்சபைதனிலே
வேந்தர்சபைதனிலேமெல்லியருமேதுரைப்பாள்
என்னுடையகொலுவிலே யிருக்கின்றராசர்களே
மந்திரிபிரதானிகளே வாய்மொழியைகேளுமென்றாள்
பாலன்புலந்திரற்குப் பவளத்தேர்வேண்டுமாம்
அறிந்தாருரையுங்கள் அழகானராசர்களே
இவ்வார்த்தைகேட்டு ஏதுரைப்பார்மந்திரிகள்
இங்கேகிடையாது இயலானநற்பவளம்
வடக்கேவெகுதூரம் வன்வந்தீவாந்தரத்தில்
தீவாந்திரக்காட்டில் செம்பவளம்விளைகிறது
பன்னிருகாதவழி பவளம்விளைகிறது
அங்கேயிருக்குதம்மா அழகானநற்பவளம்

கொண்டுவருவாருண்டானால் கொப்பெனநீரனுப்பும்
என்றதுகேட்டு ஏதுரைப்பாள்வாழ்வாரி
என்னுடையசபைதனிலே இருக்கிறராசர்களே
தீவாந்திரத்துக்குப் போறதுரைகளுண்டோ
போரதுரைகளுண்டோ புரப்படுங்களிச்சபையில்
தாம்பூலம்வாங்குங்கள் சமர்த்துள்ளராசர்களே
பூநூல்தரித்ததொரு புண்ணியராசர்களே
கத்திகட்டும்ராஜாக்கள் கனத்ததுரைகளுண்டோ
மீசையுள்ளராசாக்கள் வெளிப்பட்டுவாங்களென்றாள்
நாடுதருவேன் ரா்ச்சியம்நான் தருவேன்
பூமிதருவேன் புதுபட்டங்கட்டிவைப்பேன்
என்னைப்போல்ராஜாவா யினிபட்டங்கட்டிவைப்பேன்
வல்லமையுண்டானால் வாங்குங்கள்தாம்பூலம்
என்றதுகேட்டவுடன் இயலானமந்திரிகள்
பட்டத்துமந்திரிகள் பார்வேந்தரோதுரைப்பார்
மதுரைபடைத்தலைவர் மந்திரிகளோரைப்பார்
அல்லிப்பெருமாளே ஆச்சியரே நீர்கேளும்
பிறந்தோம்மதுரையிலே வளர்ந்தோமதுரையிலே
மதுரைக்கப்பாலே வனமொன்றுநாமறியோம்
அறிந்துபொய்சொன்னாலே ஆக்கினைகள்செய்திடுவாய்
உன்-ஆக்கினைக்குத்தான்பயந்து ஆச்சியரேபோனாலும்
பவளம்விளைகின்ற பலமான அக்காட்டில்
ஆனைத்தலையை அரியுங்கதண்டுகளும்
சிங்கத்தலைபோ லிருக்குமாங்குளவி
குதிரைத்தலைபோலிருக்குமாங்கருங்குளவி
காதிலேகேட்டதுண்டு கண்ணினால்கண்டதில்லை
தீவுக்குப்போனவர்கள் திரும்பிவந்துசேர்ந்ததில்லை
என்றதுகேட்டிருப்போம் இனியொன்றுநாமறியோம்
எங்களால்முடியாது என்றார்கள்மந்திரிகள்
இன்னமொருவார்த்தை ஆச்சியரே நீர்கேளும்
அருச்சுனரைத்தானழைத்தால் ஆகுமிந்தக்காரியங்கள்

அவரைப்போல்சேவகர் ஆருமொருவரில்லை
சீமைசீமைதேசமெல்லாந் திரிந்துவந்ததேர்விசையன்
எந்தெந்தராசாக்கள் எதிர்ப்பாரொருவரில்லை
அவருக்குமிஞ்சின ராண்மையுள்ளாராருமில்லை
ராசாக்களானாலும் ராட்சதர்களானாலும்
எதிர்த்துவந்தபேர்களை இருதுண்டாய்போட்டிடுவார்
அவரையழைத்து நீ அநுகூலம்பண்ணாலே
மைந்தனுக்குப்பவளத்தேர் வந்துவிடுமப்போது
மற்றொருவர்தன்னாலே யாகாதுமாதாவே
என்றதுகேட்டாளாம் எறிபறந்துகண்சிவந்து
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கோபமானாள்
ஆறுதகோபமது ஆனந்தஅல்லியற்கு
கொல்லுங்குருவியைப்போல் கோபித்துகண்சிவந்து
மந்திரிகளாகையினால் மனம்பொறுத்தேனிப்போது
மற்றொருவரானாக்கால் வயிரமுடிகொய்திடுவேன்
தனிப்பட்டங்கட்டியே தனிஅரசு ஆண்டேனே
பெண்பட்டங்கட்டியே பூமியரசாண்டேனே
மாலூர்ந்தஎன்னை மாலையிட்டார்வாள்விசையன்
மன்னன்புலந்திரனார் பிறந்தபிறகாக
அப்போதுவாள்விசைய னர்ச்சுனனாரிங்கேவந்தார்
எங்குவந்தீரென்றுநான் கேட்டேனேயப்போது
அதுவேகுற்றமாய் ஆயாசப்பட்டவரும்
என்னைக்குப்பிட்டுபோனாரே குலவிஜயனருச்சுனரும்
மைந்தன்பிறந்து வயதுமேழுந்தாச்சு
இத்தனைநாள்வரைக்கும் இங்கேவந்தாராருமில்லை
வாராதஅர்ச்சுனரை வணங்குவேனோமந்திரியே
நாடாளும்ராஜாத்தி நானோவணங்குவது
என்றதுதான்கேட்டு எதுரைப்பார்மந்திரிகள்
புருஷனுக்கும்தேவியற்கும் பெரும்பகைகளுண்டோ
அரசிகுறைவுமில்லை ஆளன்பகையுமில்லை
வரிசையுடன்வணங்கி வரவழைத்தீராமானால்

கணவனுக்குவணங்கினல் கனமோசமொன்றுமில்லை
இதன்றப்பழுதுமில்லை என்றார்கள்மந்திரிகள்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருமேதுரைப்பாள்
ஐந்துவருஷமாய் அவரைமறந்திருந்தேன்
மறந்திருந்த அர்ச்சுனரை வரவழைத்தேனானலே
மோகத்தினலே வரவழைத்தேனென்பார்கள்
ஊரிலேயுள்ளவர்கள் உலகாண்டராசாக்கள்
நாட்டிலேயுள்ளவர்கள் நகைப்பார்களிப்போது
கண்டார்சிரிப்பார்கள் கலியுகத்தாரேசுவார்கள்
பார்த்தார்நகைப்பார்கள் பார்லோகமேசுவார்கள்
எப்படியழைப்பிப்பேன் இயலான அர்ச்சுனரை
என்றதுகேட்டஉடன் மந்திரிகளேதுசொல்வார்
வந்தார்பெருமை யுண்டானல்தார்குழலே
பெற்றோர்பெருமையுண்டானல்மாதாவே
வளத்தார்பெருமை யுண்டானல்தாயாரே
கொண்டார்பெருமை வேண்டாமோகொம்பனையே
கணவன்பெருமை வேண்டாமோகாரிழையே
ஆளன்பெருமையது வேண்டாமோ ஆரணங்கே
ஆனைகுதிரைகளை அரண்மனையில்கட்டிவைத்து
குதிரைகளைக்கட்டியே கோடிருந்துவாழ்ந்தாலும்
ஆளனிருந்து ஆளாதரசுமுண்டோ
புருஷனுமில்லாப் பெருமைகள்செய்வாரோ
காவலர்கொலுவிலே கைம்பெண்டிரென்பார்கள்
மன்னவர்கொலுவிலே வாழப்பெண்டென்பார்கள்
கொண்டார்பெருமை வேண்டாமோபொற்கொடியே
புருஷன்பெருமை வேண்டாமோபொற்கொடியே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
விண்பரவர்ச்சுனர்க்கு விண்ணப்பஞ்செய்வதில்லை
மாராசர்தருமருக்கு விண்ணப்பஞ்செய்வேனன்
ஆரடாதூதுவரே அழையுங்கள்கணக்கர்களை
நாட்டுக்கணக்கெழுது நலமானமந்திரிகளை

சீமைக்கணக்குகள் தெரிந்தெழுதும்மந்திரிகள்
கோட்டைக்கணக்குகள் தெரிந்தெழுதுமந்திரிகள்
ஊர்கணக்கப்பிள்ளைகளை ஓடியழையுமென்றான்
அவ்வார்த்தைகேட்டுமந்த அலங்காரத்தூதுவர்கள்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தூதுவர்கள்
கருணீகரானவரே கணக்கெழுதும்மந்திரிகள்
அல்லிபெருமாளும் அழைத்துவரச்சொன்னாளே
அவ்வார்த்தைகேட்டவுட னன்பாகக்கணக்கரெல்லாம்
கடுகப்பயந்தார்கள் கணக்குச்சுமையெடுத்தார்
எச்சிலெழுத்தாணி இடதுகையில்சுருளோலை
வண்ணக்குறுத்தோலை வரிசையுடன்கைபிடித்து
உச்சுகொண்டைபோட்டார்கள் உதறிநடந்தார்கள்
சிங்காதனத்துக்கு முன்னாகவந்துநின்று
அல்லிப்பெருமாட்கு அடிபணிந்து தெண்டனிட்டார்
வந்தகணக்கருக்கு வட்டமணைபோட்டார்கள்
மணிதடுக்குப்போட்டார்கள் வந்திருங்களப்பாவென்று
தர்மாபுரமாளும் தர்மலிங்காயருக்கும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அத்தைமார்குந்தியற்கும்
வண்ணமிட்டஓலையிலே வக்கணையாயெழுதவேணும்
என்னவென்றுஓலையிலே எழுதுகிறீரானாலே
சோதிமதியணிந்த சொக்கர்திருவருளால்
ஸ்ரீரங்கநாதர் திருமால்கிருபையினால்
மதுரைமீனாட்சியம்மை மாதாகிருபையினால்
அல்லியின்மேலே ஆரணங்குபெண்பிறந்தேன்
பெண்ணாய்ப்பிறந்து பெருமாள்முடிசூட்டி
அன்னம்போல்மண்ணாண்டேன் ஐம்பத்தாறுகாதவழி
தர்மர்திருவுளத்தால் தரணிபதியாண்டிருந்தேன்
இன்னாள்வரைக்கும் ஏதுகுறையில்லாமல்
வைபகத்தையாண்டிருந்தேன் மனக்குறையில்லாமல்
உங்கள்-செல்வக்குழந்தையது தேவேந்திரன் பேரன்
ஐந்துபிராயமையா அழகாய்வளர்ந்தபிள்ளை

செண்டடித்துபந்தடித்து தெருவில்விளையாடி
பொன்னின்தேரோட்டியே போதவிளையாடி
தங்கத்தேரோட்டியே தனித்துவிளையாடி
வெம்பலாய்க்காயுது விழுந்துபடுக்கையிட்டான்
பல்லைக்கடிக்கிறதும் பற்றிவாய்பினத்துறதும்
தலையைப்புரட்டுறதுந் தாகமெடுக்கிறதும்
நாக்கைவறட்டுறதும் நயனங்கள்சோர்கிறதும்
பார்த்தபரிசாரி பண்டிதர் பணிக்கர்களும்
தோஷித்துபோச்சுதென்று சொன்னார்களெந்தனுக்கு
கைதப்பிக்காணுதென்று கற்பித்தாரென்னோடே
என்னமோஏதோவென்றிருக்குது என்மனதில்
பொய்சொன்னேனென்று எண்ணாதீர்புண்ணியரே
ஓலைகண்ட நாழிகைக்கு வாவேணுமுத்தமனே
கண்ணாலேபார்க்குகைக்குக் கடுகனவேவந்திடுங்கள்
என்றதுசொல்லியே எழுதுங்களோலையென்றாள்
சீர்கணக்கப்பிள்ளைகளும் சொல்வசனந்தான்கேட்டு
சேமக்குறுத்தோலை சிக்கனவேதான்வாரி
அல்லியம்மாள்சொற்படிக்கே அவ்வோலைதானெழுதி
ஓலைச்சுருள்மடித்து செந்திரிகைதான்போட்டார்
சிக்கநல்லமுத்திரை திருவகுப்பின்கீழ்போட்டார்
அவ்வோலைதானெடுத்து ஆனந்தவாழ்மாரி
காற்றிலதிகமுள்ள கடுந்தூதனையழைத்து
நாழிகைக்குள்ளாக நடந்துகொடுமென்றாள்
தருமருக்குகொண்டுபோய் கொடுமென்றாள்தையலரும்
மலையோடேதலைகொக்கு மன்னனெழுந்திருந்து
ஓலைச்சுருள்வாங்கி வோங்கிநடக்கலுற்றான்
மதுரைத்தெருகடந்து வைகைக்கரைகடந்து
காடுகடந்து கரியமலைதான்கடந்து
சில்லென்றுபூத்த செடியும்வனங்கடந்து
புல்லென்றுபூத்த புலியின்வனங்கடந்து
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனங்கடந்து.

பார்திரிமுல்லை பருத்தவனங்கடந்து
தருமாபுரமருகில் தான்வாரான் தூதுவனும்
பத்தாம்படியில் பவளக்கால்மண்டபத்தில்
தருமருடகொலுவுக்குத் தான்வந்துநின்றவன்
ஓலைச்சுருளைவைத்து உத்தமனுந்தெண்டனிட்டான்
ஆர்பணிதூதா நீ அறியவுரையுமென்ருன்
மதுரைபுரியாளும் வாழ்வரசியல்லியம்மாள்
அவள்பணியென்றுசொல்லி அடிவணங்கிதெண்டனிட
ஓலைசுருள்விரித்தார் உத்தமனார் தர்மலிங்கம்
அதிலிருக்குமர்மமெல்லாந் தருமலிங்கந்தானறிந்தார்
நம்மைமதித்தாளே நாடாளும்ராசாத்தி
ஐயோமகனேயென்று அழுதுபுலம்புகிருர்
சிவசிவவென்றுசொல்லி சேர்ந்துமேதான்விழுந்தார்
தம்பிவயற்றில் பிறந்ததனஞ்செயனே
மதுரைநகராளுகைக்கு மைந்தனென்றுநானிருந்தேன்
தீர்ந்ததோஉன்னுசை சிவலோகம்போராயோ
சொக்கரிடபாதஞ் சேருகைக்குநாளாச்சோ
ஐக்கியமாய்ப்போகவே ஆச்சுதோஉன்சீவன்
பொன்னுமணியே புலந்திராசாவே
அல்லிமகனே அழகுபுலந்திரனே
கட்டிமகனே கயிலாயம்போருயோ
பொன்னுங்குடமேநீ புஷ்பகமேபோராயோ
கோவென்றசத்தமுடன் குமுரிப்புலம்பலுற்ருர்
வெற்றிமதயானை வீமன்வன்கேட்டு
தானுமழுதானே தருமருடனுகை
நகுலசகாதேவ ராசாபுலம்புலுற்ருர்
மந்தாரக்குந்தியரும் மாதாவும்புலம்பலுற்ருள்
சங்கோதியாள்கூடத்தானும்புலம்பலுற்ருள்
அந்தநகரும்நாடும் அரசுந்தளும்பினது
தக்கப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
வில்லாளிபார்த்தன் விசையனெங்கேசென்ருனே

அர்ச்சுனரைகண்டுநான் ஐந்தாறுநாளாச்சே
எங்கேயிருப்பிடமோ ஒன்றுமறியோமே
ஆரடா தூதுவரே அழையுங்கள்தோட்டிதன்னை
தமுக்கடிக்குந்தோட்டியைத் தானழைத்துவாருமென்று
என்றுசொல்லத்தான்கேட்டு எழுந்தோடிதூதுவர்கள்
பறையறையும்சாம்புவனை பார்த்தழைத்துவாருமென்று
தருமராண்டைவந்தவனும் சாஷ்டாங்கதெண்டனிட்டு
என்னையழைத்தது ஏதுகருமமென்றான்
அப்போதுதருமலிங்கம் ஆணழகரேதுசொல்வார்
பாராளுந்தருமருக்கு பாக்கதுசொக்கிற்றென்று
மெத்தவேபல்லிகை காணுதுவேந்தனுக்கு
விஜயப்பெருமானை வைத்திருந்தால்விட்டிடுங்கள்
என்று-தருமாபுர மொல்லாம்தமுக்கடித்துவாருமென
வீதிபதினாயிரம் வீரமுரசடியுமென்றார்
இவ்வார்த்தைகேட்டவனும் எழுந்தாரேசாம்புவனும்
ஆனையேறிமாலைசூடி அடித்தான்பறையோசை
தருமாபுரவீதியெல்லாந் தமுக்கடித்துவாரானும்
என்னசொல்லித்தமுக்கடித்தான் இயலானசாம்புவன்
பாராளுந்தருமருக்குப் பாக்கதுசொக்கிற்றென்று
களைதாங்கிப்போச்சுது கட்டழகர்தருமருக்கு
பேச்சிமூச்சில்லாமல் பிணம்போல்விழுந்துவிட்டார்
அனைவோருமங்கே அழுதுபுலம்புகிறார்
அர்ச்சுனராசாவை யார்வைத்திருந்தாலும்
கண்டவர்விட்டிடுங்கள் கடிகியனுப்பிடுங்கள்
என்றுமடித்தானே இயலானதமுக்கோசை
சொல்லியடித்தானே தேர்விஜயன்தான்கேட்க
தேவதாசிதெருவுகளுந் தெருவுபதினாயிரமும்
அத்தெருவுபெண்களெல்லாம் அனைவொருமேகூடி
காளையருச்சுனரைக் கண்ணாலேகண்டதில்லை
எங்களிட வீதியிலே எழில்விசையன்வாரதில்லை
மாதுசுபத்திரையாள் மச்சினியாள்தன்வீடு

அங்கேயிருந்பார்காண் அர்ச்சுனவீரியனை
அவர்சத்துருவேஷியன்று சாமத்திற்கண்டதுண்டு
உத்தமனேயென்றுசொல்லி ஓமத்தில் கண்டதுண்டு
ஓமப்புகையிலேதான் உடனிருந்தபாவமுண்டு
தாகத்துத்தண்ணீருக்கு கையேந்திநின்றதுண்டு
அம்மிமிதித்ததுண்டு அருந்ததிபார்த்ததுண்டு
ஆளனிவனென்று அனைவோருமசொல்லுவார்கள்
இவ்விடம்வாராரோ எழில்விசயனருச்சுனரும்
இடைச்சியுடமாளிகையில் இருப்பார்வெறுக்காமல்
அவன்அந்தெருகடந்து அப்பாலேபோகலுற்ருன்
சுபத்திரையாள்வீதியிலே தமுக்கோசைமுழக்கிவைத்து
தருமருக்குவந்தொரு தாழ்வெல்லாஞ்சொல்லலுற்ருன்
அடித்ததமுக்கோசை அருச்சுனர்கேட்டுவிட்டார்
தேர்விசையன்கோமானுந் திடுக்கிட்டுத்தானெழுந்து
பஞ்சணையைவிட்டுமவன் பதறியெழுந்திருந்தான்
சுபத்திரையாள்கண்ணை விழித்தவளுமேதுசொல்வாள்
ஆர்வாசல்செல்ல எழுந்தீர்காணழகா
எவள்வாசல்செல்ல எழுந்தீர்காணெழில்விசையா
தீயில்பிறந்தவளை சிந்தையில் நினைத்தீரோ
மின்னொளியாள்வாசலுக் கேகநினைத்தீரோ
நாககன்னிவாசலுக்குப் போகநினைத்தீரோ
மதுரைதுரை அல்லியரை மனதில் நினைத்தீரோ
மற்றொருவர்சிந்தையில் நினைத்தீரோமன்னவரே
ஆர்மேலாசைகொண்டு ஆணழகா நீயெழுந்தாய்
என்றதுகேட்டவுடன் எழில்விசயனேதுசொல்வான்
அல்லக்காண்பெண்ணரசே ஆரணங்கு நீகேளாய்
பாரரசன்தருமருக்கு பாக்கதுசொக்கினதாம்
மெத்தவும்பல்லிகை தோணுதாம்வேந்தருக்கு
அதியிளைப்பாயிருக்குது தன்மமுடிமன்னருக்கு
முகத்தில்விழிக்கவென்னை மொய்குழலேதேடுகிருர்
அது—என்னகருமமென்று அறிந்தோடி நான்வாரேன்

உலகளந்தான்தங்கையவள் சுபத்திரையதுசொல்வாள்
தருமராதுவாசலல்லால் தையல்மார்வீடுசென்றால்
மற்றொருத்திவீடு நீ சென்றாலேவாள்விசையா
நீ-உண்ணும்போதல்லா லுண்ணேன்காண்பாலமுது
திருந்தியேபோதல்லால் தின்னேனேவெற்றிலையும்
என்றதுதான்கேட்டு எழில்விசையனேதுசொல்வான்
உன்னைத்தனியேவிட்டு உலகளந்தான்தங்கையரே
இன்னொருத்திவாசலுக்குப் போறேனென்றெண்ணாதே
அண்ணனைத்தான்பார்த்து அரைக்ஷணத்தில்வாரேன்
பாலடிசிலுண்டு பாங்காயமுதுசெய்து
பாயசங்களுண்டு மகிழ்ந்திடுங்காண்மங்கையரே
வாடாதே நீயிருங்காண் மாதரிளங்கொடியே
போகச்சிலவருளும் போய்வாரேன்பெண்ணேயென
தளராதேதேவைதர வேண்டியதுதையலரே
தாழாமே நீயிருந்து சற்றேசெலவருளும்
மாதுசுபத்திரையாள் வாய்திறந்தேதுரைப்பாள்
ஆகிலும்மைநான் அடையாளஞ்செய்திடுவேன்
அடையாளம்குறையாமல் அர்ச்சுனரேவாருமென்றாள்
வைத்த அடையாளம் மாறாமல்வாருமென்றாள்
சந்தனமுங்குங்குமமுஞ் சவ்வாதுதான்குழைத்து
அர்ச்சுனன்மார்மேலே அள்ளியறைந்தாளே
சந்தனத்தாலே சதுராய்ப்படமெழுதி
குங்குமத்தாலே குறிப்பாய்ப்படமெழுதி
முத்திரைமோதிரத்தால் முன்மார்பில்குறிவைத்தாள்
மாதரிடவாசலுக்கு மயிலினையேபோனக்கால்
உன்-குறிவந்துகூப்பிடுமோ கொம்பேருடையாளே
உன்-ஆணைவந்துகூப்பிடுமோ ஆனந்தவாழ்மாரி
இருமிருமென்றுசொல்லி எழில்விசையன்போய்நடக்க
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூசல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூசல்லடமாம்
குத்திடுங்கால்களுக்குக் குரிஞ்சிப்பூசல்லடமாம்

ஆக்கியிடும்கால்களுக்கு துத்திப்பூசல்லடமாம்
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூசுங்குவிட்டு
சிங்காணிவில்லெடுத்து தேர்விசையன்போய்நடந்தார்
பொன்னிழைத்தபட்டாடை பூமியில்புரண்டுவர
பூங்காவனம்புகுந்து புட்பமலரெடுத்து
தருமரைபூசைபண்ணச் சம்பங்கிப்பூபறித்து
வாய்வேகமாகவே வந்துவிட்டான் அர்ச்சுனனும்
வீதியும்வீதி தெருவுமவர்தாண்டி
தருமரிருக்கின்ற சாதிலிங்கமேடையிலே
சாந்தணிந்தமேடையிலே தருமரைத்தான்பார்த்து
தருமரிடபாதத்தில் சாஷ்டாங்கதெண்டனிட்டான்
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்போட்டான்
அண்ணாசரணமென்றடியணிந்துதெண்டனிட்டான்
கைகட்டிநின்றனே கட்டழகன் அர்ச்சுனரும்
வந்துபணிந்தவனை வாழ்த்தியெடுத்தணைத்து
வாழ்வாய்வளர்ந்திடுவாய் வையகத்தையாண்டிடுவாய்
நிற்பாய்நிலைதரிப்பாய் நிலையரசாண்டிடுவாய்
கற்பதித்ததூண்போலே கலங்காவரசாள்வாய்
பதினறுகலையுடைய பார்த்திபா நீகேளாய்
மதுராபுரித்துரையாள் வாழ்வரசியல்லிமகன்
பார்த்திபாஉன்மகன்தான் பாலன்புலந்திரனும்
செண்டடித்துப்பந்தடித்துத் தெருவில்விளையாடி
கோட்டிவிளையாடி வீட்டில்வந்தபாலகன்தான்
கனைத்தாற்போல்விழுந்தானும் காளைபுலந்திரனும்
காச்சலாய்காய்கிறதும் கண்ணைச்சொருகிறதும்
வெம்பலாய்க்காய்கிறதும் மெத்தவாய்பினத்துரதும்
நயனங்கள்பஞ்சடைந்து நாக்கைவரட்டுகிறதும்
தோஷித்துப்போனதாய் தோணுதாமைந்தனுக்கு
பண்டிதர்பணிக்கர்களும் பார்த்தவயித்தியரும்
கைவிட்டுப்போனாராங் கட்டழகாஉன்மகனை
முகத்தில்விழிக்கவென்று முடிபுனைந்தராஜாத்தி

ஓலையெழுதியே வரவிட்டாருத்தமனே
சேதிசமாச்சாரம் சுருளோலைவந்திருக்க
போகாதிருந்தாக்கால் பிழைவந்துநேர்ந்துவிடும்
ஆகையினால்தம்பியரே அருச்சுனரேபோய்வாரும்
அச்சுதானந்தரை ஐயரைக்கூட்டிப்போம்
ஆங்காரக்கன்னியென்று அறிவோமவள்குணத்தை
மண்ணாளும்ராஜாத்தி வலக்காரமுள்ளவள்காண்
அவள்-வார்த்தைக்குவார்த்தை மறுவார்த்தைபேசாதே
மைந்தன்புலந்திரற்கு பல்லிக்கைதீரளவும்
உடம்புதெளிந்து உலாவித்திரியளவும்
வாழ்மதுரைராச்சியத்தில் மன்னுதனியிருந்து
மைந்தன்புலந்திரனை மன்னுவரவளைத்து
குமாரனைகூட்டிவந்து குருநாடுசேருமென்றார்
என்வார்த்தைதள்ளாமல் இட்சணமேநடவுமென்றார்
போய்வாருமென்றுசொலி புத்திமிகத்தானுரைத்தார்
அப்போதருச்சுனனும் அப்படியேநல்லதென்று
குந்தியம்மாள் தன்பாதங்கொப்பெனவேதெண்டனிட்டு
தாயாருடபாதஞ் சாஷ்டாங்கதெண்டனிட்டான்
மதுரைக்குபோய்வாரேன் மாதாவேசெலவருளும்
போய்வாருமருச்சுனரே என்றாளேபொற்கொடியும்
வெற்றிமவயானை வீமாசெலவருளும்
அத்தண்டபேரும் அனைவோருஞ்செலவருள
முகத்திலேசீலையிட்டு முடிமன்னர்தானழுதார்
ஏதுக்கழுகுறாய் ஈஸ்வரன் துணையிருப்பான்
மைந்தன்புலந்திரற்கு வாட்டமொருக்காலுமில்லை
மாயன் துணையிருப்பார் வாள்விஜயாபோய்வாரும்
சொக்கர் துணையிருப்பார் சுந்தரரேபோய்வாரும்
என்றதுகேட்டு எழுந்தானருச்சனனும்
அச்சுதானந்த ரையனுந்தானுமாய்
தோழனுந்தானுமாய் துரிதமாய்வந்தார்கள்
கோட்டைகடந்து கொத்தளமுந்தான்கடந்து

தர்மாபுரங்கடந்து தானடந்தானருச்சுனனும்
காடுகடத்து கரியமலைதான் கடந்து
ஆறுகடந்து அரியசுனைகடந்து
சில்லென்றகாடுஞ் செடியும்வனங்கடந்து
வைகக்கரைகடந்து மதுராபுரிதேடி
தோழனுந்தானுமாய் துரிதமாய்நடந்தார்கள்
மதுரையிலுள்ளவரைக் கண்டானேவாள்விசயன்
அச்சுததனந்த ரையர்முகம்நோக்கி
மைந்தன்புலந்திரற்கு வாட்டங்களுண்டானல்
கம்மாதோநாடு கலங்காதோராச்சியங்கள்
என்னைக்கண்டபோதே எல்லாம்புலம்பாதோ
மைந்தன்புலந்திரற்கு வாட்டங்களொன்றுமில்லை
எத்தைநினைத்தாளோ நாடாளும்ராசாத்தி
முன்னதுபூசல் முதலைநினைத்தாளோ
ஆங்காரக்கன்னியென்று அறிவோம்அவள்குணத்தை
அச்சுதானந்த ரையரும்கூறிடுவார்
அவள்-வார்த்தைக்குவார்த்தை மறுவார்த்தைபேசாதே
சொல்லுக்குச்சொல்லு சொல்தள்ளிப்பேசாதே
நீர்-முன்னேநடவுமென்று முகப்பணியிலுட்கார்ந்தார்
வாள்விஜயன்கோமானும் வந்தானரண்மனைக்கு
அங்கிருக்கும்தூதுவர்கள் அர்ச்சுனரைக்கைதொழவும்
உங்கள்துரையெங்கேயென்றார் உலகாளும்ராசாவும்
ஆயிரங்கால்மண்டபத்தில் அங்கேயிருக்கிறார்கள்
என்றதுகேட்டு எழில்விஜயன்தானடந்தான்
மாணிக்கமண்டமத்தில் வாள்விஜயன்போய்நடந்தான்
கொம்பனைக்குமுன்வந்து கும்பிட்டான்வாள்விஜயன்
கையெடுத்துக்கும்பிட்டான் காளையருச்சுனனும்
வணங்கினஅர்ச்சுனனை வாவென்றழைக்காமல்
ஏனென்றுகேளாமல் ஏகமுகம்பார்க்காமல்
நின்றேயருச்சுனனும் நெடுங்கால்கடுத்துவிட
இருகால்கடுத்துவிட இருநாழிநின்றானும்

ஆனாலழகுமன்னன் அர்ச்சுனனுமேதுசொல்வார்
ஒரு-ஆளடிமையென்றாலும் அரசரதுநாயகமே
வந்தவாறேதென்று வினவியேகேளாமல்
எங்குவந்தீரண்ணாவே ராஜகுலம்பெண்பெருமாள்
என்றதுதான்கேட்டு இளங்கொடியாளால்லியரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
மன்னவரருச்சனன்மேல் மர்மந்தொடுப்போம்என்று
மைந்தனுக்குபவளத்தேர் வாராதேயென்றுசொல்லி
அண்ணாந்துபார்த்தாளே அர்ச்சுனராசாவை
கண்டாளருச்சுனரை கதையுள்ளமன்னவரை
முகத்திலேவிழிக்கவென்று விதியோதாமென்றனுக்கு
உன்னைக்-கண்ணாலேகாண்க் கிடைத்ததேயெந்தனுக்கு
தம்பிபுலந்திரனும் தங்கத்தேர்கேளாமல்
மாணிக்கத்தேர்வேண்டிக் கேளாமல்மன்னவரே
பாண்டிவளநாட்டானும் பவளத்தேர்கேட்டாலும்
உன்னைக்-கண்ணாலேகாணக் கிடைத்ததேயெந்தனுக்கு
கண்ணானமைந்தனுக்கு திருஷ்டிகழித்துவிட்டேன்
என்றதுகேட்டாளே எழில்விஜயளருச்சுனனை
வில்லாளிபார்த்தவன் விஜயனுமேதுசொல்வான்
பாண்டிவளநாட்டுக்குப் பவளதேர்வேண்டுமென்றால்
ஒரு,ஆளோடுசொல்லி அனுப்பிவைத்தீரானாலே
பவளத்தேர்செப்பனிட்டு அனுப்புவேன்பத்தினியே
மைந்தன்புலந்திரற்குவாட்டங்கள்வந்ததென்று
தோஷித்துப்போச்சென்று சொல்லியனுப்புவாயோ
தருமருந்தான்கேட்டு தயங்கியழுதாரே
வீமரதைக்கேட்டு மெத்தவழுதாரே
ஈரல்புகுந்ததொரு இரட்டையர்கள்தானழுதார்
மந்தாரக்குந்தியருமாதுபுலம்பிவிட்டாள்
தீயிற்பிறந்தவளுந் திகைத்துப்புலம்பிவிட்டாள்
அன்னகரும்நாடும் அரசும்தளரும்பிற்று
தர்மாபுரத்திலுள்ளோர் தவித்துப்புலம்பலுற்றார்

இப்படிக்குலை யெழுதுவதுளுயமுண்டோ
பூமியரசாண்டோர்கள் பொய்யோலையெழுதலாமோ
அவ்வார்த்தைகேட்டுமவள் அல்லியருமேதுரைப்பாள
பாருளும்வேந்தனவன் பவளதேர்வேண்டுமென்று
உண்ணேன் குளியே னுறங்கேனென்றுனவனும்
சாவேன்மடிவேனெறுன் சமர்த்துள்ளபுத்திரன்
பாலமுதமுண்ணேனென்றுன்பள்ளிக்குப்போகேனென
மெய்யாகச்சொல்லி யெழுதினுல்ஓலையிலே
மாலைமுடியானே வருவதொருக்காலுமில்லை
சித்தசன்தங்கையவள் சிற்றிடைச்சிசுபத்திரையாள்
சோரவளநங்கை சுபத்திரைநாயகியாள்
அவள்மயக்கமெத்தலவோ ஆணழகாவுந்தனுக்கு
அவளுடையமோசமதாய் அல்லும்பகலுமாயிருப்பாய்
தேவடியாள்வீதியெல்லாந் திட்டுண்டுதிரிகிறவர்
நீர்-வருவீரோவாரீரோ வென்றெண்ணிமன்னவனே
கூத்திமேலாசையுண்டோகுழந்தைமேலாசையுண்டோ
என்னமனதறிய எழுதினேனோலையென்றுள்
மெய்யென்றுசொல்லியே வந்தீரோவாள்விசையா
பவளத்தேர்கொண்டுவந்து தாரீரோவாள்விசையா
ஆமென்றுல்சொல்லுமிப்போ தல்லவென்றுல்போமே
மதுராபுரியாளே மகுடத்தரசியரே
தீவாந்திரத்திற்போய் தேடியேகொண்டுவாரேன்
எங்கேயிருந்தாலும் இட்சணமேகொண்டுவாரேன்
பாங்கானபுத்திரற்குப் பவளத்தேர்கொண்டுவாரேன்
எத்தனை நாளையிலே எனக்குத்தேர்கொண்டுவருவீர்
பொய்வசனஞ்சொல்லாமல் போர்விசையரேயுரையும்
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்றுன்
ஒன்பதுநாளையிலே உனக்குத்தேர்கொண்வாரேன்
பவளம்வெட்டபோனிடத்தில் பார்த்திபா அர்ச்சுனரே
தேர்வேண்டிப்போனிடத்தில் தேர்விசையார்ச்சுனரே
கானகத்தில்கன்னியரைக் கண்டுமயங்காதே

பல்லைத்திறந்திடுவாய் பரியாசஞ்செய்திடுவாய்
மர்மங்களாகவே யிருப்பீரே மன்னவரே
அப்படியாகவே யிருந்ததேயுண்டானால்
எமலோகஞ்சென்றாலும் இட்டுவந்துசங்கரிப்பேன்
பாதாளம்போனாலும் கொண்டுவந்துசங்கரிப்பேன்
வாள்விசயனருச்சுனனும் மறுக்காமலேதுரைப்பார்
ஐந்துபிராயம் அழகுள்ளபுலந்தினார்
மைந்தர்மேலாணையது பச்சுரதங்கொண்டுவாரேன்
மைந்தர்மேலாணையிட மனது துணிந்ததோதான்
பிள்ளையின்மேலாணையிடப் போதமனம்வந்துதோ
ஏதாய்துணிந்தது என்மகன்மேலாணையிட
இருவருமாகவே யிருந்தங்கேபேசயிலே
அச்சுதானந்த ரையரும்வந்துவிட்டார்
குருக்கள்மகனாரைக் கொப்பனவேதான்பார்த்து
வாருமென்றுதானழைத்தாள் மகுடத்துரையல்லியரும்
வைகைவளநாடறிந்து வந்தீரோமன்னவனே
வாழுமதுரைதேடி வழியுந்தெரிந்ததோ
மதுரைக்குஓர்பயணம் வாறாதிருந்ததென்ன
என்னைசிறைவைத்தாரே எழில்விசைகோமானும்
என்னைமறந்து யிருந்தானெழில்விசையர்
அவர்தான்வருகாமல் போனாலுமச்சுதரே
நீர்தானொருபயணம் இங்குவரலாகாதோ
வாள்விசையனில்லாத வரவுஞ்செலவுமில்லை
நல்விசையனில்லாமல் நான்தான்வருவேனோ
ஆனால்கேளையாவே அச்சுதானந்தரே
பிள்ளைபுலந்திரனார் பவளத்தேர்கேட்டதினால்
ஆகையினாலே யழைபித்தேனருச்சுனரை
மாலையிட்ட நான்முதலாய் வணங்காதகன்னிகைநான்
மைந்தனுக்காகவே வணங்கினேனருச்சுனரை
பாண்டிவளநாட்டுக்குப் பவளத்தேர்செப்பனிட்டு
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று

மைந்தன்மேலாணையென்று மன்னவருமவாரூர்காண்
அண்ணாவே நீரும் அறிந்திடுமிதனையென்றாள்
அம்மா எந்தெந்த ஆணை மறந்தாலும்வாள்விசையன்
மைந்தர்மேலாணை மறப்பானோவாள்விசையன்
எப்படியுங்கொண்டு வருவானெழில்விசயன்
இப்படியாகவே யிருக்கின்றவேளையிலே

பாண்டியர்கள் அர்ச்சுனனைக்காணவருதல்.

அர்ச்சுனர்வந்தசேதி அறிந்தந்தப்பாண்டியரும்
மருமகனைக்காணவென்று வாரார்கள்பாண்டியர்கள்
மகமேருபர்வதம்போல் மகிழ்ச்சியுடன்வாரார்கள்
பொன்னிமலைநாடாளும் போர்எழுதியார்கூட
அல்லியம்மாள்தன்னருகே அனைவோரும்வந்தமர்ந்து
மகுடத்துரைச்சியாளும் வணங்கினாளப்போது
வாருமிருங்களென்று மரியாதைபண்ணினாள்
அருச்சுனரைத்தான்பார்த்து ஆயிரம்பாண்டியரும்
மதுரைவரவுக்கு வழியுந்தெரிந்ததோ
வகைவளநாடு வழியுந்தெரிந்ததோ
மதுரைக்கொருபயணம் வாராதிருந்ததென்ன
வாராமல் நீயிருக்க வைராங்கியங்களுண்டோ
அத்திமரம்பூத்ததுபோல் அதிசயமாய்த்தோணுகுது
பிறவாமுடிதயுத்த பெண்பெருமாளேதுசொல்வாள்
பாண்டியவளநாட்டில் பவளத்தேர்கேட்டதினால்
ஆகையிலே அழைப்பித்தேனனிவரை
சீக்கிரமாய்த்தீவுக்கு போங்காணுந்தேர்விசையா
ஆறுயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
வந்தகாலாரவில்லை மாதுகுலப்பெண்ணரசே
இன்றொருநாள்போக்கி இனியொருநாளாகாதோ
பசியோடிருக்கிறார் பாலமிர்தஞ்செய்யுமென்றார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் தான்கேட்டு
பாண்டிவளநாட்டாருக்குப் பவளதேர்வந்தபின்பு

விருந்துசமைக்கிறதும் வெகுமானம்பண்ணுறதும்
சீக்கிரமாய்த்தீவுக்குச் சென்றுநடவுமென்றாள்
காண்டாவனமெரித்த காளையவன்தான்கேட்டு
மைந்தன்புலந்திரற்கு வாட்டமுண்டாச்சுது
மைந்தா துவுத்தாரம் வந்தவுடனேநான்
சிவபூசைபண்ணவில்லை சலபானஞ்செய்யவில்லை
நான்-காலால்நடவாமல் காற்றுப்பறந்துவந்தேன்
இன்றுபகலுக்கு இருந்துநான்போறேனென்றான்

அர்ச்சுனனுக்குவிருந்திடல்.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
தனக்குத்தொழில்செய்யுந் தாதிமுகம்நோக்கி
அடிசில்சமையுமென்றாள் ஆனந்தவாழ்மாரி
அப்போது தாதியர்கள் ஆரணங்குதானெழுந்து
பத்துவிதக்கரியும் பதினெட்டுப்பச்சடியும்
நல்லபொறிக்கறியும் ராசாக்கள்போசனமும்
பச்சென்றகாயும் பவளம்போல்நல்கரியும்
போதச்சமைத்தார்கள் பொற்கொடிமாதரெல்லாம்
அடிசில்சமைத்ததென்று அல்லியற்குதெண்டனிட்டு
அமுதுண்ணுஞ்சாலையிலே அல்லியருமருச்சுனனும்
போஜனங்களுண்டு புண்ணியருங்கையலம்பி
சிங்காதனத்திலே சேரவேவந்தார்கள்
அப்போது அல்லியரும் ஆரணங்குதானெழுந்து
காச்சாகளிப்பாக்கு கம்மாறுவெற்றிலையும்
ஆரங்கிபாக்குகளும் மோரங்கிவெற்றிலையும்
வாகாயிலைச்சுருளும் வர்னத்துவர்பாக்கும்
கோவையிலைச்சுருளும் கொத்துத்துவர்பாக்கும்
அள்ளிக்கொடுத்தாளே ஆணலழகனுக்கு
அந்தச்சமயத்திலே அருச்சுனராசாவும்
வம்புபிரியஞ் செய்தாரே அருச்சுனரும்
அப்போது அல்லியம்மாள் ஆரணங்கேதுசொல்வாள்

ஐந்துவருஷமாக ஆர்ந்திருந்தாருமத்தை
இன்றெழுந்தநாழிகையில் நினைத்திருக்கதர்மமுண்டோ
என்னாலேயாகாது என்றாளேயல்லியம்மாள்
அப்போதருச்சுனனும் ஆனழகனேதுசொல்வான்
பன்னிருகாதவழி வபளவனம்போரேன் நான்
மனஸ்தாபம்பண்ணாதே மாலைமுடியாளே
மனஸ்தாபமென்னவுமே மாதுதலைகுனிந்தாளே
தலைகுனிந்தசாடைதனை கண்டார்கள் தாதியர்கள்
தென்புறப்பள்ளியறை தேன்மொழிக்குதான் திறந்து
வலபுறபள்ளியறை மயிலினைக்குத்தான் திறந்து
கட்டிலின்மெத்தைகளை கனக்கவிரித்துதரி
காம்பரிந்தமல்லிகைபூ கட்டிலின்மேல்பரப்பி
கச்சாயம்பந்நீரும் வைத்தார்கிளிமொழிக்கு
மஞ்சத்தின்மேலாக மன்னன்குதித்தேறி
தக்கோலந்தின்று தனித்துவிளையாடி
வெற்றிலைதின்று விரும்பிவிளையாடி
கச்சாயந்தின்று களித்துவிளையாடி
காமக்கடலிலவர் முழுகித்தெழிந்தார்கள்
மோகக்கடலிலவர் முழுகிதெளிந்தார்கள்
தீராதஆசையெல்லாந் தீர்த்தானேதேர்விசையன்
ஆறாதஆசையெல்லாம் தீற்றினானழகன்
மஞ்சத்துவிட்டிறங்கி வந்தாரிருவருமாய்
மஞ்சள் நீர்சாலையிலே வந்துபுகுந்தார்கள்
காலோடுகையுங் கனிவாயும்சுத்திசெய்து
மார்போடுதோளும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
அலங்காரமண்டபத்தில் அமர்ந்தாரிருவருமாய்
தாமமுடியார்கள் சதுராகப்பார்க்கலுற்றார்
அந்தச்சமயத்தில் அழகுபுலந்திரனார்

புலந்திரன் தகப்பனிடம் வருதல்.

வீதிவிலாசமது விளையாடிவேல்வேந்தன்
பந்தடித்துச்செண்டடித்துப பாலன்விளையாடி

தாயாரருகே தார்வேந்தனேடிவந்தான்
மகனுரைக்காணவே வாரியெடுத்தணைத்து
உச்சிமுகந்தாளே உள்ளங்கால்முத்தமிட்டாள்
உங்கள்-ஐயர்மடியிலே செல்லுமென்ருளாரணங்கு
அப்போபுலந்திரனும் அர்ச்சுனன்முன்னேவந்தான்
வாரியெடுத்தாரே மகனர்புலந்திரனே
அப்பாவருகவென் அழகுள்ள இந்திரனே
பொன்னுங்குடமே புலந்திரனேவாழியென்ருர்
தேர்விசையனருச்சுனன் புலந்திரனுக்கேதுசொல்வன்
அப்போபுலந்திரனும் அர்ச்சுனக்கேதுசொல்வான்
ஐயவே நீர்கேளும் ஆண்மையுள்ள அர்ச்சுனரே
தங்கத்தேர்தந்தாரே தனஞ்செயனுரென்பாட்டன்
செம்பொன்தேர்தந்தாரே சீருடையஎன்மாமன்
மாணிக்கத்தேர்தந்தாரே மண்டலத்துராசாக்கள்
முத்துத்தேர்தந்தாரே முடிமன்னராஜாக்கள்
சித்திரவீதிகளும தெருவுபதினயிரமும்
மட்டில்லாவீதி மதுரைக்கிலோட்டிவைக்க
பாண்டியப்பெருமாளே பவளந்தேர்நான்கேட்டேன்
அப்படியேதான்தருவேன் அஞ்சாதேயென்மகனே
தீவுக்குப்போறேன தீவீரமாய்கொண்டுவந்தேன
எங்கேயிருந்தாலும் இட்சணமேகொண்டுவாரேன்
எத்தனே நாளேயிலே எனக்குத்தேர்கொண்டுவாரீர்
மைந்தனவர்கேட்டு மனதுதெளியாமல்
மூன்றுநாளாறுபொழுதிலே கொண்டுவாரேனென்ருர்
ஒன்பதுநாளேயிலே உனக்குத்தேர்கொண்டுவாரேன்
இருமிருமென்றுசொல்லி எழுந்திருந்தார்மன்னவனும்
அச்சுதானந்த ரையனுந்தானுமாய்
எழுந்துநடந்தாரே யிந்திரமலேமேலே
கூடநடந்தாளே கொம்பனேயாளாரணங்கு
ஆனேசேனேபரிவாரங்கள் அனுப்புவேனோராசாவே
சேனேபரிவாரந் திரளணியுங்கூட்டுவேனே

உத்தமவீரியர்கள் இருவரும்போரீரோ
ஆனையுஞ்சேனையும் அனுப்பவும்வேண்டாங்காண்
இருவரும்போய்வாரோம் என்றுவழிநடந்தார்
மன்னரிருவருமாய் மந்திரவாள்கைபிடித்து
வைகைக்கரைகடந்து மதுராபுரிகடந்து
எல்லைகடந்து இளந்தோப்புதான்கடந்து
காவல்கடந்து கரியமலைதான்கடந்து
வேங்கையடர்ந்தவனம் வெள்களாப்பூத்தவனம்
எட்டடிவேங்கை யிருக்கும்வனங்கடந்து
பத்தடிவேங்கை பருத்தவனங்கடந்து
வேந்தறியாத வெளிக்காடுதான்கடந்து
சிங்கமுறங்குவனம் சிறுபுலிகள் தூங்குவனம்
ஆளியுறங்குவனம் அன்னபட்சி தூங்குவனம்
பவளம்விளைகின்ற பாங்கானகாடுகண்டார்
செங்காடுதீபட்டாப்போல் தோணுவதைகண்டார்கள்
அச்சுதானந்த ஐயரேயென்தோழா
நான்போகாதகாடுமில்லை ஆடாததீர்த்தமில்லை
பார்த்தாரிருவருமாய் பவழக்காடுநுழைந்தார்
கொம்புக்கயிறுகளும் கலந்தகொழுந்துகளும்
ஓடிப்படர்கிறதும் உயர்ந்தகொம்பாய் நிற்கிறதும்
தாவிப்படர்கிறதுஞ் சன்னல்பின்னலாகிறதும்
வேரிற்பவளமது மின்னுகிறகாந்திகளும்
பார்க்கமுடியாது பவளம்விளைகிறதை
பவளப்புதுமைகளைப் பார்த்துதிகைத்துநின்றார்
அக்காட்டிற்றனிருக்கும் அகங்காரக்கண்டுகளும்
ஆளைத்தலையை அரியுங்கதண்டுகளும்
குதிரைத்தலைபோ லிருக்குமாங்கருங்குளவி
சிங்கத்தலைபோ லிருக்குமாஞ்செங்குளவி
முழமளவாய்மார்பளவாய் வெளிப்பட்டுவந்தது
விஜயனைக்கொல்லுகைக்கு வந்தகதண்டுகளும்
மன்னனருச்சனரின் மட்சரேகையைப்பார்த்து

தேவாதிபிண்டமிவன் தேர்விசையனருச்சுனன்காண்
பேர்நல்பேர்பெற்ற பெருமானிவர்காணும்
நாம்கொன்றேமேயானுக்கால் குடிகேடுவந்துவிடும்
நமது.கூட்டமழிந்துவிடும் குலகேடுவந்துவிடும்
என்றுபயந்து எழும்பிக்கதண்டுகளும்
அஞ்சிப்பயந்து அடவியில்சென்றதுகாண்
ஆனுலழகனவன் அருச்சுனனுமேதுசொல்வான்
அச்சுதானந்த ஐயரேயென்தோழா
நான்,தேவாதிபிண்டமென்றுதெரிந்தந்தகதண்டுகளும்
நம்மைக்கண்டபோதே நடுநடுங்கிச்சென்றதுகாண்
என்றவர்கள்சொல்லி யிருக்குமந்தவேளையிலே
தானுகவேடுவர்கள் அவ்வழியேவாரூர்கள்
அர்ச்சுனன்மாயத்தை அறிந்தாரேவேடுவர்கள்
கண்டுபயந்தார்கள் கடுகிவந்துதெண்டனிட்டார்
வேடுவரோ நீங்ளென்று விஜயனூர்கேட்கலுற்ரூர்
ஆரையா நாங்கள் ஆரணியவேடரென்ரூர்
இக்காட்டுக்குள்ளே இருக்கும்கதண்டுகளும்
உங்களைக்கொள்ளாதோ உத்தமரேசொல்லுமென்ரூர்
கதண்டுகள்கொட்டாதோ காவலரேஉங்களையும்
தென்னுட்டுப்பேர்களைத் தீண்டாதுகதண்டுகளும்
முகமறியாயாதவரை முரித்துக்கிடத்திவிடும்
மவளம்வெட்டவந்தவரை எமலோகஞ்சேர்த்துவிடும்
கதண்டுகொட்டிச்செத்தவர் கணக்குமிதங்கமில்லை
எங்கள்துரைபவளக்கொடி எழுப்பினதனந்தமுண்டு
செத்துமடிந்தவரைச் சீவனுடன்எழுப்பிடுவாள்
என்றுமவன்சொல்லஏதுசொல்வானருச்சுனனும்
எங்கள் துரைஎன்றீரே உங்கள்துரைபேரென்ன
ஆருடையராச்சியங்கள் அறியவுரையுமென்ரூர்
பெண்ணரசுதானே புண்ணியரேசொல்லுமென்ரூர்
அந்தவரலாற்றை அன்பாகச்சொல்லுமென்ரூர்
ஆனுலிதமாகவே அடியேனுரைத்திடுவேன்

சேராம்புராசாக்கள் துரைகளவரைம்பதுபேர்
ஐம்பதுராசருக்கும் ஆணுமில்லைபெண்ணுமில்லை
பவளக்கொடிராச்சியத்தை ஆளுகைக்குபாலனில்லை
காணுதகோவிலுக்குக் காணிக்கையையனுப்பிவைத்தார்
இலையிலேசாதமுண்டால் என்னதவமென்றுசொல்லி
தரையையவர்மெழுகி சாதங்கள்உண்டார்கள்
பாலடைக்குப்பால்கொடுப்பார்பசித்தார்முகம்பார்ப்பார்
தவித்துவந்தபேர்களுக்குத்தண்ணீர்ப்பந்தல்வைத்தார்
சாலைகள்போட்டுவைத்தார் சத்திரங்கள்கட்டிவைத்தார்
நல்லதண்ணீர்கிணறுகளும் நடப்பாயும்கட்டிவைத்தார்
சோகிபரதேசிகட்கு திருமடங்கட்டிவைத்தார்
குளங்களெடுத்துவைந்தார் கோபுரங்கள்கட்டிவைத்தார்
என்னதவப்பண்ணிணுலும் எதனுலும்பிள்ளையில்லை
பத்தாண்டுசென்று பேய்ந்தபெருமழைக்கு
தெப்பலாய்நின்று தெரிந்துதவம்பண்ணுர்கள்
மைந்தனைவேண்டியல்லோ மாளிகைமறந்தார்கள்
புத்திரனைவேண்டியல்லோ பூமிமறந்தார்கள்
அவர்மேல்-ஆலம்விழுதோடி அறுகுமுளைத்திடவும்
அரகராவென்றுசொல்லி அகோரதவப்பண்ணுர்கள்
சிவசிவாவென்றசத்தம் தெய்வலோகந்தான்கேட்கும்
அவர்பண்ணுந்தவப்பயனை அறிந்தல்லோஈஸ்வரனும்
ஈஸ்வரனும்பார்வதியும் இடப்பத்திலேறிவந்து
சேரும்புராசனிடம் சிவன்வந்துமேதுசொல்வார்
நீங்கள்-கூலிகுறைத்தவர்கள்குறைமாக்கால்போட்டவர்
அங்காடிக்கூடையை அதிரவிலையிட்டவர்கள்
பத்தட்டிநெல்லிலே பதரைக்கலந்தவர்கள்
ஏறிகுளமடைத்தோர் எந்தன்மைகுறைத்தவர்கள்
நந்தவனமழித்தவர்கள் நற்பெண்டைக்கெடுத்தவர்கள்
பாலடைக்குபால்வாரார் பசித்தார்முகம்பாரார்
நீங்கள்-எதுத்தவம்பண்ணுலும் எதிணுலும்பிள்ளையில்லை
இந்தப்பிறப்பிலேயும் எழுபிறப்பும்பிள்ளையில்லை

என்றதுதான்கேட்டு ஏதுசொல்வாராசாக்களை
என்னபாவம்பண்ணாலும் ஏதுதோஷஞ்செய்தாலும்
பாவத்தைதீர்த்துவிட்டு பாலகனைதாருமைதீர
என்றவர்கள்துதிக்கையிலே ஈசர்மனமிரங்கி
பவளக்கொடிமேலேபாலகியையுண்டாக்க
குவ்வாகுவ்வாவென்று குழைந்தையழுகுதேடா
ஆணுமதுபெண்ணுமது அழகாய்வளர்த்திடுகாண்
செம்மையாயிருங்களென்று சொல்லிநடந்தார்காண்
பெண்ணையெடுத்துவந்து போதவளர்த்தார்கள்
கவிழ்ந்தாள்தவழ்ந்தாளே கன்னியிளமயிலும்
ஒருவயதிருவயது வென்றிரண்டுமூன்றாச்சு
ஐந்தாம்பிராயத்திலே அறிந்தாள்பலகலைகள்
பவளக்கொடியாளென்று பார்லோகமாளுகிறாள்
பட்டந்தரித்தல்லவோ பார்முழுதுமாளுகிறாள்
ஆணரசாண்டாலே அழிந்துபோம்சீமையென்று
பெண்ணரசாளுகிறாள் பேடைமயிலணங்கு
என்றதுகேட்டானே இளவிஜயனருச்சுனனும்
வாலைப்பிராயமோ வயதுமெத்தசென்றவளோ
பதினாறுவயதாச்சு பக்கமெல்லாம்பிஞ்சலவோ
கொஞ்சம்பிராயம் கொழுந்தெல்லாம்பிஞ்சலவோ
பாதிப்பிராயம் பக்கமெலலாம்பிஞ்சலவோ
காய்க்கும்பிராயமையா கனியுதிருந்தற்காலம்
பூர்க்கும்பிராயமையா பிஞ்சுவிடுங்காலமது
தன்வயதுதானறியாள் தையலிளங்கொடியாள்
ஆனாலும்வேடவனே அவளழகைச்சொல்வாயே
வேடன் பவளக்கொடியாளழகைச் சொல்லுமென்றார்.
ஏதென்றுசொல்வேனையாவிளங்கொடியாள்தன்னழகை
பார்க்கமுடியாது பத்தினியாள்தன்னழகு
நீர்முட்டைபோலிருக்கும் நேரிழையாள்தன்னழகு
சேல்கண்டைபோலிருக்கும் தேன்மொழிகண்ணழகு
மேற்புருவமிரண்டழகும் வேப்பிலைசாயலைப்போல்

வேடன் பவளக்கொடியாளழகை அர்ச்சுனனிடத்தில்சொல்லுவது, பவளக்கொடியாள்மேல் அர்ச்சுனன் மோகிப்பது, பவளக்கொடி வேட்டைக்கு வருவது.

பவளக்கொடிமாலை.

மயிரழகும்பாவனையும் வண்டுமுதுகதும்போல்
ஈச்சம்பழத்திலேயிரண்டகறுப்புமுண்டு
அவள்-மயிரேகறுப்பொழிய மற்றகறுப்புமில்லை
அவள்-புருவங்கறுப்பொழிய பின்னேகறுப்புமில்லை
வெம்பிறைச்சாயலைப்போல் சிறுநெற்றித்தன்னழகும்
சீரியமூக்கழகும் சிவந்தமுகத்தழகும்
முத்துப்போல்பல்வரிசைமுருக்கிதழ்போற்செவ்வுதடும்
வாழைத்தண்டுபோல வளர்ந்ததுடையழகும்
கழுத்தழகும்பாவனையும் கமுகுகுலைசாய்ந்தாற்போல்
அகண்டபுஜமழகும் ஆலிலைபோல்தன்வயிறும்
மூளைத்திடுமூங்கில்போல் மொய்குழலாள்தன்புஜமும்
பத்துவிரலழகும் பயித்தங்காய்நெத்ததுபோல்
சிங்கத்திடையழகும் சீருனயிடையழகும்
இருதுடைரெண்டழகும் இளவாழைத்தண்டதுபோல்
மூத்துசிப்பிதைத்ததுபோல் முழங்காலிரண்டழகும்
பாம்பின்படம்போலே பாதத்திரண்டழகும்
புத்தகஞ்சேர்ந்தாற்போல் புறங்காலின்பின்னழகும்
அவளுக்கேயொப்பானோர் ஆருமில்லைவையகத்தில்
சுவரிலெழுதலாம் சித்திரம்போல்பார்க்கலாம்
படத்திலெழுதலாம் பதுமைபோல்பார்க்கலாம்
சந்திரன்போலே தளும்புகிறாள்தையனல்லாள்
சூரியனைப்போலே துள்ளுகிறாள் தோகையரும்
ஈயத்தைக்காச்சி யிலையிலேவிட்டாப்போல்
பொன்னையுருக்கியே பூமியிலேவிட்டாப்போல்
தங்கத்தைக்காச்சி தரையிற்கவிழ்த்தாப்போல்
நீறுபூத்தநெருப்பை ஊதிப்பார்த்ததிறம்போல்
ஆயிரமின்னலிலே சோதிமின்னல்பிறந்தாற்போல்
பார்க்கமுடியாது பத்தினியாள்தன்னழகை
அவ்வார்த்தைகேட்டு அர்ச்சுனனுமேதுசொல்வான்
அவளை-மண்டலத்துராசாக்கள் மாலைதரித்தாரோ
கன்னியிளங்கொடிக்குக் கலியாணஞ்செய்தாரோ

பவளக்கொடிமாலை.

"விஜயனவன் கேட்கையிலே வேடுவனுமேதுசொல்வான்
நாலுலட்சங்கோடியுண்டு நாயகியைநாடிவந்தோர்
பத்துலட்சங்கோடியுண்டு பத்தினியைக்கேட்டவர்கள்
வண்ணலட்சங்கோடியுண்டு மாதரைக்கேட்டவர்கள்
கை நீட்டிமாலையிட்டார் காசினியிலாருமில்லை
நித்தியகன்னியாகவே யிருக்கிறாள் நேரிழையாள்
நல்லதுவேடுவனே நாயகிமாதரவள்
கன்னியிளங்கொடியும் கனவேட்டையாடுவளோ
வேட்டைக்குவாரதுண்டோ வேடுவரேசொல்லுமென
மாதரிக்கன்னியரும்வாரோளோ வேட்டை முகம்
ஆனால்கேளையாவே அடியேனொருவார்த்தை
மாதமொருபயணம் வனவேட்டைவாரதுண்டு
திங்களொருபயணம் வாருளே தேன்மொழியாள்
மற்றொருநாளையிலே வருகிறதில்லையென்றான்
ஆனால்கேள்வேடுவனே அறியவொருவார்த்தை
காட்டில்வசித்தாலே கன்னியிளங்கொடியும்
பவளக்கொடியாளும் பாரிவேட்டைவந்தாலே
புகழாயிருக்கிறது பொற்கொடியாள்வேட்டையது
ஆனால் நீர்போய்வாரும் அன்புள்ளவேடுவனே

அர்ச்சுனன் பவளக்கொடிமேல் மோகித்தல்.

வேடுவனும்போனபின்பு விஜயனுமேதுரைப்பான்
அச்சுதானந்த ஐயரேயென்தோழா
ஆரணங்குவார்த்தைதனை யன்பாகக்கேட்கையிலே
மன்மதபாணமது மார்புருகிப்போகுதே
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகிறதே
மாரனவனெய்தகணை மாரைப்பிளக்குதே
ஆறுருகுபாணமது மார்புருகிப்போகுதே
அவளைக்-கண்ணாலேகண்டாலே காமன்கணை தீரும்
பார்த்தாலேயாமானால் பசிதாகந்தீருமென்றான்
என்றைக்குக்காண்பேனோ ஏலப்பசுங்கிளியை

மாலைதரியாமல் வருவதில்லையென்தோழா
கல்யாணம்பண்ணுமல் வருவதில்லையென்தோழா
அவளழைப்பார்ப்பதெப்போ என்னுசைதெளிவதெப்போ
கொம்பனையாளுடைய குரலோசைகேட்பதெப்போ
அச்சுதானந்த ரையருமேதுசொல்வார்
என்காணும்வாள்விஜயா இந்தமதியுந்தனுக்கு
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியல்லியற்கு
மூன்றுநாளாறுபொழுதிலே வாரேனென்று
மைந்தன்மேலாணையிட்டு வந்திரேமன்னவனே
மற்றொருகன்னியமை மணமாலைசூட்டினுல்
மகுடத்துரையல்லியரும் மங்கையவள்பொல்லாதாள்
வாழ்பாண்டிநாடுடையாள் வருவாளேபடைகூட்டி
சொல்லுக்குமலைசாரத் துடர்ந்தபடையெடுப்பாள்
வெட்டத்துணித்திடுவாள் வீரமணிவாளாலே
வேண்டாங்காண்தோழா வெறுத்துவிடுமவளாசை
ஆணலழகுமன்ன னர்ச்சுனனுமேதுசொல்வான்
நீ-என்னதான் சொன்னுலும் என்செவியிலேறுது
மாதரந்தக்கன்னிகை மணமாலைசூட்டினுக்கால்
அன்றுவிகாரந் தெளியுங்காணென்தோழா
நான்-செத்துமடிந்து செலவழிந்துபோனுலும்
மாண்டுமடிந்து வைகுந்தம்போனுலும்
செத்தவிடந்தனிலே செங்கழனிப்பூபூப்பேன்
குடமல்லிபூபூத்துக் கொண்டையிலேபோயிருப்பேன்
கொண்டைக்குபூவாவேன் கொசவணத்திற்பையாவேன்
கண்ணுக்குமையாவேன் காலுக்குமெட்டாவேன்
நாயகியாள்நெற்றியிலே நச்சாந்துப்பொட்டாவேன்
முந்தாணிதொங்கலிலே தொத்திவந்துமுள்ளாவேன்
என்றுதெரியுமோ எக்காலஞ்செல்லுமோ
கைசோர்ந்துமெய்சோர்ந்துகனந்தமுகஞ்சோர்ந்து
சகலகலைதுகிலுடுத்தி தான்வந்துமேலாடி

நேமங்கெட்டுமதிகுலைந்து நினைவுதடுமாறி
மயங்கிவிழுந்தானே மாதர்மேல்நினைவாகி

பவளக்கோடியாள் வேட்டைக்குவருவது

அன்றையபோதையிலே ஆனந்தவாழ்மாரி
பங்கயந்திர்கண்ணுள் பவளக்கொடியாளும்
செங்கோலுடையாளும் சிகாரிபுறப்பட்டாள்
ஈட்டிபிடிமன்னவர்கள் ஏழுலட்சம்மத்துலட்சம்
கத்திபிடிமன்னவர்கள் கணக்குமிதங்களில்லை
பட்டயநேரிசமும் பாரியவிலாசமொடும்
நிமிஜாபெரியலகுநேசமாம்பெரியகத்தி
கூலிசமும்சூலிசமும் குண்டுகுழல்துப்பாக்கிகளும்
எண்ணுன்கு ஆயுதமும் எடுத்தரையிற்கட்டினுள்
பாராசாரிபுரவியின்மேல் பவளக்கன்னியேறினுள்
சுத்திக்குடைபிடித்தார் சூரியனைத்தான்மறைந்த்தார்
ஆள்பெருஞ்சேவகமும் அனந்தங்கோடிசேனைகளும்
தாதிகளுமூப்பிகளும் தையல்மார் சூழ்ந்துவர
பத்துலட்சம்சேனையுடன் பாரிவேட்டைவாராளே
ஆனையின்மேல்பேரிகை குதிரையின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைகிளம்புகுது
பேய்தாரையூதவே பெரியடமாடோலடிக்க
சின்னமுழங்கவே திருச்சின்னந்தான்முழுங்க
ஐங்காதவழிதூரம் அதற்கேற்றபேரியடிபடுது
பயணம்பயணமென்று பயணபேரியடிபடுது
அந்தவனங்களெல்லாம் அதிரவருகிருள்
பொங்குகடல்போலே போய்ப்புகுந்தாள்கானகத்தில்
மான்வேட்டையாடியே மயில்வேட்டைதானுடி
குயில்வேட்டையாடியே குருவிவேட்டைதானுடி
வக்காவும்கொக்குகளும் கருங்குருவிதாராவும்
அம்புக்கொருகுருவி ஆரணங்குசெய்துவிட்டாள்
வேட்டைகளாடியே விடாய்த்துத்தளர்ந்தாளே

கானகத்துமண்டபத்தில் கடுகவநதிங்கினர்கள்
பஞ்சணைமெத்தையிதே பதியக்கொலுவிருந்தாள்
தாம்பூலமுண்டு தனியேகொலுவிருந்தாள்
வாசங்களுண்டு மகிழ்ந்துகொலுவிருந்தாள்
கேளிக்கைபார்த்திருந்தாள் கெம்பீரநாயகியாள்
சங்கீதம்பார்த்து இருக்கிருள்தையனல்லாள்
அப்போதுவாள்விஜயன் அர்ச்சுனனுந்தானெழுந்து
அச்சுதானந்தஜயர்முகம்நோக்கி
வந்தாள்காண்வந்தாள் மாதரிளங்கொடியாள்
பவளக்கொடியாளும் பைங்கிளியாள்வந்தாள்காண்
கானகத்துமண்டபத்தில் வந்தமர்ந்தாள்கன்னியரும்
மத்தளவேசையது கேட்குதுகாண்மாயவரே
என்னவடிவானலும் எடுத்துக்கொள்ளும்போர்விஜயா
அர்ச்சுனரேவுன்னடத்தை யறிந்துமிருந்துநான்
அலச்சல்படும்படியாய் அறியாமலுன்பின்வந்தேன்
ககண்டுகொட்டிமடிந்தாப்போ லிருக்கின்றேன்கானகம்
நீ-கால்வேருய்கைவேருய் கட்டிக்கிடைத்துவிட்டு
மாயவரேசுத்திவந்து மாரத்துநீராழுங்காண்
என்னைச்சுத்திவந்து இழவுகுடுங்காணும்
பெண்ணுவடிவெடுத்துப் போதவழுதிடுங்காண்
மாரிழவுகொடுத்தெனக்கு மயிரிழவுநீர்கொடுங்காண்
குரலோசைதீயெடுத்துக் கூவியழுதாலே
பெண்குரலைக்கேட்டு பொற்கொடியும்வந்திடுவாள்
ஆரென்றுபார்க்கவே வருவாள்காணரணங்கு
ஆரணங்கிங்குவந்து ஆரென்றுகேட்டாக்கால்
மாலையிட்டகணவனென்று மயிலிணைக்குநீருரையும்
யாத்திரைவந்தோமென்று செப்புங்காண்ணன்னவிட்கு
மங்கிலியபிச்சைகேளும் மாதரெழுப்பிடுவாள்
ஆனந்தவாழ்மாரி அவளைமாலைசூட்டுகிறேன்
கண்ணுக்குநன்ருனல் கனமாலைசூட்டுகிறேன்
அழகாயிருந்தாலே அவளைமணஞ்செய்திடுவேன்

வடிவுகள்மட்டானால் மதுரைக்குபோய்விடுவோம்
என்றுசொல்லியருச்சுனரும் எம்பெருமாளை நினைத்து
பார்த்திபனருச்சுனரும் பரமனைத்தானினைத்து
அர்ச்சுனன்கதண்டுகொட்டி செத்தவன்போலிருந்தான்
பொருந்தியைத்தானடக்கிப் பொட்டனவேபூமியிலே
மூர்ச்சையடக்கியே முடிசோர்ந்துகீழ்விழுந்தான்
செத்தவனைப்போலாகச் சோபித்துக்கீழ்விழுந்தான்
அச்சுதானந்தஐயரவரேதுசெய்தார்
கால்கைகள்வேறாகக் கட்டிக்கிடைத்திவைத்து

ஸ்ரீ கிருஷ்ணதேவர் பெண்வடிவெடுத்துப்புலம்பல்.

பெண்ணுய்வடிகொண்டு போதப்புலம்புகிருள்
தன்னுடையதலைமயிரைத் தானும்விரித்துக்கொண்டு
மன்னனைச்சுற்றிவந்து மாரடித்துத்தான்விழுந்தார்
கொற்றவனைச்சுற்றிவந்து கோவென்றழுகலுற்றார்
மலையேபருவதமே வாட்டமில்லாக்குஞ்சரமே
செம்மலையேபருவதமே சேதமில்லையென்றிருந்தேன்
மாளவோவிங்குவந்தாய் மாபாவிபட்டணத்தில்
சாகவோவிங்குவந்தாய் சண்டாளச்சீமையிலே
உன்னைப்பறிகொடுத்து ஒருத்தியாய்ப்போவேனே
மைத்துனர்க்கென்ன மாமனர்க்கென்னசொல்வேன்
மன்னவனைச்சுற்றிவந்து மாதுபுலம்பலுற்றாள்
அழுதகுரலோசை ஆரணங்குகேட்டுவிட்டாள்
பவளக்கொடியாளும் பத்தினியாள்கேட்டுவிட்டாள்
ஆடலும்பாடலும் அத்தனையுங்கையமர்த்தி
ஆடாதுதுவரே அ ர்ந்தவனந்தனிலே
பெண்குரலாக்கேட்கிறதுபோய்பார்த்துவாருமென்றாள்
அழுதகுரலேது ஆராய்ந்துபார்த்துவாரும்
அப்போதுதாதியரும் அழகுள்ளமோகவதி
மோகவதியாளும் முன்னேவந்துதெண்டனிட்டாள்
தாதியருமங்கேவந்து சரணமிட்டாள்மாதருக்கு

மாதாசிசெலவருள க்ஷணத்திலொருதூதுவனும்
பவளக்கொடிமாதே பத்தினியேஎன்னாச்சி
ஆரோவொருவத்தனவன் ஆளனுந்தேவியுமாய்
கதண்டுகொட்டிமாண்டானென்று கன்னியவள்சொல்ல
புருஷன்மடிந்துவிட்டான் பெண்ணாள்புலம்புகிறாள்
அவனையெழுப்பிவிட்டா லனந்தங்கோடிபுண்ணியமே
ஆளனையெழுப்பிவிட்டால் அரிவையற்குமோக்ஷமுண்டு

பவளக்கொடியாள்வந்துகாண்பது.

இந்தமொழிகேட்டு எழுந்தாள்பவளக்கன்னி
முத்துநிறப்பல்லக்கில்மொய்குழலுமேறிவந்தாள்
மாண்டவன்தன்னருகே வந்துயிறங்கினாள்காண்
அச்சுதானந்தரென்னு மையர்புலம்புகிறார்
பெண்போல்புலம்புகிறார்பேசும்பெருமாளும்
நான்பாராதநாடுமில்லை பணியாத ஆலயமில்லை
மிதியாதவனங்களில்லை முழுகாத தீர்த்தமில்லை
தேசம்பலவாய் தீர்த்தங்களாடிவந்தேன்
பூமிபலபலவாய்பிரதட்சணம்செய்துவந்தேன்
பவளப்புதுமையிங்கே பார்க்கவந்தேன்மாதாவே
ஆனையின்மத்தகத்தை அறியுங்கதண்டுமிங்கே
குதிரைகளையறுக்குங் குளவியுண்டிவ்விடத்தில்
சிங்கத்தலைபிளக்குஞ் செங்குளவிகொன்றதுவே
அறியாமலிங்குவந்தோம் அரும்பாவிபட்டணத்தில்
தெரியாமலிங்குவந்தோம்சேனத்ரோகிபட்டணத்தில்
இப்படிவருங்கருமம் யாதென்றுநானறியேன்
மலையேபருவதமே வாட்டமில்லாக்குஞ்சரமே
செம்மலையேபருவதமே சேதமில்லாசுந்தரமே
கல்லானதூணேஉன்னைக் கரையானரித்ததுவோ
இரும்பானதூணேயுன்னை எரிநெருப்பெரித்ததுவோ
செம்பருந்துஉன்னைச சிறகாலடித்ததுவோ
மோதிரக்கையை முகத்தோடறைந்துகொண்டாள்

கோவென்றசத்தமுடன் குமுறியழுகலுற்ருள்
தரையில்புரண்டழுதாள் தாணியளந்தவாநம்
பங்கயஞ்சேர் கண்ணுள் பவளத்தின்கன்னியரும்
ஆரடிபெண்ணே நீ அழுதுபுலம்புவதேன்
எந்தவூரெந்ததேசம் எங்கிருந்திங்குவந்தீர்
மாண்டவர்யார்காணும் மாதே நீசொல்லுமென்ருள்

ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்லுவது.

பவளக்கொடியாளே பத்தினியேயென்னுச்சி
ஆனுல்கேளம்மா ஆரணங்குசொல்லுகிறேன்
ஊருண்டோஎங்களுக்கு உற்றபதியுமுண்டோ
தேசாந்திரியவர்க்குச் சீமைகள்பூமியுண்டோ
நாடுவடக்கேயம்மா நகரிதிருககாஞ்சி
தேசம்வடக்கேயம்மா திருக்காஞ்சிமாநகரம்
தீவுபலதிரிந்து தீர்த்தங்களாடிவந்தோம்
பூமியொருபுறமாப் புண்யதீர்த்தமாடிவந்தோம்
பவளப்புதுமையைப் பார்க்கவந்தோம்என் தாயே
மாலையிட்டுக்கொண்ட மணவாளனிவர்காணும்
தாலிதரித்துக்கொண்ட தலைவனிவர்காணும்
வாலப்பிராயமம்மா வயதுபதினுறளவே
மார்பளவாய்முகமளவாய் வந்ததுகதண்டுகளும்
மாலைமுடியானை மன்னவனைக்கொன்றுதம்மா
தாலிச்சரடிழந்து தலைவிரிக்கநாளாச்சே
எங்கையோவானம் இடிக்கிறதென்றிருந்தேன்
தப்பாதேவானந் தலையிலிடித்ததம்மா
அண்ணனில்லைதம்பியில்லை ஆதரிப்பாருமில்லை
அள்ளியிடுவார் அவனிதனிலாருமில்லை
இருவருமாய்வந்தோமே ஒருத்திநான்போவேனே
உன்புண்ணியமாப்போகுது பிழைக்கவழிபாருமென்ருர்
மங்கிலியப்பிச்சையது தாருமம்மாமா தாவே
உன்-தருமமாய்ப்போகுதம்மா தாயேமுகம்பாரும்

என்று-முந்தாணியேந்தி முன்னாலே நின்றாளே
மடிபிச்சைதாருமென்று மடியேந்தி நின்றாளே
மாரிழவுகொடுத்து மயங்கியழுதாளே
அவிந்தவிளக்கேற்றிவைத்தா லநேகதர்மமுண்டுனக்கு
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாள்கேட்டு
இந்தப்-பாசாங்குகள்ளியை அப்பாலேதள்ளுங்கடி
என்று-மேகமலைபோல மெள்ளநடத்துவந்து
அவன்காலைப்பிடித்துக் கரியமுடியசக்கி
பார்த்தாள் திருமுகத்தைப் பார்த்தாள்பலகாலும்
மேலேயிருக்கின்ற முக்காட்டைவாங்கியல்லோ
உற்றுற்றுப்பார்த்தாளே ஒளிபிறந்தகண்ணாளும்
வானவர்பெண்டுகளை வலதழிக்குங்கள்ளனடி
மட்டில்லாப் பெண்டுகளை வகைமோசஞ்செய்தவண்டி
தேசத்துமார்தர்களை சிறையெடுக்குங்கள்ளனடி
புரட்டுங்கள்தாதிகளே பின்னழகுபார்ப்போமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாதிபுரட்டலுற்றாள்
முன்னழகும்பின்னழகும் முந்துமச்சரேகைகளும்
தோளில்துளசிமாலை தொப்புளில்மீர்தகலசம்
பல்லிற்பரசவீணை பாதத்தில்செந்தாமரை
மீசைமுறுக்கழகன் மைவிழியின்திருவழகும்
நாவிலேநட்சத்திரம் நயனவிழிப்பார்வைகளும்
பதினெட்டுலட்சணமும் பார்த்தாளேபத்தினியாள்
தேவாதிபிண்டமடி சுவாமிக்குமைத்துனண்டி
இவனையெழுப்பினல் எனக்குவரும்மோசமென்று
பவளக்கொடிபார்த்துப் பார்த்தீபனைக்கட்டுமென்றாள்
அப்போதருச்சுனனும் ஆயனைத்தானினைத்தான்
வாள்விசையன்தானும் மாயவனைத்தானினைந்து
எப்படியோஉன்தயவு எம்பெருமாள்மேகவர்ணா
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
ஹரிராமமாயவரே அருகிருந்துகாருமையா
கட்டினதேயுண்டானல் கட்டவிழப்பாருமென்றான்

பனதில் நினைத்தானே வாள்விஜயனர்ச்சுனனும்
பவளக்கொடியாளே பாங்கிமார்கட்டினார்கள்
கட்டுங்கொடிகளதுகடுகவேயிற்றுதங்கே
ஆனைகட்டுஞ்சங்கிலியால் அவனையேகட்டினார்கள்
ஆயன்தயவால் அரிராமர்கிருபையினால்
அத்தையும்விம்மி அறுத்தானே அர்ச்சுனனும்
மார்பின்சரப்பழியை வாங்கியவள்கைகொடுத்து
கெட்டியாய்க்கட்டுமென்று கிட்டவந்து நின்றாளே
மானிக்கச்சரப்பளியால் வலிந்திருக்கிக்கட்டினார்கள்
அவன்-காலையசைக்கிறகால்சேஷ்டைமெத்தவுண்டு
கையையசக்கிற கைசேஷ்டைமெத்தவுண்டு
இங்கேயிருந்தாலே எனக்குவருமோசமென்று
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பல்லக்கின்மீதேறி பாங்கியர்சூழ்ந்துவர
மங்கையர்கள்சூழவந் திறங்கினாள்மண்டபத்தில்
வாள்விஜயனர்ச்சுனனும் மாணிக்கச்சங்கிலியின்
கட்டையவிழ்த்தவனும் கடுகவெழுந்திருந்து
அச்சுதானந்த மையரேயென்தோழா
ஆயிரந்தோழருக்கு அரிதாகியமணியே
கண்டீரோதோழா நீ கன்னியிடலட்சணத்தை
பார்த்தீரோயென்தோழா பவளக்கொடிலட்சணத்தை
இவளுக்கொப்பானோர் யாருமில்லைவையகத்தில்
ஈஸ்வரன்தேவி ஈஸ்வரியாளீடுமல்ல
இராமரிடதேவி யிலட்சுமியுமீடுமல்ல
பிரமனிடதேவி பெண்ணரசியீடுமல்ல
ஏமனிடதேவி மோகன்னியீடுமல்ல
தேவேந்திரன்தேவி யிந்திராணியீடுமல்ல
சந்திரனார்தேவி ரோகணியீடுமல்ல
சூரியனார்தேவி சாயாதேவியீடுமல்ல
கந்தருடதேவி கனகவல்லியீடுமல்ல
மன்மதன்தேவி ரதிமாதுயீடுமல்ல

ஆருடைய அழகுக்குஒப்பிடுவேனாரணங்கை
வேரிற்பவளமது மின் னுகிறகாந்திகண்டாய்
ஆயிரமின்னலிலே சோதிமின்னலேபோல
கண்ணாலேபார்க்கமுடியவில்லைகன்னியரை
எப்படிமறந்து இவளைவிட்டுநான்போவேன்
இறப்புக்குப்பிறப்புக்கு மினியொருபெண்வேணுமோ
இவளை மாலைதரியாமல் வருவதொருநாளுமில்லை
இவளாலேயென் னுயிரும் இறக்கிறதுதப்பாது
அச்சுதானந்த ரையருந்தான்கேட்டு
என்கா ணும்வாள்விசையாயிந்தமதியுந்த னுக்கு
தோள்மாலைபோட்டதொரு தோழிமார்தங்களிலும்
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பத்தினியைமாலையிட்டீர்
அவளிலுமெத்த ஆரணங்கெவளழகோ
எந்தனதுதங்கை சுபத்திரையைமாலையிட்டீர்
அவளிலுமெத்த ஆரணங்கெவளழகோ
அகத்தியனார்பெற்றெடுத்த அருங்கிளியாள்மேகவதி
அவளிலுமெத்த ஆரணங்கிவளழகோ
மோகம்பயின்றெடுத்த மின்னொளியைமாலையிட்டீர்
அவளிலுமிவளழகோ ஆனந்தவாழ்மார்பா
அல்லியரைப்பார்க்கிலு மிச்சமுண்டோவிவளழகு
வேண்டாங்காணவாள்விஜயா வெறுத்துவிடுமவளாசை
எழுலட்சந்தேவிமா ரெல்லோருந்தானிருக்க
மாதொருத்திக்காக மயங்கிவிழுவானேன்
காண்டாவனமெரித்த காளையவன் கூறுவான்
நீர்-என்னதான்சொன்னாலு மென்செவியிலேறாது
மாதந்தக்கன்னியரை மணமாலை சூட்டினாக்கால்
என் னுடையசீவ னிருக்குங்காணென்தோழா
எண்ணப்படிமுடிக்க வேண்டுங்காணீவ்வாரே
இருவருமாகவே இருக்கின்றவேளையிலே
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடிநாயகமும்
பொழுதுசரிந்தது போகவேணும்மாளிகைக்கு

மார்பின்சரப்பளியை வாங்கிவா தாதியென்ருள்
அப்போது தாதிமார் அதிதுரிதமாகவந்து
ஆர்கா ணுமன்னவனே அழகானஐயாவே
ஆச்சியர்கட்டிவைத்த அழகுசரப்பளியை
கட்டிவைத்துப்போனதை கடுகவேதாருமென்ருள்
பொழுதுமசந்தது போராளரண்மனைக்கு
மார்பின்சரப்பளியை மன்னுகொடுத்திடென்ருள்
திட்டென்றெழுந்திருந்துதேர்விஜயனேதுசொல்வான்
உங்கள்-கூடத்திலேறிக் குதித்தனேடி ஆரணங்கே
கோட்டைகளேறிக் குதித்தனேடிகொம்பனையே
அரண்மனையேறிக் குதித்தனேடி ஆரணங்கே
மேலேகுதித்தேனே பவளநல்லாள்கோட்டையிலே
பெட்டியெடுத்தேனே பொக்கிஷந்திருடினேனே
மாதவள்கையை வலியவந்துதொட்டேனே
கள்ளன் திருடனைப்போல் கன்னமிடப்போனேனே
என்னகுற்றஞ்செய்தேன் என்னையவள் தானும்
கட்டழகிமாதவளுங் கட்டிவைத்துப்போனுளே
கள்ளனைப்போலாகக் கட்டவும்நியாயமுண்டோ
திருடர்களைப்போலச் சேர்ந்துகட்ட நியாயமுண்டோ
கட்டினுல் தீருமோ கன்னியவளாசை
கட்டிவைத்தமாதென்னை காட்டில்விட்டுபோகலாமோ
கூடவழைத்தல்லவோ போகவேணுங்கொம்பனையாள்
அரண்மனைக்குஎன்னை அழைத்துப்போகலாகாதோ
என்னசுகந்தரத்தில் என்னையவள்கட்டிவைத்தாள்
அம்மான்மகனென்று அன்பாகக்கட்டினளோ
அத்தைமகனென்று ஆசையாக்கட்டினுள்
அழகானகன்னியென்று மணமாலைசூட்டினேனே
வடிவானகன்னியென்று வாழ்மணஞ்செய்தேனே
என்னசுதந்திரத்தால் என்னையவள்கட்டிவைத்தாள்
கையிலகப்பட்டதை விடுவேனேகன்னியரே
மார்பின்சரப்பளியை மாதேகொடுக்கேனடி

வலியவந்தபாக்கியத்தைக் கொடுக்கேனேகன்னியரே
சண்டையதுவேண்டுமென்ருல் சரியாகவருவேண்டி
அவளுக்கு அஞ்சுவேனே ஆனந்தவாழ்மார்பன்
என்றதுகேட்டு ஏதுசொல்வாள் தாதியவள்
உந்தனுக்குச்செய்த உபகாரமத்தனையும்
வேங்கைக்குச்செய்த விஷதாரியாச்சுதேகாண்
மாண்டிடத்துமாண்டு மண்ணுளுந்துப்போகாமல்
எழுப்பிவிட்டதோஷமடா இத்தனையும்பேசுகிருய்
ஆகடியும்பேசுதற்கு அடுக்குமோஉந்தனுக்கு
என்றதுசொல்லியே நடந்தாளிளங்கொடியாள்
வாயுவேகமாகவேதான் வந்தாளேமண்டபத்தில்
பவளக்கொடிமாதின் பாதத்தில்தெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்துக் கன்னியருமேதுரைப்பாள்
மார்பின்சரப்பளியை மன்னவனைப்போய்கேட்டேன்
என்னென்றுசொல்லி ஈடிழுவான்சொன்னதெல்லாம்
பொழுதுசரிந்து போகிருமரண்மனைக்கு
மார்பின்சரப்பளியை மன்னவனேதாருமென்றேன்
அவன்-வம்பானவார்த்தைகளு மிடும்பானபேச்சுகளும்
ஈடழிவான்சொன்னசொல் ஏதென்றுநானுரைப்பேன்
என்றுசொல்லதாதியர்கள் ஏதுசொல்வாள்பவளக்கனி
அப்போதேசொன்னேன் தப்புவருமென்றுசொல்லி
அவனையெழுப்புவது ஆகாதென்றேசொன்னேன்
நமக்குவினையாச்சே நாம்சொன்னசொல்மெய்யாச்சே
எந்தன்சரப்பளிபோனுலும்போகட்டும்
மாளிகைக்குப்போவோம் மாதேபயணமிடு
என்றவள்சொன்னவுடன் இள்விஜயனருச்சுனனும்
அச்சுதானந்த ரையர்முகம்நோக்கி
என்னவடிவுநான் எடுக்கவென்றுயென்தோழா
அன்னத்தின்மேலே ஆசையுண்டுமாதருக்கு
நீர்-வேடனைப்போலாக வேஷமெடுங்காணும்
என்னைவிலைகூறியே எடுத்துப்போஏந்திழைமுன்

பார்த்தாசைப்பட்டல்லவோ பரிந்துவிலைகேட்பாள்
ஆயிரம்பொன்னென்று அவள்கையிலேகொடுப்பீர்
ஊருக்குநேர்கிழக்கே விநாயகர்கோவிலண்டை
அங்கேபோய் நீரிருங்காண் அச்சுதரே நான்வாரேன்
என்றுமாயன்பெருமாளை மனதிலேதானினைத்தான்
ஆயன்பெருமாளை அப்போ நினைத்தானே
எம்பெருமாள்மேகவர்ண ஏழுலகளந்தமாயா
முட்டையின்குஞ்சை முகமறியாப்பாலகனை
பிட்டுவளர்த்தீரே பிரபலியமாகவென்று
மூக்காலேமுள்பொறிக்கி முழுமரத்தில்கூடுகட்டி
காக்கையின்குஞ்சுகளை கருதிவளர்த்தீரே
உன்னையேநம்பி உயிர்கொண்டுலாவுகிறேன்
பவளக்கொடியைநான் மணமாலைசூட்டுகிறேன்
அன்னவடிவாக ஆண்டவனே நீர்கொடென்றான்

ஸ்ரீகிருஷ்ணதேவர் அருச்சுனனுக்கு அன்னவடிவு கொடுத்தல்.

அருச்சுனன்தானினைக்க ஆயனதுவறிந்து
அன்னவடிவாக ஆயன்வரங்கொடுத்தார்
ஆணலழகுமன்னன் அன்னத்தைப்போலானான்
செட்டையழகென்ன சீருடையநெற்றியென்ன
காலினழகென்ன காதுமடியழகென்ன
மூக்கினழகென்ன மூனைமயிரும்பாவனையும்
கூவுங்குரலழகும் குயிலோசைபோலிருக்கும்
அருச்சுனராஜனவன் அன்னவடிவானான்

ஸ்ரீகிருஷ்ணதேவர் வேடவுருவமெடுத்தல்.

அச்சுதானந்தனையர்பெருமாளும்
காட்டுக்கிழங்கெடுக்குங் கனவேடன்போலானார்
கால்செருப்புந்தோல்குல்லாவும் கைதனிலேமான்வலை
பன்றிகுத்தும்பல்லாடிப் பாருசமுங்கைப்பிடித்து
கோட்டையிட்டதுப்பாக்கி குண்டுகுழல்கைப்பிடித்து

கருநாயுஞ்சங்கிலியும் கைதனிலேதான்பிடித்து
அன்னத்தையேந்திக்கொண் டவன்வாரான்காணகத்து
பவளக்கொடியாள் பத்தினியாள் தானிருக்கும்
மண்டபத்துவழியாக வருகிறான்வேடனவன்
ஆரணங்குதோழிமார் அன்னத்தைத்தான்பார்த்து
ஆரடாவேடுவனே அன்னத்தைவிற்கிறவன்
விற்கிறையோ நீசொல் வேண்டியபொன் தாரேனென
அப்படியேநல்லதென்று அழகுள்ளவேடன்சொல்ல
ஓடியேவந்தார்கள் உத்தமிமுன் தாதியர்கள்
ஆரோஒருவேடன் அன்னத்தைவிற்கலுற்றான்
அன்னத்தைப்பார்த்தால் அழகாயிருக்கிறது
கண்ணிட்டுபார்க்கக் காணமுடியாது
வைத்துவளர்க்கலாம் வாங்குமம்மா ஆச்சியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னநடைமாது
அந்தநல்லவேடுவனை அழைத்தோடிவாருமென்றாள்
ஓடினாள் தாதியரும் ஒருநொடியில்வேடனண்டை
ஆரடாவேடுவனே ஆச்சியழைக்கிறாள்
அன்னத்தைக்கொண்டுவா அழகுள்ளவேடுவனே
என்றதுசொல்லையிலே இசைந்துவழிநடந்து
பவளக்கொடியாள் பத்தினியாள்முன்னேவந்து
கண்டாள்பவளநல்லாள் கட்டழகியன்னமதை
என்னப்பாவேடுவனே என்னவிலைசொல்லுமென்றாள்
ஆயிரம்பொன்கொடுத்தா லன்னம்தருவேனென்றான்
அன்னத்தைவாங்கி அழகாய்மடியில்வைத்தாள்
மூக்கினாலர்சுனனு முலைமார்பில்குத்தலுற்றான்
மார்பின்ஸ்தனத்தையவன் வாயல்பிடித்திழுப்பான்
முகத்தோடுமுகமணைப்பான் முத்தங்கொடுத்திடுவான்
பவளக்கொடியாளும் பத்தினியேதுசொல்வாள்
என்னடாவேடுவனே இப்படிமேல்விழுகிறது
ஆயிழையாள் தங்கை அவள்வளர்த்த அன்னமிது
பெண்டுகளென்றால் பிரியமாய்மேல்விழுமே



ஆசையால்முத்தமிட்டு அணைத்துவிளையாடும்
சீராய்வளத்திடென்று சொல்லிவழிநடத்தான்
அன்னமெப்போவுண்டுதோ இரைகளெடுத்துதோ
போஜனங்கள்கொண்டுவாடி என்றாளேபொற்கொடியும்
மாம்பழம்பலாப்பழமும் வாழைப்பழங்களும்
கரிவாழைசெவ்வாழை காட்டுவிளாம்பழமும்
கொண்டுவந்துவைத்தார்கள் கொம்பனையாள்முன்பாக
அன்னத்துக்கூட்டியே ஆவல்தெளியவைத்து
ஆரடிதாதிகளே அழையுங்கள்தச்சனைத்தான்
ஈழத்துத்தச்சனை இச்சணமே அழையுமென்றாள்
ஓடினார்தாதியர்கள் ஒருநொடியிலிட்டுவந்தார்
வந்துபணிந்தானே வரிசையுள்ளதச்சனவன்
என்னையழைத்தது ஏதுகாரணமென்ன
அன்னமிதுதானிருக்க அழகுகூண்டுபண்ணுமென்றாள்
சொன்னளவில்தச்சனவன் சீக்கிரத்தில்செப்பனிட்டு
சோடித்துவைத்தவனுந் தெண்டனிட்டுபோய்நடக்க
அன்னத்தைதானெடுத்து ஆவலுடன்முத்தமிட்டு
கூண்டிலடைத்தவளுங்கொப்பெனவேதானெழுந்தாள்
ஏறினாள்பல்லக்கில் எடுத்தார்நெடுங்குடைகள்
பக்கம்நிறைந்தார்கள் பாங்கிகளுந்தோழிகளும்
சுத்திநிறைந்தார்கள் தோழிகளும்மூப்பிகளும்
ஆனையின்மேல்பேரிகை அடிபடுதுஓசையுடன்
ஒட்டையின்மேல்நகைபத்து ஓசைமுழங்குது
மேளதாளந்தான்முழங்க மொய்குழலும்வாராளே
காடுகடந்து கரியமலைதான்கடந்து
வனமாய்வனங்கடந்து வாழ்மனைக்குவாராள்
தெந்துகடந்தே தெருவீதிதான்கடந்து
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
அங்காடிவீதி அரமனையுந்தான்கடந்து
மாடந்தெருவிதி மயிலிணையுந்தான்கடந்து
கோபுரவாசலண்டை கொம்பனையாள்வந்துநின்றாள்

மாளிகையுள்ளே நுழைந்தாள் கொலுமண்டபத்தில்
சிங்காரமண்டபத்தில் தேன்மொழியாள்போய்ச்சேர
அந்திநேரமாச்சுது ஆதித்தன்போய்மறைந்தான்
பொழுதுமறைந்தது போதவிருளாச்சு
ஆரடிதாதிகளே அலங்காரத்தோழிகளே
அன்னத்தைக்கொண்டுவிலை அறிவீர்கள் தாதியரே
மாடத்தில்கூடத்தில் கட்டாதேமங்கையரே
நற்பவளத்தூணு நடுவாகக்கட்டுமென்றாள்
சகலமண்டபத்தில் தான்வைத்துக்கட்டலுற்றார்
பாரித்திருப்பானே பாரமெத்ததோகைக்கு
அடி. அக்கமாரேதங்கையரே அன்னமெத்தபாரமது
மஞ்சமலங்கரித்து பண்டபத்துச்சங்கிலியால்
வைத்திழுத்துக்கட்டினார்கள் மன்னவருச்சுனனை
பவளக்கொடியாளுடைய பஞ்சணையின்மேலாக
நற்பவளத்தூணருகில் நலமாகக்கட்டினார்கள்
பவளக்கொடியாளும் பத்தினியாளப்போது
தீர்த்தங்கள்வாங்கியே திருவாய்முகங்கழுவி
போஜனங்களுண்டு பொடியள்ளிகை துவட்டி
பஞ்சணைமெத்தை படுக்கையறைசோடியென்றாள்
கடுகவெழுந்தார்கட்டழகி தாதியர்கள்
கண்மூன்றுடையகனவ்யிரக்கட்டிலிட்டு
மெத்தைபடித்திட்டு மேலேயுணைகோலி
காம்பரிந்தஐங்கலப்பூ கட்டிலின்மேல்பரப்பி
கால்கோட்டைகைகோட்டை இட்டந்தகாரிகைக்கு
ஒருந்தலைக்காணி ஒய்யாரப்பஞ்சணையாம்
தங்கத்தலைக்காணி சகலாத்துதழுவணையும்
அன்னவுச்சல்மேலே அழகாகச்சோடித்தார்
அத்தர்புனுகுகளை அள்ளித்தெளித்தார்கள்
கதம்பகஸ்தூரிகளைக் கரைத்துத்தெளித்தார்கள்
சந்தனங்குங்குமமுஞ் சவ்வாதுதான்தெளித்து
சாம்பிராணிவாடைகளும் சந்தனப்புகைகொடுத்தார்

பஞ்சணைமெத்தையண்டை கம்பலதட்டில்வைத்தார்
கச்சாளிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஆராங்கிபாக்குகளு மோராங்கிவெற்றிலையும்
வாகாயிலைச்சுருளும் வாணத்துவர்ப்பாக்கும்
கொத்துதுவர்பாக்கும் கோர்வையிலைச்சுருளும்
முத்துசுட்டசுண்ணாம்பு மொய்குழற்குவைத்தார்கள்
கெண்டியில் நீருங் கொண்டுவந்துவைத்தார்கள்
குத்துவிளக்கு குடவிளக்கேத்திவைத்தார்
மாடவிளக்குமயில்விளக்குமேத்திவைத்தார்
ஆயிரம்பெருவிளக்கு வாசலிலேற்றிவைப்பார்
சோடித்தோமென்று தேன்மொழிமாதெண்டனிட
பவளக்கொடியாளும் பத்தினியாள்தானெழுந்து
வாசல்பதினெட்டுங் காக்கிரதாதியர்கள்
பத்திரங்காலென்று பஞ்சணையிற்போயிருந்தாள்
காயாகக்காய்த்தகமுகினிளம்பாக்கை
வாயாரத்தின்றவளும் மலரணையிற்பள்ளிகொண்டாள்
நிமிசாபெரியலகு நேரிசமாம்பெரியகத்தி
மந்திரவாளுருவி மார்மேலேசாத்திக்கொண்டாள்
பவளக்கொடியாளும் பள்ளிகொண்டாளப்போது
அங்கங்கேதாதியர்க ளனைவோருப்பள்ளிகொண்டார்

அருச்சுனன் அன்னவடிவைவிட்டு, தன்சுயரூபமாகுதல்.

அநந்தநெடுநாழி சென்றபிறகாக
ஆணழகனருச்சுனனும் ஆயனைத்தானினைத்து
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
கூட்டைத்திறந்தவனும் கொப்பெனவேரூபமானான்
அன்னவடிவைவிட்டு ஆண்ரூபமானவனே
பொல்லாதகாதல் புலம்புகுதுகெவுளியது
வன்குரலில்பல்லியது வலப்புரமாய்சொல்லுகுது
எழுப்பியகாதலும் ஏணணியவள்பார்த்தளவில்

ஆள்வருத்தாகவே சொல்லுகுது இக்கெவுளி
அடுத்தடுத்துசொல்வதும் ஆள்வருத்தாய்க்காணுது
இத்தனைநாளாக இல்லாதகெவுளியது
ஒருநாளுஞ்சொல்லாத வுச்சிதமாய்சொல்லுகுது
காட்டிலிருந்தவர்கள் கள்ளரோநானறியேன்
அயாசப்பட்டவளும் அழுதாற்போலேயிருந்தாள்
பின்னுமரைநாழி பொறுத்தபிறகாக
பொல்லாதகர்தல் எழும்பிற்றுபொற்கொடிக்கு
எழுப்பியகாதல் எண்ணியவள்பார்ப்பளவில்
அடுத்தடுத்துச்சொல்வது மாள்வருத்தாக்காணுவதும்
எண்ணிமனங்கலங்கி இளங்கொடியாளேதுசொல்வாள்
ஆரடிதாதிகளே அலங்காரசெங்கமலம்
பஞ்சணைமேலாகப் பாங்கியரேபள்ளிகொண்டால்
ஒருநாளுஞ்சொல்லாத வுச்சிதக்கெவுளியது
வலப்புறத்துப்பல்லி வலபுறமாய்சொல்லுதடி
கெவுளியின்சாஸ்திரத்தை ஆராய்ந்துபாரடி நீ
என்றதுகேட்டவுடன் இளங்கொடியாள்தாதியர்கள்
அவளறிந்தசாஸ்திரத்தை ஆராய்ந்துபார்க்கலுற்ருள்
ஆள்வருத்தாய்காணுகுது ஆச்சியமேயென்னசொல்ல
ஆரோதெரியாது ஆள்வருத்தாய்க்காணுகுது
அவ்வார்த்தைகேட்டுமவளாரணக்கேதுரைப்பாள்
வாசல்பதினெட்டு காத்திருக்குமந்திரிகள்
பத்திரமாகவே காத்திருங்கள்பைங்கிளியே
எச்சரிக்கையாகவே இருங்களடிகாவல்
சத்தமுண்டானல் தலையைத்தரித்திடுவேன்
காவலுடையவர்க்கு கட்டுதிட்டப்பண்ணினுள்
பவளக்கொடியாள் பத்தினியாள்சொற்படிக்கு
பதினெட்டுவாசலுள்ளோர் பத்திரமாய்க்காக்கலுற்ருர்
அன்னவூஞ்சல்மேலாக ஆரணங்குபள்ளிகொண்டாள்
பின்னுமொருநாழி பொறுத்தபிறகாக
காண்டாவனமெரித்த காளையெழுந்திருந்து

எப்படிக்கிவ்வளுடனே இணங்கிமருவிடுவேன்
மூச்சைப்பிடித்தவனும்விளக்கையணைத்துவிட
கொப்பனையாள்மெத்தையிலே மணிகளசைந்ததுகாண்
பொட்டெனக்கண் திறந்துபார்த்தாளேபொற்கொடியும்
மந்திரவாளாலே வீசினாள்மாதுகன்னி
முன்லாகையாகாமல் பின்லாகையால்பிடித்தான்
நற்பவளத்தூணு நடுவாகஇற்றுதங்கே
விட்டெறிந்துபோட்டு வீரமணிவாளாலே
பவளக்கொடியாளும் பத்தினியாளேதுசொல்வாள்
வானவர்களானக்கால் மாண்டுமடிந்திடுவார்
மனுஷரூபமானக்கால் என்வாள்முனைக்குதப்பிடுவார்
என்றதுசொல்லி இளங்கொடியாள்தான்பார்த்து
பின்னுமொருநாழி பொறுத்தபிறகாக
ஆனந்தமார்பனவன் அருச்சுனராசதுரை
நித்திரைவேளையோ ராசாஉறக்கமோ
மஞ்சத்தைதான்பிடித்து மன்னனசைத்துவிட்டான்
அதுவடமுங்கிண்கிணியு மணிகளசைந்ததுகாண்
வேல்பொருந்துங்கண்ணாளும் வீசலுற்றாளந்நேரம்
வீசினவாளுக்கு வேந்தனருச்சுனனும்
முன்லாகையாகாமல் பின்லாகையால்குதித்தார்
நற்பவளத்தூணு நடுவாகஇற்றுதுகாண்
கண்விழித்துப்பார்த்தாளே கட்டழகிமாதுகன்னி
காட்டிலிருந்த கள்ளன்திருடனோ
வானவர்கள்தேவரிங்கு வந்தாரோநானறியேன்
மஞ்சம்புரளுவதேன் மணிகளசைவானேன்
வானவர்கள்தேவரென்றால் வாள்முனைக்குத்தப்பிடுவர்
ஆண்ரூபமானால் அவர்பிழைக்கபோகிறதில்லை
ஏறெடுத்துபார்த்தாளே இளங்கொடியாளருச்சுனனை
மன்னன்முதுகிலே மச்சரேகைகண்டாளே
அப்போவிசையன் அருச்சுனனுமேதுரைப்பான்
உன்வாசலுக்குவானவர்கள்தேவரும்வாராரோ

நான்-தேவாதிபிண்டமடி தேர்விசையனர்ச்சுனண்டி
பேர்பெற்றுடைய பெருமாளுடைமைத்துனண்டி
மாயன்பெருமாளுக்கு மைத்துனன் நான் தாண்டி
பல்லொளியைக்காட்டினுன் பவளக்கொடியாட்கு
சோர்ந்துதியங்கியவள் சொரனே தப்பிகீழ்விழுந்தாள்
ஆணல்முகுமன்னன் அர்ச்சுனன் தானெழுந்து
சாயமணிக்கவுரி சந்தனத்தாலூதுவத்தி
வீசினன்களைதெளிய வெண்சாமரைக்கவுரி
கற்பழியாகன்னியரும் கற்பழிந்துபோனேனே
கற்பழிந்துபோனேனென்று கன்னிபுலம்புகிறள்
அப்போவிசையன அருச்சுனனுமேதுசொல்வார்
நீதானேகற்பழிந்தாய்நேரிழைநாயகமே
கற்பழிந்தமாதர்களை கன்னியரேசொல்லுகிறேன்
தீயிற்பிறந்தவளும் தென்னுட்டான்பாவையரும்
மேகம்பயின்றெடுத்தமின்னெளிநாயகமும்
பார்மண்டலமாளும பார்ப்பானமங்கையரும்
நாகம்பயின்றெடுத்த நறுநுதலாள்கன்னியரும்
அச்சுதன்தங்கையவள் ஆயனங்குசுபத்திரையாள்
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியல்லியரும்
நான்-கற்பழித்தமாதர்கள் கணக்குமிதங்களில்லை
என்றதுகேட்டு இளங்கொடியாளேதுசொல்வாள்
எத்தேசகாலமும் இதுவேதொழில்தானே
எப்போதுமெந்தனுக்கு இதுவேதொழில்தாண்டி
குருகுலவம்மிஷத்தில் குந்திவயிற்றிலே
ஐவருடன்பிறந்தேத னந்தவாழ்மார்பன்
அவனிமுழுதும் ஆளுகிறார்தருமலிங்கம
நான்தேவிகளைக்கொள்கிறதுஞ்சேயரைப்பெறுகிறதும்
இதுதொழிலாகஇருக்கிறேனேந்திழையே
மன்னவருந்தேவியரும் பனதுமூரவானபின்பு
உன்மேல்மயலாகி உள்ளமுருகுதடி
அன்னவடிவுதான் கொண்டேனே ஆரணங்கே

வேடனார்கைதனிலேவில்லையாகக்கொண்டாயே
அதினாலுஞ்சாடை யறியாமற்போனாயடி
என்-மூக்கினாலுன்மார்பை குத்தினேன்மங்கையரே
உன்-மார்சதையைக்குத்தி வருத்தேனடிமங்கையரே
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனாயடி
ஆளானுந்தேவியுமாய் அக்காட்டில்தானிருந்தேன்
கதண்டுகொட்டிச்செத்தவனைப்போலாகநானிருந்தேன்
பவளக்கொடியறுத்து கட்டிவைந்தாய்பத்தினியே
கட்டுக்கொடியை யறுத்தேனடிமங்கையரே
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனாயடி
ஆனைகட்டுஞ்சங்கிலியா லாரணங்கேகட்டிவைத்தாய்
சங்கிலியைநானறுத்துப் போட்டேனேதையலரே
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனாயடி
உன்மார்பின்சரப்பளியால் வரிந்தெனைகட்டிவைத்தாய்
உன்தாதியரை நீயனுப்பி வாங்கிவரச்சொன்னாயே
சொல்லாதவார்த்தையெல்லாஞ்சொல்லியனுப்பினேன்
உன்னை திட்டியனுப்பினண்டி தீங்காகச்சொன்னேண்டி
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனாயடி
அன்னவடிவுதானெடுத்தேனே ஆரணங்கே
வேடனார்கொண்டுவர விலைகொடுத்துவாங்கினையே
உன்-முத்துஸ்தனத்தைநான் குத்திவலித்தேனே
மார்பின்சதையை வலித்தேனடிதையலரே
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனாயடி
வேடனைப்போலாக வந்தவனுமென்தோழன்
அன்னத்தைக்கொண்டு அரன்மனையிற்கட்டிவைத்தாய்
பவளக்கால்மண்டபத்தில் பத்தினியேகட்டிவைத்தாய்
அன்னவடிவைவிட்டு ஆண்ரூபமானேண்டி
பஞ்சணைமெத்தையை அசைத்தேன்மணியசைய
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனாயடி
அழகேபெருதுனக்கு ஆண்மைகள்போதாது
மகுடத்துரைச்சியவள் வாழவரசியல்லிநல்லாள்

அல்லியவளுடைய ஆண்மையுனக்கில்லையடி
இவையெல்லாஞ்சொல்லியே சிரித்தானிளவிசையன்
பவளக்கொடிமாது பத்தினியாளேதுசொல்வாள்
தோழரும் நீருமாய் வந்தேனென்றீர்சுந்தரரே
அருகேவந்ததேழரவர் ஆணழகரெங்கேயென்றாள்
ஊருக்கு அப்பாலே பிள்ளையார்கோவிலண்டை
பிள்ளையார்கோவிலண்டை யிருக்கிறாரென்தோழர்
அவரையழைத்துவா ஆணழகாதோழனைத்தான்

பவளக்கொடியாள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை யழைத்துவர அர்ச்சுனராசனை யனுப்புதல்.

என்றதுகேட்டு இளவிசையனேதுசொல்வான்
எந்தவழியாகஇளங்கொடியேநான்போவேன்
சுரங்கத்துக்குள்ளாகச் சுருக்காய்நடவுமென்றாள்
அப்படியேநல்லதென்று அர்சுனனுந்தானெழுந்து
சுரங்கத்துக்குள்ளாகச் சுருக்காய்நடந்தானே
கோட்டைகடந்தானே கொத்தளமுந்தான்கடந்து
பிள்ளையார்கோவிலண்டை போரானேவாள்விஜயன்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனராசனை நினைத்துப்புலம்பல்.

அச்சுதானந்த ரையர்புலம்புகிறார்
ஆருயிர்த்தோழனே அருச்சுனனேயென்செய்வேன்
உன்-உண்ணர்தருமாரயர் அனுப்பினாரென்பிறகே
இருவருமாகவே இருந்துதீவுதனில்
உன்னையிழந்துநான் ஊர்வழியேபோவேனோ
மாதர்மேலாசை மயக்கமெடுத்தீரே
அவளை-கூடியணையயிலே காவலர்கண்டாரோ
பார்த்தர்பெருமாளே வுன்பதட்டமறிவேனே
நீ-கட்டியணையயிலே காவலர்கண்டாரோ
உன்னைக்-கட்டிப்பிடித்தாரோ காவலிலேவைத்தாரோ
அவளைக்-கூடியெழுந்திருக்கக் கோடிபேர்வந்தாரோ
வெட்டியெறிந்தாரோ வீரமணிவாளாலே

உத்தமவீரியனேஉயிர்க்கழுவில்வைத்தாரோ
நீ-மாண்டுமடிந்தாயோ உன்வயிர்முடிசிந்தினதோ
மன்னர்பெருமாளுக்கு வாட்டங்களுண்டானல்
சந்தனவடிவழகர் தருமருக்கேதுசொல்வேன்
வெற்றிமதயானை வீமருக்கென்செய்வேன்
ஈரல்புகுந்தயிராட்டையருக்கென்னசொல்வேன்
தோராவடிவழகி துரோபதைக்கென்னசொல்வேன்
மந்தாரக்குந்தியற்கு மாதாவுக்கென்னசொல்வேன்
அவர். அங்கேபிழையாரோ ஆணழகாஎன்செய்வேன்
காணவும்போரேனே காண்டீபங்கொண்டவனே
பாண்டிப்பெருமாளே பார்க்கவும்போரேனே
என்றுசொல்லிமாயவரும் ஏங்கிப்புலம்பலுற்றார்
அந்தச்சமயத்திலே அங்குவந்தான்வாள்விசையன்
ஏன்காணும்மச்சுதரே ஏங்கிப்புலம்புகிறீர்
என்-சமர்த்துகளும்சேவகமும் தாழ்வாகப்போறதில்லை
எந்தவிதத்தாழு மீடுபெற்றுநான்வருவேன்
என்றதுகேட்டப்போ ஏதுசொல்வார்மாயவரும்
என்னவடிவாயிருந்தீர வளுடனே
அன்னவடிவாகஅவளுடனேசேர்ந்தீரோ
ஆண்ரூபமாகி மாதரைச்சேர்ந்தீரோ
மனிதரூபமாகி மாதரைச்சேர்ந்தீரோ
என்னவடிவா யிருந்தீரவளுடனே

அருச்சுனன் பவளக்கொடியாள் சேதியைச்சொல்லல்.

என்றதுகேட்டுமப்போ இளவிசையனேதுசொல்வான்
அல்லகாணச்சுதரேஐயர்பெருமாளே
அன்னவடிவாக இருந்தேனவளிடத்தில்
பவளக்கால்தூணிலே பத்தினியுங்கட்டிவைத்தாள்
பஞ்சணைமெத்தையிலே பள்ளிகொண்டாள்பத்தினியும்
அர்த்தராத்திரிவேளையிலே நானெழுந்தேனச்சுதரே
அவள்-நித்திரைசோதித்து நினைவறியவேணுமென

அன்னவூஞ்சல்தன்னை நானசைத்துவிட்டேனப்போ
அசைத்துவிட்டேனப்பொழு தவள்கையில்வாளுருவி
முன்லாகையாகாமல் பின்லாகையால்குதித்தேன்
மனிதரூபமானுக்கால் வாள்முனைக்குதப்பார்கள்
தெய்வரூபமானுக்கால் திரும்பிப்பிழைத்திடுவார்
வந்தவராரென்று வாய்மொழியைக்கேட்கலுற்றாள்
நான்-தேவாதிபிண்டமடி தேர்விஜயனருச்சுனண்டி
பேரால்புகழ்பெற்ற பெருமாளவர்மைத்துனண்டி
மாயன்பெருமாளுக்கு மைத்துனன்நான்தாண்டி
இவ்வார்த்தைசொன்னேனிளங்கொடியாள்மாதருக்கு
பல்லொளியைநான்காட்டிப் பார்த்துநகைத்திட்டேன்
கண்டுமயங்கிவிட்டாள் கட்டழகிகன்னியவள்
கோபித்துத்தான்களைந்தாள் தோகையிளங்கொடியும்
கூடிமருவினேன் குங்குமச்சாலையிலே
மருவிப்பிரிந்தேன் மாதருறவானேனே
உம்மையழையுமென உத்தாரம்பண்ணிவிட்டாள்
அவள்மாளிகைக்குப்போக வாருங்காணச்சுதரே
அப்படியேயர்ச்சுனரும் ஆணழகரிருவருமாய்
சல்லடந்தான்தொடுத்துத் தட்டிவரிந்துகட்டி
தட்டியின்மேலொட்டியாணம் சதுராய்வரிந்துகட்டி
முத்தினுருமாலை முகமிலங்கக்கட்டினார்கள்
சட்டைகமானுகளும் தரித்தாரழகுபெற
பொன்முத்துப்பட்டாடை போத்தினார்மேலாக
அப்போதருச்சுனனும் ஆணழகனேதுசொல்வான்
அச்சுதானந்த ரையரேயென்மாமா
சரப்பளியும்மூட்டையு மெடுத்துக்கொண்டுவாருமென
அப்படியேயச்சுதரும் அழகுமூட்டைதானெடுத்து
இருவருமாகவே இசைந்துவழிநடந்தார்
சுரங்கத்துவழியாகத் துருசாகப்போய்நடந்தார்
பவளக்கொடியாள் பத்தினியாள்கோட்டையிலே
உள்வாசல்போய்நடந்தார் உத்தமவீரியர்கள்

அவள்-சிங்காதனந்துக்கு முன்பாகவந்து நின்றார்
வந்தவனைக்கண்டாளே மாதுவிளங்கொடியும்
பத்தியுடன்பத்தியுடன் பாதஞ்சரணமென்றாள்
கொண்டுவந்தமுட்டையைக் கொற்றவனார்கீழேவைத்து
கொம்பனைக்கெதிரேவந்து கொற்றவர்கள் தானமா
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
வேல்பொருதுங்கண்ணாளும் வேந்தர்களைப்பார்த்து
உங்களிருவருக்கும் இதுவேதொழில்தானோ
எங்களிருவருக்கும் இதுவேதொழில்தானென்றார்
முட்டையென்னவென்று கேட்டாளிளங்கொடியும்
அப்போ-அச்சுதானந்த ரையருமேதுசொல்வார்
அர்ச்சுனர்முன்னாலே அன்னவடிவெடுத்து
உன்-கொலுமுகச்சாவடியில் கொம்பனையேமுன்னேவர
அவர்-ஆடலும்பாடலும் அதிசயத்தை நீபார்த்து
அன்னமென்றுசொல்லி ஆரணங்கே நான்பிடித்து
வேடனுமாக விலைகூறிவந்தேனே
என்னவிலையென்று இளங்கொடியே நீகேட்க
ஆயிரம்பொன்னென்று ஆரணங்கேசொன்னேனே
நீ-அன்னமொருதட்டும் பொன்னொருதட்டுமாக
பொற்கொடி நீகொடுத்த பொன்முட்டை அம்மாவிது
காண்டீபனருச்சுனரை கானகத்தில்கட்டிவைத்த
உன்-மார்பின்சரப்பளியை மாதாவேயிந்தாவென்று
கருநீலப்பூங்குழலாள் கையிலேதான்கொடுத்தார்
அப்போதுபெண்மயிலா ளவர்கையிற்றான்வாங்கி
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடியாளப்போது
மெத்தவுமிளப்பா யிருக்கிறீர்வேந்தர்களே
போஜனங்களெங்கேயெனப் பொற்கொடிகேட்டாளே
அப்போ-ஆயர்பெருமாளும் அரிராமர்தான்கேட்டு
அல்லியிடத்தில் அங்கேபுசித்ததுதான்
மூன்றுநாளாச்சுது மெல்லியரேநான்பொசித்து

பவளக்கோடியாள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கும் அர்ச்சுனனுக்கு விருந்திடல்.

இவ்வார்த்தைதான்கேட்டு இளங்கொடியாள் தானங்கு
அவளாக்கப்பதமறியா ளரிசிபதந்தானறியாள்
அப்படிப்பட்ட ஆரணங்குமப்போது
பட்டாடைதான்வாங்கிப் பாவாடையுள்ளுடுத்தி
அடியில்சமைக்க ஆரணங்குதானினைந்து
பாண்டத்தைக்கழுவி பனிநீருலைவார்த்து
சின்னசம்பாதன்னரிசி தீட்டியுலையிலிட்டாள்
முத்துப்போல்சாதம் வடித்தாளிளங்கொடியாள்
நத்தியென்னும்பூசனிக்காய் நாலுவிதக்கறிசமைத்தாள்
வாழைக்காய்பொரியலிட்டாள் வழுதலங்காய்க்குழம்பு
பூக்கங்காய்பொரியலிட்டாள்புடலங்காய்தான்பொரியல்
கத்தரிக்காய்தான்பொரியல் கருணைபுளிக்குழம்பு
கொத்தவரைக்காய்கள் குலையோடேபொரியலிட்டாள்
பாவக்காப்பச்சடியும் பயிற்றங்காப்பொரியலிட்டாள்
அத்திவிறகொடித்து தித்திக்கப்பால்காச்சி
புத்துருக்குநல்நெய்யும் பொன்போல்பருப்புகளும்
அதிரசமுந்தேன்குழலும் அறுசுவைபதார்த்தங்களும்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபோஜனமும்
ஆயிரத்தெட்டு அரிக்கரிபொரிக்கரியும்
கடுகச்சமையலிட்டாள் கன்னியிளமயிலும்
ஆச்சுதுபோஜனங்கள் அமுதுண்ணவாங்களென்று
பாளையுந்ஓலையும் பக்குவமாய்க்கைகொடுத்தாள்
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
தீர்த்தநீர்வாங்கி திருமுகஞ்சுத்திசெய்து
பூசைபண்ணுமண்டபத்தில் புண்ணியர்கள்வந்துமே
வாழையிலைபோலே வழித்திட்டார்வெண்ணீறு
கோவையிலைபோலே குழைத்திட்டார்வெண்ணீறு
பூசைமுடித்து புகழ்வேந்தர்வீரியரும்

போஜனமண்டபத்தில் புண்ணியர்கள்வந்திருந்தார்
வட்டமணைபோட்டாள் வந்தவர்களிருவருமாய்
வாழையிலைபோட்டு வடித்தாளேசாதமது
சுத்திக்கரியும்வைத்தாள் தோகையிளங்கொடியாள்
அள்ளிப்பருப்பையிட்டா ளதுகண்டுநெய்வார்த்தாள்
குளிர்ந்தஜலம்வெந்நீருங் கச்சாயங்கனிவர்க்கம்
இத்தனையுந்தான்படைத்து எந்திழையாளப்போது
உண்ணுங்களென்று உபசாரணைசெய்யலுற்றாள்
போஜனங்களுண்டு பொடியிட்டுக்கைதுடைத்து
சிங்காதனத்திலே தேர்விஜயன்வீற்றிருந்தான்
காச்சாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஆரங்கிப்பாக்குகளும் மோரங்கிவெற்றிலையும்
அள்ளிக்கொடுத்தாளே ஆரணங்கிருவருக்கும்
பவளக்கொடிமாது பத்தினியாளேதுசொல்வாள்
ஆயரோ அச்சுதரே அண்ணவே நீர்கேளும்
சேராம்புராஜாக்கள் செய்தபெருந்தவத்தால்
பவளக்கொடிமேலே பத்தினியாள்பெண்பிறந்தேன்
பதினறுவருஷமாய் பட்டமாசாண்டேன்
கொள்ளவருவார்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் வர்னலட்சங்கோடியுண்டு
நான்-மாலைதரியாமல் பணமாலைசூட்டாமல்
நித்யகன்னியாகவே யிருந்தேனிந்நாள்வரைக்கும்
அருச்சுனராலே யழிந்துதேயென்தவங்கள்
பத்தினிசபதமிது பாழாய்முடிந்ததுவே
எந்தன்விதிப்பயனை எதென்றெடுத்துரைப்பேன்
கதியைத்துலைக்கவல்லேன் காவேரிநீந்தவல்லேன்
என்விதியைத்துலைக்குகைக்கு வெல்லவகையறியேன்
சேராம்புராஜருக்கு தேன்மொழிஎன்னசொல்வேன்
இப்படியாயே யிளங்கொடியாள் தான்புலம்ப
அச்சுதாநந்தரும் ஆரணங்கைத்தான்பார்த்து
என்னென்றுசொல்லி எடுத்துரைப்பார்மங்கையர்க்கு

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பவளக்கொடியாளுக்குக் கனவுசொல்லுதல்.

பவளக்கொடிமாது பத்தினியென்னுச்சி
என்னைப்பிறப்பித்த ஈஸ்வரனும்மீஸ்வரியும்
அக்கினியாத்துக் கருகாகவேவந்து
சூலமொருகையிலே கபாலமொருகையிலே
மானுமொருகையிலே மழுவுமொருகையிலே
விரித்தசடையும் வெண்புலித்தோலாசனமும்
பக்கங்கொலுவிருக்கும் பார்வதிநாயகமும்
கங்காபவனியருங் கவுரிதரித்தவனுர்
திருக்கண்ணுடையவருந் திருநீறுதானணிந்து
வெள்ளைரிஷபமேறி வித்தகரும்வந்தார்கள்
நான்-கண்டுபயந்து கடுகசரணமிட்டேன்
பங்கயஞ்சேர்கண்ணுள் பவளக்கொடிமாதே
சோரம்புராஜாக்கள் செய்ததவத்தாலே
பவளக்கொடிமேலே பாலகியையுண்டுபண்ணேன்
பதினறுபிராயமட்டும் மட்டம்தரிப்பித்தேன்
நாளை-மத்தியானவேளையிலே மாலைதரிக்கவேணும்
மாலைதரியாமல் மணமாலைசூட்டாமல்
இருந்தீரேயாமாகில் எரித்திடுவேன்பட்டணத்தை
பட்டணத்தைநீருக்கிப் பதியைக்கொளித்திடுவேன்
மெய்யாகக்கண்டேன் விழித்தேன்கனவாச்சு
இப்படிக்கண்டேனென்று ஏந்திழைநீசொல்லுமென
அப்படிக்குச்சம்மதித்தா ளாரணங்குமப்போது
போய்வாருமென்றுசொன்னுர் புண்ணியரிருவருமாய்
அப்படியேநல்லதென்றுள் ஆரணங்குபவளக்கொடி
அவ்வார்த்தைதான்கேட்டு அர்ச்சுனனும்மாயவரும்
சுரங்கத்துக்குள்ளாகத் துரிசாய்நடந்துவந்து
சுரங்கத்தைவிட்டு வடகோடிகானகத்தில்
பிள்ளையார்கோவிலண்டை உத்தமர்கள்போயிருந்தார்
அப்படிக்குத்தானிருந்து ஆரணங்குமங்கையவள்

சப்ரகூடமஞ்சத்தில் தையலவள் நித்ரைசெய்தாள்
அந்தச்சமயத்தி லாரணங்குதாதியர்கள்
அருகேபுடைசூழ அரிவையர்கள்வந்துநின்று
தட்டியெழுப்பினர்கள் தாமக்குழலாளை
அலண்டுயெழுந்திருந்தா ளாரணங்குமங்கையவள்
காம்பழுகிநிற்பதென்னக் கண்டார்கள்தாதியர்கள்
ஒருநாளுங்கருகாத மல்லிகைப்புஷ்பமெல்லாம்
காம்பழுகிநிற்பதென்ன காரணமோசொல்லுமென்றார்

பவளக்கொடியாள் கண்ட கினவை தாதிகளுக்குச் சொல்லுதல்.

பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
மஞ்சத்தின்மேலேநான் மாதர்களே நித்ரைசெய்தேன்
அந்தநல்லவேளையிலே ஆதிசிவனிங்கேவந்து
என்னை-தட்டியெழுப்பினர் தாமக்குழலாளே
அலண்டுயெழுந்திருந்து யாரென்றுநான்கேட்டேன்
உம்மைப்பிறப்பித்த உம்பர்பிரான்வந்தேனென்றார்
எங்கேவந்தீரென்று இளங்கொடியேகேட்டேனே
பதினாறுவயதளவும் பட்டமரசாண்டாய்
நீகேட்டவரம்கொடுத்தேன் கிளிமொழியேவுந்தனுக்கு
நான்மாலையிட்டுக்கொண்டதாக மங்கையரேகனவுகண்டு
மஞ்சத்தின்மேலேநான் மருவியிருக்கக்கண்டேன்
நான்கண்டகனவாலே கருகிற்றுபுஷ்பமெல்லாம்
இவ்வளவுநானறிவேன் மற்றொன்றுநானறியேன்
என்றேயிளங்கொடியா ளெடுத்துவுரைக்கலுற்றாள்
தாய்போய்வளர்த்தெடுத்த தாதியர்கள்தான்கேட்டு
மணமாலைசூட்டுதற்கு மனமுண்டோமங்கையரே
அப்படியேசம்மதித்தா ளரிவையிளங்கொடியும்
இவ்வார்த்தைகேட்க எழுந்தாரேதாதியர்கள்

பவளக்கொடியாள் கண்டகனவைக்கேட்டு தாதியர்கள் போய்ச் சேராம்புராஜர்களுக்குச் சொல்லல்.

சேராம்புராஜரண்டை தீவிரமாயோடிவந்து
முக்காலடிவணங்கி மூவிருகால்தெண்டனிட்டார்
தெண்டனிட்டமாதர்களைக் கண்டார்கள்ராஜாக்கள்
என்னைப்பணிந்ததென்ன ஏந்திழையேசொல்லுமென
கைகட்டிவாய்புதைத்துக் கன்னியர்கள்சொல்லுகிறார்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிநாயகியாள்
பதினாறுவயதளவு பட்டமரசாண்டிருந்தாள்
பட்டங்கட்டியாண்டிருந்தாள் பாருலகமத்தனையும்
இன்றையதினத்திலே இளங்கொடியாள்கோட்டையிலே
கண்டவதிசயத்தைக் கன்னியர்சொல்லுகிறோம்
பார்த்தவதிசயத்தைப் பாவையர்கள்சொல்லுகிறோம்
என்னவென்றுசொலியெடுத்துரைப்போம்மன்னர்களே
மஞ்சத்தின்மேலிருந்த மலர்கள்கருகிற்று
இதுவென்னவென்றோம் இளங்கொடியாள் நாயகியும்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிசொன்னது
தன்னைப்பிறப்பித்த சுவாமியவர்வந்துநின்று
சொற்பனஞ்சாதித்தாராம் தோகையிளங்கொடிக்கு
பதினாறுவயதளவும் பட்டமரசாண்டாய்
கேட்டவரங்கொடுத்தேன் கிளிமொழியேயுந்தனுக்கு
மணமாலைசூட்டுமென்றார் மகாதேவர்தானுரைத்தார்
கேட்டவரம்நான்கொடுத்தேன் கிளிமொழியேமானே
என்றுமுரைத்தாராம் ஈஸ்வரனாரப்போது
இப்படிக்கண்டேனென்று ஏந்திழையாள்தானுரைக்க
மணமாலைசூட்டுதற்கு மங்கையற்குமனதாச்சு
என்றுவுரைத்தார்களேந்திழைமார்தாதியர்கள்
இவ்வசனங்கேட்டார்கள் இன்பமுடன்ராஜாக்கள்
வற்றிக்கிடந்த வரள்பெரியகாவேரி
முட்டப்பெருகி முழுஆறுவந்ததுபோல்
சந்தோஷப்பட்டார்கள் தாணியாளும்ராஜாக்கள்

சோம்புராஜாக்கள் துரைகளவரேதுசொல்வார்
எங்கள்-மனதிலிருந்தபடி ஆச்சுதம்மாவுந்தனுக்கு
நாங்கள்-பண்ணுந்தபசுபலன் பலித்துதம்மாபத்தினி
மாலையிடவல்லோ வருந்துகிறேம்நாங்களெல்லாம்
எங்கள்தபசுபலன் ஈடேறிப்போச்சுதம்மா
கன்னிகழியாதார் காசினியிலாருமில்லை
அப்படியேநீயும் அழகுமணமாலையிடும்
சிந்தைகுளிர்ந்தாரே சோம்புராஜாக்கள்

சோம்புராஜாக்கள் மந்திரியை யனுப்பித் தமுக்கடிக்கும் பறையனை அழைத்துவரச் சொல்லல்.

ஆரடாமந்திரியே அறிவுள்ளவீரியனே
இன்றையபோதையிலே எந்தன்மகளார்க்கு
மணமாலைசூட்டவேணும் மங்கையிளங்கொடிக்கு
தோட்டியைத்தானழை தமுக்கோசைபோடவேணும்
வெட்டியானைத்தானழைத்து வீரமூரசறையவிடும்
மண்டலத்துராஜாக்கள் வரவழைக்கச்சொல்லுமென
ஆரடாதூதுவனே அழையடாசாம்புவனை
ஓடியழைத்தவனை ஒருநொடியில்வாருமென்றான்
சொன்னதைக்கேட்டுத் துரிதமாய்த்தூதுவனும்
என்னையழைத்தவகை யேதுகாரணமென்றான்
அப்போ-ஐம்பதுபேராஜாக்கள் ஐயமாரேதுசொல்வா
பவளக்கொடிமாது மணமாலைசூட்டுகிறாள்
பட்டத்துராஜாக்கள் பலபேருந்தானறிய
மூரசறையவாருமென்றார் முடிமன்னர்மந்திரியும்
அப்படியேநல்லதென்று நடந்தானேசாம்புவனும்
வெள்ளானைமேலாக விருதுகளைக்கட்டினான்
வெள்ளித்தமுக்கடித்தான் வெண்கலக்கொம்பெடுத்து
ஆனையேறிமாலைசூட்டி அடித்தான்பறையோசை
என்னசொல்லித்தானடித்தான் ராஜாக்கள்தான்கேட்க
சோம்புராஜாக்கள் செய்ததவத்திலே

பவளக்கொடிமேலே பிறந்திருந்தபதிவிரதை
பதினாறுவருஷமாய்ப் பட்டமரசாண்டாள்
மணமாலைசூட்டுதற்கு மாது நினைவானாள்
கொம்பனையைக்கேட்டவர்கள் கோடானகோடியுண்டு
இன்றையநாள்வரைக்கும் மணமாலைசூட்டாமல்
நித்தியகன்னியாகவே இருந்தாளிந்நாள்வரைக்கும்
இப்போ-மணமாலைசூட்டுதற்கு மாது நினைவானாள்
ஆருக்குக்கிடைக்குமோ அன்னநடைமாது
திங்கட்கிழமையிலே திகழ்புனர்பூசத்திலே
இருபது நாழிகையில் எழில்மங்கிலியஞ்சூட்டுதற்கு
மனதுள்ளராஜாக்கள் வந்திடுங்கள்பந்தலுக்குள்
மண்டலத்துராஜாக்கள் மந்திரிகள்தான்கேட்டார்
ஆனைவோறுமறியவென்று அடித்தான்பறையோசை
அடித்தான்பறையோசை அந்நகரந்தான்கேட்க
மண்டலத்துராஜாக்கள் மந்திரிகள்தான்கேட்டார்
திக்கிலுள்ளராஜாக்கள் துரைகளெல்லாங்கேட்டார்கள்
பிள்ளையார்கோவிலண்டை இருந்ததொருபோர்விஜயன்
அடித்தபறையோசை ஆணழகன்கேட்டுவிட்டான்
சந்தோஷப்பட்டல்லவோ சரீரங்கள்பூரித்து
என்னவடிவாகப் போவோம்நாம்பந்தலுக்குள்
ஆரை நினைக்கலுற்றான் அளவற்றசிந்தையிலே
மாயன்பெருமாளை மனதிலேதானினைத்து
அடியளந்தமாயவனே ஐயாசரணமையா
காக்குங்குலதெய்வமே கரியமால்மைத்துனரே
வெண்ணெயுண்டசெவ்வாயா வெற்றிகொடுக்குந்தூயா
கண்ணுக்குநிமைபோலே காக்கிறேனென்றுசொன்னீர்
இதுவேளையிதுசமய மேந்திழையைக்காருமையா
பவளக்கொடியாளை மணமாலைசூட்டுதற்கு
மாலைவந்துமார்பில்விழ வரந்தாருமெந்தனுக்கு
காக்கையின்குஞ்சுபோல் கடுகிவளர்த்தாயே
முட்டையின்குஞ்சுகளை முகமறியாப்பாலகரை

ஸ்ரீகிருஷ்ணதேவர் அருச்சுனனுக்கு
கிழப்பிராமண ரூபங்கொடுத்து மாலையிடுதல்.

பிட்டுவளர்த்திரே பிரபலியமாகவென்று
உந்தன்தயவாலேயல்லோ வுயிர்கொண்டுலாவுகிறேன்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
மணமாலைசூட்டுதற்கு வடிவெனக்குத்தாருமென்றார்

ஸ்ரீகிருஷ்ணதேவர் அர்ச்சுனனுக்குக் கிழப்பிராமண ரூபங்கொடுத்தல்.

அந்தச்சமயத்தில் அருச்சுனராஜதுரை
தொண்ணூறுஞ்சென்ற துவண்டகிழவனானர்
நானூறும்பத்துஞ்சென்ற நரைத்தகிழவனானர்
தும்பைப்பூப்போலே துவண்டகிழவனானர்
நாணற்பூப்போலே நரைத்தகிழவனானர்
பண்ணைப்பூப்போலே பழுத்தகிழவனானர்
குஷ்டரோகிபிராமணர்போல் கொற்றவருமானாரே
வெள்ளரிப்பழம்போலே வெடித்ததுதிரேகமெல்லாம்
வெடித்தரணத்தில் புழுகுகள்நெளியுது
சீழுஞ்சிலைதண்ணீருஞ் சிந்துதேதிரேகமெல்லாம்
ஒருகண்ணுபொட்டை ஒருகாலுநொண்டியானர்
சொட்டைத்தலையொன்று ஒடிந்ததெண்டாயுதம்
செல்லெறித்தபுத்தகத்தைச் சேரவேகைபிடித்து
பட்டயம்போலாக பரந்ததிருநாமமிட்டார்
அச்சுதானந்தரும் அறியாதபிள்ளையானர்
பிராமணரூபமது யெடுத்தானேபுண்ணியனும்
பிள்ளையார்கோயிலண்டை இருந்தாரிருவருமாய்

சேராம்புரராஜாக்கள் கலியாணஞ் செய்வதற்கு பந்தலலங்கரித்தல்

அந்தச்சமயத்திலே சேராம்புராஜாக்கள்
வாசலலங்கரித்தார் மணமாலைசூட்டுதற்கு
முத்தைப்பிளந்தார்கள் மூன்றுங்கால்பந்தலிட்டார்
பவளம்பிளந்தார்கள் பந்தக்கால்நட்டார்கள்
வெள்ளியால்கால்நிறுத்தி வெற்றிலையால்பந்தலிட்டார்

ஈர்க்குப்பிளந்தார்கள் இருகாதம்பந்தலிட்டார்
மூங்கில்பிளந்தார்கள் முக்காதம்பந்தலிட்டார்
நாணல்பிளந்தார்கள் நாற்காதம்பந்தலிட்டார்
வன்னிமரம்பிளந்து வாசலலங்கரித்தார்
மாவிலைத்தோரணமும் மகுடநல்லதோரணமும்
அரசிலைத்தோரணமும் ஆலிலைத்தோரணமும்
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்சுங்குவிட்டு
பச்சைக்கிளிகளைப் பந்தலிலேதொங்கவிட்டார்
வெட்டிவேர்சரிவேரும் விதவிதமாய்த்தொங்கவிட்டார்
பட்டாலலங்கரித்து பாவனையாலொப்பமிட்டார்
கோத்தமுத்துதூக்கி கொலுமுகத்தில்பந்தலிட்டார்
மற்றமுத்தைப்பந்தலிலேமாணிக்கமாய்வைத்திழைத்து
வாழைமரம்கமுகுமரம் வாசலெங்குங்கட்டினார்கள்
சோலைபலாமரமும் தெருவெங்கும்கட்டினார்கள்
எங்கெங்குந்தோரணமும் எங்குந்திருவிளக்கும்
சன்னல்கள்தோறுஞ் சரங்கள்மிகக்கட்டினார்
அத்தர்புனுகுகளை அள்ளித்தெளித்தார்கள்
சந்தனமும்குங்குமமும் சவ்வாதுதான்தெளித்தார்
நிலக்கோலமிட்டார்கள் நிலத்தின்மேல்பூத்தெளித்தார்
பந்தலலங்கரித்துப் பட்டுரத்னப்பாய்போட்டார்
தங்கப்பாய்போட்டார்கள் சரிகைதலைக்காணியிட்டார்
ஆயிரமடங்குபெற்ற ஆராச்சிமணியெடுத்து
கற்பகபந்தலிலே கட்டியேதூக்கினார்கள்
இரும்புநல்லசங்கிலியால் இயல்பெறவேகட்டினார்கள்
ஆராட்சிமணிச்சத்தம் அடித்தார்களோசைபெற
ஆராட்சிமணிச்சத்தம் அந்நகரில்கேட்டிடுமாம்

ஐம்பத்தாறுதேசத்து ராசாக்கள்வருதல்.

அடித்தபறையோசை அல்லவருங்கேள்வியுற்று
ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்கள்வாரார்கள்
ஓரணியாம்பச்சைவில்லு ஒன்றுநூறாயிரமாம்

இரண்டனியாம்பச்சைவில்லு இரண்டாயிரஞ்சேனை
யானையேறுந்துரைகளெல்லாம் யானையேறிவந்தார்கள்
குதிரையேறுந்துரைகள் கொற்றவரும்வாரூர்கள்
கண்டவிடங்களெல்லாம் கருமலைபோல்யானைகளாம்
பார்த்தவிடங்களெல்லாம் பர்வதம்போல்தேரணிகள்
கண்கொள்ளாக்கடுஞ்சோலைமண்கொள்ளாமகாரதங்கள்
ஏகமாய்த்திரண்டு எல்லோரும்வாரார்கள்
பூமியதிருதங்கே பூலோகங்குலுங்கிடவே
வாரார்கள்ராஜாக்கள் மகம்மேருகுலுங்கிடவே
பிள்ளையார்கோவில் ஓரமாய்வாரார்கள்
காளையருச்சுனனூர் கண்டானே துரைகள்தன்னை
அச்சுதானந்த ஐயரே நீர்கேளும்
இத்தண்டராஜாக்கள் இச்சையுடன்வாரூர்கள்
பவளக்கொடியாளை மாமாலைசூட்டுதற்கு
அனந்தங்கோடிராஜாக்கள் ஆசையுடன்வாரார்கள்
மாயன்தயவாலே நான்மாலைசூட்டினல்
அத்தண்டராஜாக்கள் இஞ்சிதின்றகுரங்காவார்
எக்குற்றுப்போவாரே இருந்தவிடஞ்சொல்லாதே
என்றுநகைத்தவரும் எல்லோருடனடந்தார்
பார்ப்பான்வருகிறதைப் பார்த்ததுரைகளெல்லாம்
ஈழக்கிழவனவனே தூக்குவாரான்காண்
தோலும்நரம்புகளும் தொங்குதுகிழவனுக்கு
அங்கஞ்சதைகளொல்லாம் ஆடுதுகிழவனுக்கு
இந்தக்கிழவனவனே தூக்குவாரான்காண்
என்றுசிரித்தார்கள் இயலானராஜாக்கள்
கோவிந்தாவென்று கொற்றவனுங்கீழ்விழுந்தான்
தள்ளாடித்தடியூன்றி தான்வருவார் மெள்ளமெள்ள
கொக்கென்றிருப்புவார் கோழைவந்துமாரடைக்க
வம்புவாய்கொட்டிவந்த வாய்நீருசொல்லொழுக
கண்ணிரண்டுங்கீரைவிரை காதிரண்டுங்கேளாது
தூக்கியடிவைப்பாராஞ் சுழன்றுவிழுவாராம்

எடுத்தடிவைப்பாராம் இரடிவிழுவாராம்
அரும்புகள்தட்டினல் அறுபதிடம்விழுவார்
மூங்கில்வேர்தட்டினல் முப்பதிடம்விழுவார்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
இவனைக்காணுதேயல்லோ கலங்குகிருள்பவளகன்னி
மாலையிடத்தேடி மயங்குகின்ருள்மங்கையவள்
இவனைக்காணுதேதேடியல்லோ கலங்கித்தவிக்கிருள்
சோரப்புராஜாக்கள் துரைகளிடபந்தலிலே
வாகனங்கள்விட்டிறங்கி வந்தமர்ந்தாராஜாக்கள்
மணக்கோலப்பந்தலிலே மன்னவரும்வந்தமர்ந்தார்

பவளக்கொடியாளை ஸ்நானஞ்செய்வித்து ஆபரணங்களை அலங்கரித்தல்.

பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளை
ஆயிரந்தாதியாகள ஆணங்குமோடிவந்து
சலவைக்கல்மண்டபத்தில் தையலரைக்கூட்டிவந்து
பூவிரத்னமண்டபத்தில் பொற்கொடியைக்கூட்டிவந்து
தண்டையசைய சதங்கைத்திகுதிகென
கொண்டையசைய குயில்வந்துகூத்தாட
வட்டமனைமேலே மாதரசையிருக்கவைத்து
நல்லெண்ணெகொண்டு நலங்கிட்டார்பந்தலுக்குள்
சந்தனயெண்ணெகொண்டு தையலர்க்குமிட்டார்கள்
குங்குமபெண்ணெகொண்டு கூந்தலுக்குமிட்டார்கள்
முந்நூறுபிராமணஸ்திரீகள் மூன்றுநலங்கிட்டார்கள்
ஐந்நூறுபிராமணஸ்திரீகள் ஐந்துநலங்கிட்டார்கள்
மங்களப்பாடியே நலங்கிட்டார்கூந்தலுக்கு
சோபனங்கள்பாடியே நலங்கிட்டார்கூந்தலுக்கு
ஆலாத்திசுத்தியே அபிஷேகமாட்டலுற்ருர்
மஞ்சனச்சாலையிலே மஞ்சள்நீராட்டிவைத்தார்
ஒட்டுமஞ்சள் நீராட்டம் ஒளிபவள நீராட்டி
ஸ்நானங்கள்பண்ணியே தாமக்கருங்குழலாள்

நீர்காட்டிவிழ்த்தியே நெருப்பில்தலைசாய்த்து
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
பாவாடையுள்ளுடுத்திப் பட்டாடைமேல்சுத்தி
ஆனந்தமாரியற்கு அலங்காரம்பண்ணலுற்றார்
பூவாழையெண்ணெய்தொட்டே போதமயிர்கோதி
சீவியேசிக்கறுத்து சிமில்போலேகொண்டையிட்டு
வாரிமுடித்தார்கள் மாணிக்கக்கொண்டையிட்டு
ஒவ்வொருமயிர்களுக்கு ஒவ்வொருபொன்னிதழாம்
பொன்னிதழும்பூவிதழும் போதமுடித்தகொண்டை
சுத்திமுடித்துவைத்த கொண்டைவந்துதோளசைய
தட்டிமுடித்துவைத்த கொண்டைவந்துதாமசைய
கொண்டைக்குத்தண்டையும்கொண்டைதாங்கிமாலையும்
ஆயிரம்பொன்பெற்ற அன்பானசவுரிவைத்து
கொண்டைசடைபில்லை குப்பியலங்கரித்து
ஆண்மயிலும்பெண்மயிலும் அணிந்தாரழகுபெற
பல்லியுமாழ்வாரும் பக்கத்திலணிந்தார்கள்
சந்திரபிறைசூரியபிறை தையலற்குத்தானணிந்தார்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
கண்ணுக்குமையெழுதி கஸ்தூரிபொட்டுமிட்டார்
முத்தாலேபொட்டுமிட்டு முன்னாலேதொங்கவிட்டார்
அன்னகொப்புவர்ணகொப்பு அருகுவாளிமருகுவாளி
மாணிக்கவாளி மயிர்கீழேகோலியிட
கல்லிழைத்தகம்மலுங் காதில்தரித்தார்கள்
இருதலைபட்சிகளும் இசைந்ததொருகொப்பழகும்
பத்தம்புகடிகளும் பச்சைக்கல்முருகுகளும்
மூத்தணித்தமூக்குத்தி நத்துமணிந்தார்கள்
ஒற்றைச்சரடுகளாம் ஒருபுரமாய்பொற்சரிகை
முத்துச்சரப்பளியாம் மோகனமாலைகளாம்
வட்டமுத்துசரப்பளியாம் மார்நிறைந்ததாழ்வடமாம்
கொத்துச்சரப்பளியாம் கோலமணித்தாழ்வடமாம்

சந்த்ரகாந்திசரப்பளியுந் தரித்தார்களப்போது
நாய்க்காரைதன்னையும் நடுக்கழுத்தில்தான்தரித்து
தோள்வாங்கிகைவாங்கி துதித்திட்டகைவளையல்
கடகஞ்சரிபவளங் கைநிறைந்தபொன்வளையல்
பத்துவிரலுக்கும் பதிந்தகணையாழி
உத்திரசஞ்சமது போட்டார்களுத்தமிக்கி
எட்டுவிரலுக்கும் இசைந்தகணையாழி
அரைக்கிசைந்தஒட்டியாண மழகுபெறச்சாத்தினார்
காலாழிகல்லணையாம் பீலாழிபில்லணையாம்
ஆடையாபரணமெல்லாம் அலங்கரித்தாளந்நேரம்
பட்டுப்பளபளென்ன பாடகக்காலசைய
முத்துமினுமினென்ன முந்தாணிபொன்னசைய
திருநீற்றுக்காப்பு திருச்சாந்துபொட்டுமிட்டார்
அஞ்சனக்கண்ணுக்கு அழகானமையுமிட்டு
மல்லிகைமாலை மாதரின்கழுத்திலிட்டார்
சந்தனமும்பன்னீரும் குழைத்துமேபூசினார்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
அப்போ-ஆரை நினைத்தா ளளவற்றசிந்தையிலே
ஆலவாய்சொக்கரை அடிபணிந்துதெண்டனிட்டார்
மாயன்பெருமாளை மனதிலேதான் நினைத்து
சீரங்கநாயகரே துணைவாருமெந்தனுக்கு
ஆயன்பெருமாளை அவள்மனதில்தானினைத்தாள்
பரமசிவனருளால் பார்வதிகிருபையினால்
பவளக்கொடிமேலே பிறந்தபதிவிரதை
ஆதிசிவன்பூமாலை அனுப்புங்கள்எந்தனுக்கு
கும்பிட்டுநின்றாளே கொப்பெனவேமாதுகன்னி
சொக்கர்மனமகிழ்ந்து சிந்தைமிகக்குளிர்ந்து
ஆலவாய்சொக்கரும் அம்மன்மீனாட்சியும்
திருமாலைசந்தனமும் திருநீறும்தானெடுத்து
ஆரணங்குமாதினுக்கும் அப்போதனுப்பிவிட்டார்
வந்தபூமாலையை மாதரவர்கைபிடித்தார்

மாணிக்கத்தேர்தனிலே வந்துமெள்ளயேறினர்கள்
ஏறின்போதையிலே எடுத்தார்நெடுங்குடைகள்
சுத்திகுடைபிடித்தார் சூரியனைக்காணமல்
பக்கம்குடைபிடித்தார் பகவானைக்காணமல்
கவிந்துகுடைப்பிடித்தார் கதிரோனைக்காணமல்
மூந்நூறுதேங்காயை மூடியோடேசூரையிட்டார்
ஐந்நூறுதேங்காயை அடித்தொடைத்துசூரையிட்டார்
மேளமுழங்குதுகாண் மும்மண்டலமசைய
அடிபடுதுபேரிகை அந்நகரந்தத்தளிக்க
பேரிகைச்சத்தம் பெருகியேமுழங்குதங்கே
ஐங்காதவழிதூரம் பொய்க்காளமூதிவர
நாற்காதவழிதூரம் நடுங்கியேதான்முழங்க
முக்காதவழிதூரம் முரசுமுழங்கிவர
மச்சுரதமேறி வாராளாம்மாதுகன்னி
அங்கிருந்தராஜாக்க ளனைவோரும்பார்த்துரைத்தார்
ஒருவர்க்கொருவ ருகந்துமேபேசுகிருர்
நீருபூத்தநெருப்பை ஊதிபார்த்ததிரம்போலே
ஆயிரமின்னலிலே சோதிமின்னல்மின்னுற்போல்
தங்கத்தைக்காய்ச்சியே தரையினில்விட்டாற்போல்
ஈயத்தைகாய்ச்சியே இலையிலேவிட்டாற்போல்
பொன்னை யுருக்கி பூமியிலேவிட்டாற்போல்
சந்திரனைப்போலே தளுதிம்புருள்தையனல்லாள்
சூரியனைப்போலே துலங்குகிருள்தோகையரும்
யாருக்கிருக்குமோ அண்ணமாரேநாமறியோம்
எவருக்கிருக்குமோ இந்தநல்லபாக்கியங்கள்
தாங்களேசொல்லியே தலையெடுத்துப்பார்த்திருந்தார்
ஆனந்தவாழ்மாரி அவளுடையதேர்வருபுது
அரசர்சபைநடுவே ஆரணந்துதேர்வருயுது
அரசர்சபைநடுவே ஆரணந்துதேர் நிறுத்தி
எண்ணுதுமெண் ணுகிருள் ஏலப்பசுங்கொடியாள்
ஆணுலழகுமன்னு அர்ச்சுனராசாவே

வடிவோடுவாருமென்று மன்னனைச்சொல்லுகிருள்
என்னவடிவாக யிருக்கிருயோ நானறியேன்
இவளைப்போல்பெண்கள்தா னெங்குங்கிடையாதோ
நாட்டிலமையாதோ நாயகியாள் தன்போலோ
என்றுமனதில் இசைந்துவழிபோனீரோ
தருமாபுரிக்கல்லோ தானடந்துபோனீரோ
என்செய்வேனீஸ்வரரே நானேதுமறியேனே
கிழக்குமுகம்நோக்கி பார்த்தாளேராசகன்னி
பக்கத்திலதோழியவள் பாங்கியவளேதுசொல்வாள்
முத்துமுடிதரித்த முடிமன்னராசாக்கள்
என்று-காதியவள்சொல்ல தையனல்லாள் தான்கேட்டு
தெற்குமுகமாகத் திரும்பினுள்மெல்லியவள்
பக்கமிருந்தவன் பாங்கியவளேதுசொல்வாள்
வச்சிரமுடிதரித்த மந்திரிகள்ராசரம்மா
மண்டலத்தையாளுகின்ற மகராஜாராஜரம்மா
மாலைசுழட்டியே மன்னர்மேல்போடுமென்ருள்
மேற்குமுகமாக திரும்பினுள்மெல்லியவள்
பக்கத்திலிருக்கின்ற பாங்கியவளேதுசொல்வாள்
பவுந்தத்துராசாக்கள் பல்லக்குதுரைகளம்மா
திக்கரசையாளுகிற துரைகளிவர்களம்மா
மாலைசுழட்டியே மன்னவர்மேல்போடுமென்ருள்
வடக்குமுகமாகத் திரும்பினுள்மாதுகன்னி
பக்கத்திலிருந்ததொரு பாங்கியவளேதுசொல்வாள்
திக்காசையாண்டதொரு துரைகளிவர்களம்மா
வடதேசராசாக்கள் மன்னரிவர்களம்மா
உன்னழகுக்கேற்ற புருஷனிருப்பாண்டி
உன்-மனதுக்கிசைந்த மணவாளன்தானிருப்பான்
மாலைசுழட்டுமென்ருள் மாதரிளங்கொடியை

பவளக்கொடியாள் அர்ச்சுனனை மாலைதரித்தல்.

பங்கயசீர்கண்ணுள் பவளக்கொடியாளும்
அப்போ-யாரை நினைத்தாளே அளவற்றசிந்தையிலே

எவரை நினைத்தாளே எண்ணமற்றசிந்தையிலே
ஆகாயவாணியம்மா அம்மன்பிடாரிகளே
மஞ்சள்முகியரே மடிசேலைக்காரிகளே
பொங்கநயினரே பொற்கொடியாண்டவரே
இல்லாத்துதேவதைகள் எல்லோருந் துணையிருங்கள்
ஆலவாய்சொக்கரே அங்கயற்கண் மீனாட்சி
மதுரைமீனாட்சியம்மன் வந்து துணையிருங்கள்
என்னைப்பிரப்பித்தஈஸ்வரனே துணையிருங்கள்
மாயன்பெருமாளே மங்கைநல்லலட்சுமியே
ஆயன்பெருமாளே யனைவருந் துணையிருங்கள்
முப்பத்துமுக்கோடி முனிவரெல்லாங்காத்திருங்கள்
வசிஷ்டருங்குந்தியம்மாள் மணிமாலைகாத்திருங்கள்
நான்-ஆகாயப்விட்டமாலை அருச்சுனனார் தன்கழுத்தில்
சுழட்டிவிட்டமாலையது தேர்விசையன் தன்கழுத்தில்
அர்ச்சுனனார் தன்கழுத்தி லழகுமாலைவிழவேணும்
என்னவடிவாக யிருக்கிறரோ நானறியோன்
தேவரைத்தானினைத்து சுழட்டினாள்மாலைதன்னை
சுழட்டிவிட்டமாலையது தெய்வலோகம்போகுது
சூரியமண்டலத்தை சுற்றியுலாவுகுது
எதிர்பட்டதேவர்களை யாவரையும்பார்த்துவரும்
நாலுபக்கத்து ராசாக்களைசுற்றிவரும்
தேடியேபார்க்குதே தேர்விசையனருச்சுனனை
ஆயனைபோலாக இருந்தோரருச்சுனர்மேல்
வாள்விசையன்தோள்மேலே வந்துவிழுந்தது
பிராமணர்தன் கழுத்தில் விழுந்ததுபூமாலை
தேவதுந்துமிமுழங்க தேவர்பூமாரிபெய்ய
ஆகாயபேரிகைதா னடிபடுதுதிமிதிமென்று
புஷ்பவருஷந்தான் பொழிந்தார்கள்தேவரெல்லாம்
ஆராட்சிமணிகளு மடித்ததுஓசையுடன்
சேராம்புராசாக்கள் துரைகளவர்பார்த்துவிட்டார்
சேராம்புராசாக்க ளனேகதுரையிருக்க

மண்டலத்துராசாக்கள் மந்திரிகள்வந்திருக்க
மற்றொருவர்தோள்மேலே வீழாமலிந்தமாலை
பார்ப்பான்கழுத்திலே விழுந்ததென்னபாவமது
ஆரியனைமாலையிட யிருந்தாளோவாரங்ணங்கு
வேதியற்குமாலையிட விதித்ததோயென்மகளே
செல்வமாய்பெண்பிறந்து சீரழியநாளாச்சோ
அருமையாய்ப்பெண்பிறந்து அம்பலமானீரோ
பிச்சையிரந்துண்ணும் பிராமணர்க்குப்பெண்ணுகி
கல்லெடுப்பரிசிக்கு காத்திருக்கநாளாச்சோ
பாத்தாளியரிசிக்கு பார்த்திருக்கநாளாச்சோ
இந்தக்கிழவனுக்கு இதுக்கா நான்பெண்வளர்த்தேன்
குருட்டுக்கிழவனுக்கோ கோடிநான்தபசுபண்ணேன்
மொண்டிக்கிழவனுக்கோ வேணநாள்தபசுபண்ணேன்
சண்டிக்கிழவனுக்கோ தனமாலைசூட்டிவிட்டாள்
இந்தக்கிழவனுக்கு எவர்தான்வழிவிட்டார்கள்
பாவிக்கிழவனவன் பந்தலுக்குள்ளேன்வந்தான்
ஆர்காண்பிராமணரே அழகுமாலைதாருமென்றார்
பெண்ணரசிபோட்ட பூமாலைதாருமென்றார்
அப்போதுவாள்விஜயனரியனுமேதுசொல்வான்
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாட்கு
மாலைதரிக்கிறார் மன்னவர்களென்றுசொல்லி
பிச்சைக்குவந்தவிடத்தில் பூமாலைபோட்டுவிட்டாள்
வேணுமென்றுவந்தேனே மெல்லியரைமாலையிட
இவளைநான்பெண்டுவைத்து என்செயப்போறேனப்பா
தள்ளாதகிழவனுக்கு தையலருமேன்காணும்
எனக்கிட்டமாலைதன்னை எடுத்துத்தரித்துக்கொள்ளும்
மாலைதரித்துக்கொள்ளும் மங்கிலியஞ்சூட்டுகிறோம்
உங்கள்பெண்டிருக்க உலகத்திலுள்ளபடி
வளர்த்துயெடுத்தீர்கள் மாலைதரித்திடுங்கள்
இந்தாறுமாலையென்று ஈய்ந்தார்பிராமணரும்
அந்தச்சமயத்தி லாரணங்குதான்கேட்டு

பங்கயஞ்சீர் கண்ணாள் பவளக்கொடியோடிவந்து
என்னையும்பெற்றெடுத்த இயலானவண்ணாவே
மாளாக்கிழவனுடன் வார்த்தைகளே னுங்களுக்கு
ஆதிசிவன் தன்னெழுத்தை ஆருமறியார்கள்
என் தலைவிதிப்பயனை எவருமறியார்கள்
வாரும்பிராமணாவென்று வலதுகையைத்தான்பிடித்து
இவருக்குப்பெண்டாக இருப்பேனேயென்தகப்பா
ஒருவருக்குமாலையிட்டா ருலகத்திலுள்ளபடி
தலையிலெழுதினதை தவறுதொருக்காலும்
ஏட்டிலெழுதினதை எடுத்துரைக்கப்போறதில்லை
தலையிலெழுதினதைத் தள்ளிவைக்கப்போறதில்லை
அன்றெழுதுமாதிசிவன் அழித்தெழுதப்போறதில்லை
என்விதியைத் துலைக்குகைக்கு வெல்லவகையறியேன்
கதியைத் துலைக்கவல்லேன் காவேரிநீந்தவல்லேன்
பாவிதலையிலிந்தப் பிராமணரையெழுதிவைத்தார்
எல்லாத்தலையிலும் ஓரெழுத்துஈரெழுத்து
மாணிக்கவாசலிலே மறையவனைக்கொண்டுசென்றார்
அந்தசமயத்தி லாயன்பெருமாளும்
செந்தும்பிபோலே ஸ்ரீராமர்வடிவெடுத்தார்
சிவ்வென்றுதான்பறந்து தேன்மொழியாள் தன்செவியி
வந்துநுழைந்தார் மயிலனையாள் தன்செவியில்
அஞ்சாதேயஞ்சாதே வருந்தங்கையஞ்சாதே
ஆணலழகுமன்னன் அர்ச்சுனராசன்காண்
என்றுவுரைத்தாரிளங்கொடியாள் தன்செவியில்
அருஞ்செவியில்தானுரைத்தா யனும்போய்விட்டார்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
வேடத்தைமாற்றி விசையாவடிவெடென்றார்

அருச்சுனன் தன் சுயரூபமேடுத்தல்.

சேராம்புராசாக்கள் சிந்தைகுளிர்ந்துவிட
கண்டபேர்பயந்துவிட கால்கைதடுமற

சிந்தைகுளிர்ந்துவிட தேர்விசையன்வடிவெடுத்தார்
அங்கங்குளிர்ந்துவிட அருச்சுனன்வடிவெடுத்தார்
முன்னழகும்பின்னழகும் முதுகில்மட்சரேகைகளும்
பல்லிலேபாசவீணை நாவிலேசட்சத்திரம்
நாவிலேநட்சத்திரம் நயனவிழிப்பார்வைகளும்
மாயன்தயவாலே வாள்விசையன்ரூபமானார்
ஆயன்தயவாலே அருச்சுனன்ரூபமானார்
கண்டவர்கள்தான்மயங்க பார்த்திபன்வடிவெடுத்தார்
பார்த்தவர்கள்தான்மயங்கப் பார்த்திபன்வடிவெடுத்தார்
ஐந்துபிராயமறியாப்பிராயமென்று
அச்சுதானந்த ரையரும்வந்துவிட்டார்
பவளக்கொடிவந்து பார்த்துமகிழ்ந்துவிட்டாள்
சேராம்புராஜாக்கள் தேர்விசையன்றன்னைக்கண்டு
கண்டுமகிழ்ந்தார்கள் காண்டீபனருச்சுனரை
பார்த்துமகிழ்ந்தார்கள் பாத்தீபனருச்சுனரை
விசையனழகுகண்டுமெத்தமகிழ்ந்தார்கள்
எங்கள்-மகளார்க்கேயேத்த மணவாளன்வந்தீரோ
அருச்சுனரைப்போலாக வாராமலாணழகா
பிராமணவடிவாக ஏனெடுத்தீர்புண்ணியரே
வந்தெனைப்பெண்கேட்டால்கொடுக்கேனென்பேனே
ஏழைக்கிழவனைப்போல் ஏன்காண்வடிவெடுத்தீர்
என்றுமனமகிழ்ந்தா ரினமானராசாக்கள்
அந்தச்சமயத்தி லனந்தமானதுரைகளெல்லாம்
பங்கயஞ்சீர்கண்ணன் பவளக்கொடியாளும்
ஆரியனைமாலையிட அழைத்துபோகக்கண்டவர்கள்
இஞ்சிதின்றகுரங்குபோலேக்கரித்தாராசாக்கள்
விருத்தக்கிழவனுக்கு வேதியர்க்குவாய்த்ததென்று
அங்கிருந்தென்னபல னென்றெண்ணிராசாக்கள்
அவரவர்மாளிகைக்கு அனைவரும்போகலுற்றார்
சேராம்புராசாக்கள் துரைகளவரேதுசொல்வார்
வில்விசையனருச்சுனனைவேந்தர்வரவழைத்து

நல்லவேளைதப்பாமல் ராகுகாலம்வாராமல்
வாச்சியங்கள் தியாச்சியங்கள் வாராதவேளைகண்டு
சேஷைமணைபோட்டு சீரானபந்தலிட்டு
சென்னலரிசிகொண்டு செங்கதிரோன் பொங்கலிட்டு
மாப்பிள்ளையும்பெண்ணையும் மனைமேலேகுந்தவைத்து
முந்நூறுபிராமணஸ்திரீகள் முகத்துமுளைதெளிக்க
சாலுங்கரகமும்சந்திரற்குமுன்பாக
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
வேதப்பிராமணர்கள் வேதங்களோதிவர
ஓமப்புகையெறிய வுடனேகவேதஞ்சொல்ல
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணமுங்கட்டினர்கள்
சோம்புராக்கள் துரைகளெழுந்திருந்து
மாவுங்கழுநூலும் மஞ்சளுடநெல்விதையும்
தாலியுங்கூறையுந் தான்கொண்டுவந்தார்கள்
குருகுலத்துராசாவேகுந்திமகனுரே
மந்தாரக்குந்தியரும் பெற்றமகனுரே
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளை
தந்தேனுனக்கீந்தேன் தாரைநீர்பிடியுமென்ருர்
காலுக்குமிஞ்சியிட்டார் கைக்குகணையாழியிட்டார்
தையலரைத்தான்கொடுத்து தாரைநீர்வார்த்தார்கள்
எந்திழையைத்தான்கொடுத்து இஷ்டநீர்வார்த்தவரும்
மாலைதரித்து மணமாலைசூட்டுமென்ருர்
அப்போதருச்சுனனுமாயனைத்தானினைத்து
தாலியைக்கட்டினன் தேர்விசையனருச்சுனனும்
பிர்மமுடிமூன்றுமுடி போட்டானேவாள்விசையன்
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணமுந்தானவிழ்த்தார்
அம்மிமிதித்து அரசாணிசுற்றிவந்து
பெரியோர்களெல்லோரும் பெருக்கமனமகிழ்ந்து
மன்னவனுந்தேவியுமாய் மாளிகையினுட்புகுந்து
தங்கத்துமேடையிலேதனஞ்சயனும்வீற்றிருந்தான்

ஐம்பதும்பேரு மவர்களுடதேவிமாரும்
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடிமாதரெல்லாம்
தனஞ்செயற்கும்வேதியற்கும் சமமாகசேஷையிட்டு
பாலும்பழமும் பரிவுடனே தான்கொடுத்தார்
பாலமிர்தமுண்டு பசியாறித்தானிருந்தார்
அப்பால்வந்தமணிதருக்கும் மகாபெரியசேனைகட்கும்
அத்தரும்பனனீரும் அழகாகத்தான்தெளித்து
சந்தனமுங்கெந்தபொடி தாம்பூலந்தான்வழங்கி
பாரிஜாதபுட்பம் பரிமளங்கள்தன்னுடனே
பூரிவெகுதானங் கொடுத்தார்பெரியோர்க்கு
தட்சணைத்தாம்பூலம்தார்வேந்தன்கொடுத்தார்
வந்தமனிதர் மகாசேனையெல்லவர்க்கும்
கைக்குச்சலங்கொத்தார் கட்டழகரெல்லவர்க்கும்
பந்தியமர்த்தி பரிமாறுபோசனங்கள்
பொரித்தபொரிக்கரியும் பொன்போல்பருப்புகளும்
பத்துவகைபச்சடியும் பசியாறியாவர்களும்
புத்துருக்குநெய்யே போதமிகப்படைத்து
முப்பழஞ்சர்கரையும் அப்பளமுந்தான்படைத்து
ஆயாசந்தீரவே பாயாசந்தான்கொடுத்து
போசனங்களுண்டு புகழ்வேந்தர்யாவருந்தான்
கைகாலலம்பி கனமிகுந்தமன்னரெல்லாம்
வேடிக்கையாக வீற்றிருந்தார்பந்தலிலே
அப்போ-வெட்டியபாக்கும் மிகுமணக்குவெற்றிலையும்
சொர்ணபுஷ்பமாலைகளுஞ் சோடுசகலாத்துகளும்
வைத்துக்கொடுத்தார்கள் வரிசைவெகுமானம்
ஒட்டைகுதிரைகள் உத்தமர்கள்மெய்யெழுதி
உத்தமரெல்லோரும் உள்ளங்களிகூர்ந்து
காண்டீபனருச்சுனனும் கன்னியவள்பைங்கிளியும்
ஊர்கோலமானபின்பு உத்தமனுந்தேவியும்
பள்ளியறைமண்டபத்தில் பாங்குடனேபோகலுற்றார்

வந்திருந்தராசாக்கள் மன்னவர்களெல்லோரும்
அவரவர்கள்ராச்சியத்தை ஆளுகைக்குபோனார்கள்
வாள்விசையன்கோமானும் மருவுண்டுதானிருந்தான்
பதினாறுநாளாச்சு பார்த்தன்வந்துமாலையிட்டு
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
அல்லிப்பெருமாளும் ஆரணங்கேதுசெய்தாள்
மகுடத்துரைச்சியரும் வாழ்வரசியல்லியரும்
கொச்சித்துரைச்சி கொடிமதுரையல்லியரும்
மச்சித்துரைச்சி வடமதுரையல்லியரும்
காலையில்தானெழுந்து கனிவாயைச்சுத்திபண்ணி
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
பொய்கையில்போயிறங்கிப் பொற்கிளியுமப்போது
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
சொக்கருளென்று திருநீற்றுக்காப்புமிட்டு
மதுரைமீனாட்சியவரை மாதாவைத்தானினைந்து
அரன்பூசையரிபூசை அநுஷ்டானம்பண்ணியவள்
இங்கிதமானதொரு அலங்காரம்பண்ணலுற்றாள்
சல்லடந்தான்தொடுத்து தட்டிபிகுவெகுவெடுத்து
தட்டியின்மேல்வொட்டியாணம் சாதாவரிந்துகட்டி
சல்லடத்தின்மேலேயவள் தாமரைபூசுங்குவிட்டு
சங்குவைத்தாள்நல்ல சாதிலிங்கபொட்டுவைத்தாள்
வலதுபுறத்துசுங்கிலே மாகாளியட்சரமும்
தென்புறத்துசுங்கிலே தெய்வகன்னியட்சரமும்
முத்துக்கபாயணிந்து முதுகெல்லாம்மங்கிபோட்டாள்
வச்சிரகபாயணிந்தாள் மார்நிறைய அங்கிபோட்டாள்
கிரீடபுஜகீர்த்தி கீர்த்தியாத்தானணிந்தாள்
அங்கிகபாயணிந்தாள் அல்லிமலர்நாயகமும்
கேடயவல்லயமும் கிளிமொழியாள்தான்தரித்தாள்
மந்திரவாளெடுத்து வலதுகையில்தான்பிடித்தாள்

பதினெட்டு ஆயுதமும் பத்தினியாள் தான் தரித்தாள்
முத்துமிகியடியை தொட்டுநடந்துவந்து
வசந்தமணிமண்டபத்தில் மாதவளும்வந்தமர்ந்தாள்
கொலுகூடமண்டபத்தில் கொம்பனையும்வந்தமர்ந்தாள்
மந்திரிபவ்வளசேனை மயிலணையும்வந்தமர்ந்தாள்
தாதிகளுந்தோழிகளுந் தையலரைச்சூழ்ந்தார்கள்
செங்கமலத்தாதி சேனுபதிபவளசேனை
வெண்சாமரைக்கவுரி வீசியவள்பக்கம்நின்ருள்
ஆலவட்டஞ்சாமரை அருங்கிளிமார்சிவீவா
மல்லிகைவிசிரிகளும் மயில்விசிரிதான்வீச
செண்டாடிபந்தாடி தேன்மொழிமார்சூழ்ந்துவா
கேளிக்கைபார்த்து இருக்கிருள்கொம்பனையாள்
சங்கீதம்பார்த்து இருக்கிருள் மைதனல்லாள்
முத்துவிற்றவர்த்தகரும் வேணகணக்கர்களும்
கணக்குகட்டுதானெடுத்து கடுகவேவாரார்கள்
கொம்பனையாள்முன்னேவந்து கும்பிட்டுதெண்டனிட
கைகட்டிநின்ருர்கள் கட்டழகர்யெல்லவரும்
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியேதுசொல்வாள்
முத்துகொடுத்ததும் விற்றகணக்குகளும்
அண்ணுடங்கணக்குகளென் அம்பலத்தேவாராமல்
எட்டுநாள்கணக்குகளும் எழுதிமுடியுமென்ருள்
எட்டுநாள்வாராமல் இருந்தவயணமென்ன
ஒருமுத்துகுறைந்தாலே உயிர்க்கழுவில்போட்டிடுவேன்
இருமுத்துகுறைந்தாலே ஈரல்பிளந்திடுவேன்
வாயாற்பொறிபறக்க வலதுகண்ணுலனல்வீச
செந்தலைநாகம்போல் சீறியெறிபாந்தாள்
கண்ணுல்பொறிபறக்க காதங்கனல்வீச
வாயாற்பொறிபறக்க காதங்கனல்வீச
ஈச்சம்பழம்போ லிருகண்ணுந் தான்சிவக்க
கோவைப்பழம்போலே கோள்ளிகொண்டுவீசுதுபார்
கண்சதைகளைக்கடித்துமிழ்ந்தாளல்லியரும்

கணக்குக்கதிகாரி கைகால்நடுங்கிவிட்டார்
எட்டுநாள்கணக்குகளும் எழுதிமுடிக்கலுற்றார்
கணக்குமேல்கண்ணு யிருக்கிருள்கன்னியரும்
ஆராலுங்கூடிய ஆற்றலொண்ணுக்கோபயப்பா
அந்தச்சமயத்தில் அங்குவாரான்புலந்திரனும்
வீதிவிலாசமது விளையாடிவேல்வேந்தன்
தங்கத்தேரோட்டியே தனஞ்செயன்புத்திரனும்
செம்பொன்தேரோட்டியே சித்திரவீதியெல்லாம்
முத்தின்தேரோட்டியே முடிமன்னர்வீதியெல்லாம்
மாணிக்கதேரோட்டியே மதுரைதெருவீதியெல்லாம்
தண்டையசையவே சதங்கைத்தகதகென்ன
அரைவடமுங்கிண்கிணியும் அசைந்துநிழல்காட்ட
கணையாழிசோதியிலே கண்டசரங்கள்மின்ன
வட்டமிட்டநெற்றியிலே வயிரதட்டிநின்றிலங்க
சர்வாபரணங்களும் தாழ்வடமுந்தானசைய
சிங்காரமிதியடியாம் சிங்காணிவில்லுகளும்
பக்கமிருபுரமும் பட்டாசுழட்டிவர
கத்திகட்டிமன்னரெல்லாம் கைகட்டியேந்திவர
ஈட்டிபிடிமன்னரெல்லாம் இருபுரமுஞ்சூழ்ந்துவர
பொற்பரிசுமேலாகப் பிள்ளைவருகுவதுபார்
வெகுஜனங்கள்கூடி நெருங்கிடங்கொள்ளாமல்
அங்கேநெருங்கிவந்த அருமகனைக்கண்டுவிட்டாள்
அப்பாவருக ஆணழகாபுத்திரனே
வருகவருகவென் வாழ்வேவருகவென்ருள்
திருவரும்பூவே தேனேவருகவென்ருள்
கண்ணின்மணியே கருவிளமே நீவருக
கண்மூன்றுடைய கைலாசநாதரே
சொக்கர்திருவாசலுக்குத் தூண்டாமணிவிளக்கே
வைகைக்கரைதனக்கு மண்சுமந்தசொக்கரே
கப்பலுஞ்சோங்குங் கரைதுறையுமுள்ளவனே

அப்பாவகருவென்று ஆவலுடன்முத்தமிட்டாள்
வாரியெடுத்தாளே மதிமுகத்தில்முத்தமிட்டாள்
மைந்தனையேந்தி மடியிலேவைத்திருந்தாள்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
போதும்போதுமென்னுச்சி பிள்ளையைகொஞ்சினது
மைந்தரைக்கொஞ்சினது போதுமம்மாமாதாவே
தங்கத்தேர்தந்தாரே தனஞ்செயனுரென்பாட்டன்
செம்பொன்தேர்தந்தாரே சேர்வேந்தரென்மாமன்
மாணிக்கத்தேர்தந்தார் வளநாட்டுராசாக்கள்
முத்துத்தேர்தந்தார்கள் முடிபுனைந்தராசாக்கள்
சித்திரவீதி தெருக்கள்பதினுயிரமும்
மதுரைப்பெருந்தெருவும் மட்டில்லாவீதிகளும்
பவளத்தேரோட்டவென்று பத்தினிநான்கேட்டேனே
அவ்வார்த்தைகேட்டாளே அல்லிபெருமாளும்
அருச்சுனன்போனதொரு சேதியைப்பார்க்கலுற்ருள்
பதினுறுநாளாச்சு பார்த்திபன்போனதுவாம்
மூன்றுநாளாறு பொழுதிலேவாருமென்று
மைந்தன்மேலாணையிட்டு மாபாவிபோனுனே
ஆணைமறந்தவனும் ஆர்மேலே ஆசைகொண்டான்
எங்கேவுல்லாசமா யிருக்கிருனோவாள்விசையன்
எமலோகம்போனுலும் இட்டுவந்துசங்கரிப்பேன்
பாதாளம்போனுலும் பார்த்திபனைக்கொன்றிடுவேன்
ஆகாயம்போனுலும் அதம்பண்ணிபோட்டிடுவேன்
சீறியேகண்சிவந்து சிங்கத்தின்குட்டியைப்போல்
கையைக்கடித்து கன்னியருந்தானெழுந்தாள்
உதிரமுஞ்சதையுமாய் உழிந்தாளேபூமியிலே
காட்டானைபோலாகத் தேன்மொழியாளல்லிரும்
சிங்கத்தைப்பேலாகத் தேன்மொழியாளல்லியரும்
உருட்டினளிருகண்ணை ஒதுங்குகிருர்ராஜாக்கள்
ஆக்கரித்துபற்கடித்து அதட்டியெழுந்தாளே

ஆர்ராலும்கூடியே ஆற்றவொண்ணுக்கோபமுடன்
பாண்டிவளநாட்டாளும்பஸ்பமாய்பறக்குகிருள்
பகல்வத்திபோல எரியுதேயிருகண்ணும்
மைந்தனையிடுக்கி வளநாட்டாள்வாருளே
அறுபதுபேரெழுந்து அந்நேரமோடிவந்து
அம்மா-எந்தநாடென்று அறிவாயிளங்கொடியும்
எங்கேயிருந்தாலு மிட்டுவாரோமர்ச்சுனரை
இங்கேயிருமம்மா இராசகுலநாயகமே
என்றதுகேட்டுமவ ளேதுசொல்வாளல்லியரும்
எனக்கெதிர்சொல்லாதே யென்ஞணைஐயாவே
ஆான்மனைத்திறவுகோல் அண்ணரிடைகொடுத்தாள்

அல்லியரசாணி அருச்சூனன்மேல் படையெடுத்தது.

ஆராடாமந்திரியே அறிவுள்ளகாருபாறி
ஆனைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்ருள்
காலாளுஞ்சேனைகளுங் கடுகவேபயணமென்ருள்
தேர்கொண்டுவாருமென்ருள் துரிதமாய்ப்போகவென
சொன்னபொழுதிலே துரிதமாய்வந்தார்கள்
சித்திரத்தேர்தன்னைச் சோடித்தாரழகுபெற
ஆறுவண்டி நூறுசட்ட மழகானகுத்துக்கால்
குத்துக்கால்செப்பனிட்டு கொடுங்கைதனை வளைத்து
கும்பகலசமுங்குடைகளலங்கரித்து
அம்புருச்சீலையது அலங்காரம்பண்ணினூர்கள்
பாராசாரிபுரவியொன்று பஞ்சகலியாணியொன்று
நேசியெனும்புரவியொன்று ஜீவரத்தினகுதிரையொடு
நாலுபுரவிகளை நலமாயலங்கரித்து
குதிரைகளைகொண்டுவந்து கொப்பெனவேகட்டினூர்கள்
அலங்கரித்தோம்தேரையென்றடி பணிந்து நின்ருர்கள்
பயணம்பயணமென்று பயணபேரிதானடித்தார்
இப்போதுபயணமென்று இயல்பாகதானடந்தார்
கானலுக்குத்தானெடுத்தார் கறுப்புநல்லகூடாரம்

வெய்யலுக்குத்தானெடுத்தார் வெள்ளைநல்லகூடாரம்
பனிக்குக்குத்தானெடுத்தார் பச்சைநல்லகூடாரம்
யானையில்டோராவுங் குதிரையின்மேல்டங்காவும்
கறுப்புநிசான்செகப்புநிசான் கலந்துபிடித்தார்கள்
யானைகளாறுகோடி அசுவங்களேழுகோடி
தேர்களொருகோடி தோணிகள்மூக்கோடி
அமரதருஞ்சமரதரும் ஆஸ்தானமாகதரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடிமராட்டியரும்
ஈழத்துவங்கணறு மிளநாட்டுச்சோனகரும்
ஒளிவானபாகுகளும் ஒட்டியருஞ்சோனகரும்
சட்டைகழட்டாத சாமார்த்தியரானவரும்
குப்பாயம்வாங்காத குலமன்னரானவரும்
மட்டில்லாசேனைகளும் மன்னர்பயணமானார்
பட்டயமுஞ்சூரிகளும் பாங்கானகவுரிகளும்
நிமிசாபெரியலகு நேரிசமாம்பெரியகத்தி
கூலிசமுஞ்சூலிசமுங் குண்டுதுப்பாக்கிகளும்
சக்கரமும்வேலுந் தடியும்பெருவுலக்கை
உண்டைவில்சுண்டைவில் சிங்காணிபூட்டுகளும்
எண்ணான்கு ஆயுதமும் எடுத்தரையிற்கட்டினார்கள்
பாளயங்களுள்ளதெல்லாம் பயணங்களாச்சுதம்மா
ஆனையின்மேல்பேரிகை அடிபடுதுகுமுகுமென
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைகிளம்புகுது
அண்டங்கிடுகிடென்ன ஆகாசம்நெக்குவிட
பூமிகிடுகிடென்ன பூலோகம்நெக்குவிட
அடங்காதகோமுட னல்லிமலர்நாயகியாள்
அலங்கரித்ததேர்மேலே ஆரணங்கேறினாள்
இடுக்கியபிள்ளையுட னேறினாள்தேர்மேலே
மந்திரிபவளசேனை பங்கையவள்தானேறி
தேரைத்திருப்பினாள் துரிதமாயட்சணமே
சுற்றிக்குடைபிடித்தார் சூரியனைத்தான்மறைக்க
பக்கங்குடைபிடித்தார் பகவானைத்தான்மறைக்க

கவிந்துகுடைபிடித்தார் கதிரோனைத்தான்மறைக்க
அடிபடுதுபேரிகை அந்நகரந்தானதிர
எட்டுத்திசைநடுங்க இளங்கொடியாள்தான்வாராள்
இரதகஜதுரகமுடன் நாலுவகைசேனைகளும்
மாவணியும்மரவணியும் மற்றுமுள்ளராசபலன்
வருகுதுவெகுசனங்கள்மண் ணுவிண் ணுங்கொள்ளாது
செந்தூளெழும்புகுது சூரியனைக்கப்புதங்கே
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புதங்கே
அண்டாண்டந்தானதிர அடித்தார்கள்பேரிகையை
பூமிகிடுகிடென்ன பேரிகைதானடிக்க
கடல்நீர்சுவறிடவே காளசின்னந்தானடிக்க
அஷ்டதிக்கெங்கும் அதிரசின்னந்தான்முழங்க
அண்டங்கிடுகிடென்ன அடித்தான்பறையோசை
ஆனையணிநடக்க அரசமன்னர்தானடக்க
குதிரையணிநடக்கக் குலசேகர்பின்னடக்க
தெத்துக்கடந்து தெருவீதிதான்நடந்து
அங்காடிவீதியது ஆயிரந்தெருக்கடந்து
குச்சிலியர்வீதி குலமன்னர்தான்கடந்து
பீங்கான்கடைத்தெருவும் பின்னிட்டுமுன்னடந்தார்
வைகைக்கரைகடந்து மதுராபுரிகடந்து
பட்டணத்தைவிட்டு பரிவாய்நடந்தார்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அரியவனங்கடந்து
சில்லென்றுபூத்த செடிகள்வனங்கடந்து
புல்லென்றுபூத்த புலியின்வனங்கடந்து
வேங்கையிருக்குவனம் வெண்களாப்பூத்தவனம்
எட்டடிவேங்கையிருக்கும்வனங்கடந்து
பத்தடிவேங்கைபருத்தவனங்கடந்து
அறுபதடிவேங்கை யடர்ந்தவனங்கடந்து
சிங்கமுலாவவனம் சிறுபுலிதூங்குவனம்
ஆளியுலாவுவனம் அன்னபட்சிதூங்குவனம்

கெண்டபேரண்டங்கள் இருக்கும்வனம்கடந்தார்
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்தார்
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பில்காணிருக்க
கருநாரைக்கிரைதேடும் கதலிவனங்கடந்தார்
மயிலோசைகேட்கும் மாந்தோப்புதானடந்தார்
ஈக்கள் நுழையாத இருண்டவனங்கடந்தார்
கண்டறியாத காண்டாவனங்கடந்தார்
வேந்தறியாத வெளிக்காடுதானடந்தார்
சந்திரர்கள்சூரியர்கள் காணுவனங்கடந்தார்
வெகுதூரம்வருகையில் வேல்பொருதுங்கண்ணளும்
பவளம்விளைகின்ற பாங்கானகாடு கண்டாள்
தூரத்தில்கண்டவுடன் செல்வனவனேதுசொல்வான்
எங்களையர்போனது இக்காடோ ஆச்சியென்றான்
ஐயாவென்றுசொல்லவே அடித்தாள்தவடைமேலே
அடித்தபொழுதிலே யலறிப்புலம்பிவிட்டான்
பாவியைநினைக்கவல்லோ பாலகனையானடித்தேன்
மைந்தனைக்கொஞ்சியல்லோ மடிமேலேவைத்தாளாம்
மதுரைப்பரிசனங்கள் மகாசேனைதான்கடந்தார்
சேனைபரியமுதல் சமர்த்தர்கள்சூழ்ந்துவர
ஐந்துலட்சங்குதிரைகளு மெல்லியரைச்சூழ்ந்துவர
ஆனைபசுந்துகளு மாரணங்கைச்சூழ்ந்துவர
சேனைப்பரிசனங்கள் சொல்லமுடியாது
இப்படியாகஎச்சரித்துத்தானடக்க
அப்போது-காடுயெரிகிறது கல்லைப்பிரட்டுகிறது
ஆனைமேல்பேரி அசைக்கிறதும்குலுங்குவதும்
குதிரையின்மேல்கூடாரம் கூடஅசைகிறதும்
குதிரைபிரியாமல் கூடநடக்கலுற்றாள்
அப்போதுஅல்லியரும் ஆரணங்குமேதுரைப்பாள்
ஆனைகளாறுகோடி குதிரைகளேழுகோடி
மதுரைப்படைகளெல்லாம் மன்னுவருகுதடா
மதுரைவளநாட்டில் மகாராசர்கேட்கலுற்றார்

அம்மாவருகிறது ஆனைப்படைகளெல்லாம்
பாண்டிவளநாட்டாள் பவளக்காடுபோய்ப்புகுந்தாள்
வெய்யல்விடாய்த்துவந்து விழுந்ததேசேனைகளும்
கதையடைக்கிறதும் களையாய்வருகிறதும்
நாக்கைவாட்டுறதும் நடுநாக்கிழுக்கிறதும்
வாடிமயங்கினர் மயிலனையாள்சேனையெல்லாம்
அந்தச்சமயத்தி லாரணங்குதான்கேட்டு
பாளையமிறங்குமென்றாள் பத்தினியாளல்லியரும்
கூடாரம்போடுமென்று கொப்பெனவேயிறங்குமென்று
பஞ்சவர்ணகூடாரம் பலதிசையும்போட்டார்கள்
வீதிவீதியாகவே யமர்ந்ததுபாளையங்கள்
ஆனைக்குடேருவும் குதிரைக்குகொட்டாயும்
மாட்டுக்குத்துப்புகளும் மனிதருக்குக்கூடாரம்
பாளையங்கள்தோறும் படிகொடுத்தாளல்லியரும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
கானகத்தினுள்ளிருக்கும் கனவேடர்வந்தார்கள்
பாளையமிறங்கினதைப் பார்த்தார்கள்வேடுவர்கள்
இத்தனைகாலமாய் இதுநெடுநாள்கண்டதில்லை
இப்பெரியகானகத்தில் இருக்கிறோம்வெகுநாளாய்
இவ்வனத்தில்நாமும் பார்த்ததில்லைவெகுகாலம்
இதுவென்னகாலமோ என்றுமனதிலெண்ணி
என்றல்லவேடுவர்கள் எச்சரித்துவந்தார்கள்
அப்போதுமந்திரிகள் கண்டார்கள்வேடுவர்களை
ஆராப்பா நீங்களென்று கேட்டார்களப்போது
இந்தநல்லகானகத்தில் இருக்கின்றவேடுவர்கள்
என்றுமவர்சொல்ல எச்சரித்து மந்திரிகள்
பிடித்துவந்துவிட்டார்கள் பெண்பெருமாளண்டை
கும்பிட்டுநின்றார்கள் கொம்பனையாள்முன்பாக
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசிகண்டுவிட்டாள்
எந்தவூர்வேடுவரே எனக்கறியச்சொல்லுமென்றாள்
இந்தவனத்திலே ஏனம்மேயிங்குவந்தாய்

கதண்டுகொளவிகொட்டி காவலர்கள்தான்மடிந்தார்
முகமறியாப்பேரை மொய்க்கும்கதண்டுகள்தான்
இந்த-கானகத்திலம்மா கதண்டுகுளவிகள்தான்
பவளப்வெட்டவந்தவர்கள் பாருலகில்மெத்தவுண்டு
கதண்டுகொட்டிமடிந்தார்கள் கணக்குமிதங்களில்லை
எங்கள்-ஆச்சியெழுப்பிடுவாள் அனந்தங்கோடிசேனை
என்றுசொல்லவேடுவரும் யேந்திழைஏதுசொல்வாள்
இதுயாருடையராச்சியம் என்றுளேயல்லியரும்
ஆனல்கேளென்னுச்சி அடைவாகச்சொல்லுகிறேம்
சேராம்புராஜாக்கள் துரைகளவரெண்பதுபேர்
பிள்ளையில்லையென்று பெருந்தபசுபண்ணினர்கள்
மைந்தனில்லையென்று வருந்தித்தபசுபண்ணர்
குமாரனில்லையென்று கோடிதபசுபண்ணர்
ஆருக்கும்பிள்ளையில்லை யென்றுளேயீஸ்பரியாள்
அப்போ-பரமசிவன்மனமகிழ்ந்து பவளக்கொடியாளை
பாலகியையுண்டுபண்ணர் பரமசிவனப்போது
பவளக்கொடியாளென்று பேரிட்டாரீஸ்பரனர்
அப்போ-சேராம்புராசாக்கள் துரைகளவரெல்லோரும்
பிள்ளைகலியினல் பெண்ணென்றுசொல்லாமல்
பெண்ணென்றுசொல்லாமல் பிள்ளையெனவளர்த்தார்
அவள்-மீறிநடந்தாளே மெல்லிருதுவானளே
பிள்ளையென்றுசொல்லி பேர்மகுடஞ்சூட்டினர்
அந்தமுடிகொண்டாளுகிறாச்சியத்தை
பதினறுநன்வருஷம் பட்டமாசாண்டாள்
அவனைக்-கொள்ளவருவார்கள் கோடானகோடியுண்டு
அவளை-மாலையிடவந்தவர்கள் மட்டுமிதங்களில்லை
நித்தியகன்னியாகவே இருந்தாளிந்நாள்வரைக்கும்
குருட்டானகுருகுலத்தான் குந்திமகனருச்சுனன்காண்
சந்தனவடிவழகன் தருமராசன்தம்பியவன்
தோழனும்ராசனுமாய்த் தேசத்தில்வந்தவரும்
பவளக்கொடியாளை பத்தினியைமாலையிட்டு

பதினாறுநாளாச்சு பத்தினியைமாலையிட்டு
அந்த-ஆனந்தவாழ்மாரி அழகுள்ளராச்சியத்தை
இராசமுடிதரித்து நலமுடனேயாளுகிறாள்
அவ்வார்த்தைகேட்டாளே அல்லிப்பெருமாளும்
சீறியெறிபறந்து சிங்கக்குட்டிபோலெழுந்து
கொக்கரித்துதானெழுந்தாள் கொல்லுங்குருவிபோல
ஆடாதுதுவனே அழையுங்கள்வேடுவரை
காவலிலேவையுமென்றாள் கட்டழகர்வேடுவரை
மூன்றுநாளாறு பொழுதிலேவருவேனென்று
மைந்தன்மேலாணையிட்டு வந்தானேவாள்விசையன்
மாலையிட்டுக்கொண்டு வாழ்ந்திருக்கநாளாச்சே
எமலோகம்போனாலும் யிட்டுவந்துசங்கரிப்பேன்
ஆகாயம்போனாலு மாராய்ந்துநான்வருவேன்
பாதாளம்போனாலும் பார்த்துமேகொன்றிடுவேன்
எரிபறந்துகண்சிவந்து எழுந்தாளேபத்தினியாள்
அப்போதுமாயவரு மறிந்தாரேயிவ்வண்ணம்
மோசங்கள்வந்து முடிந்துதேயர்ச்சுனற்கு
ஒன்பதவதாரம் ஒக்கப்பிறந்தாரே
பத்தவதாரம் பாங்காய்ப்பிறந்தாரே
அப்படிப்பட்டதொரு அருச்சுனராசாவே
சங்கரிக்கவல்லவோ நினைத்தாளேதையனல்லாள்
அண்டர்கள்வரத்தையெல்லாம் பெறறவளராணங்கு
சொக்கர்வலிமையுண்டு சுந்தரியாளல்லியற்கு
அறிந்துமிருப்போமே அல்லிநல்லாள்தன்சமர்த்தை
ஏமாந்துநாமிருந்தா விடுக்கம்வருமர்ச்சுனற்கு

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அல்லியரசாணியுடைய பாளையங்கள் எல்லாவற்றையுங் கொல்லும்படியாய்க் கதண்டு குளவிகளை ஏவிவிடுதல்.

என்றுஎழுந்தாரே எம்பெருமாள்மேகவர்ணர்
துவாரகையைவிட்டு ஸ்ரீராமர்வந்துவிட்டார்

மாய்கையாய்வந்துவிட்டார் வனமாவனந்தனிலே
கதண்டுகுளவிகளைக் கடுகவரவழைத்தார்
செங்குளவிகருங்குளவி சேரவரவழைத்தார்
அல்லியரும்புத்திரரு மிருவரையுந்தப்பவிட்டு
ஆனைகுதிரைகளை அடங்கவொண்ணுசேனைகளை
அத்தண்டபேரையுமல்லவரைக்கொல்லவென்று
என்றதுசொன்னார் எம்பெருமாள்மேகவர்னர்

கதண்டுகுளவிகள் சேனைகளைக்கொல்வது.

மாயனுரைகேட்டு வருகுதுவண்டுகள்
பாளையத்தில்போய்புகுந்து பதைக்கவேகொல்லுகுது
கண்டதுண்டமாய்க் கடித்துமேபோடுகுது
ஈரல்பிடுங்குதே எல்லவரைக்கொன்றிடுதே
குடலைபிடுங்குதே குப்பையில்தள்ளுதே
அம்மாடியத்தையென்று அலறிவிழுவாரும்
செத்துமடிந்தாரே சிவலோகம்போனாரே
அல்லியரும்புத்திரரு மவ்விரவுதப்பிவிட்டார்
மற்றபேரெல்லோரும் மாண்டுமெடிந்தார்கள்
கண்டாளேயல்லியரும் கனந்தவிசாரமிட்டு
இதுவென்னபாவமிது ஏதுமறியேனே
அந்நீகமாகவே அனைவோருமாண்டார்கள்
எல்லோரையுந்தானெழுப்ப இளங்கொடியாள்தான்
ஆலவாய்ச்சொக்க ராண்டவனேவாருமென்றாள்
மதுரைமீனாட்சியம்மன் வாழ்மதுரைசொக்கரே
ஆபத்தைத்தீர்க்கவே ஆண்டவனேவாருமென்றாள்
தொழுதுவணங்கியே தோத்திரம்பண்ணலுற்றாள்

சொக்கலிங்கரும் மீனாட்சியம்மையும் வருகிறது.

சொக்கரதுதெரிந்து திடுக்கென்றுதானெழுந்து
அங்கயற்கண்மீனாட்சி ஆச்சியருந்தானெழுந்து
அல்லவரைத்தானெழுப்ப ஆண்டவருந்தான்வருவார்
மாயரதுவறிந்து வந்துவிட்டார்சொக்கரண்டை

என்னுடையமைத்துனரே எங்குநீர்போரீரோ
புருஷருந்தேவியுமாய்ப் போரவயணமென்ன
அல்லியிடபாளையங்கள் அவமாய்மடிந்தனகாண்
கதண்குகொட்டிசெத்தவர்க்குக் கன்னிபுலம்புகிருள்
அல்லவரைநானெழுப்ப ஆயரேபோரேனென்ருர்
மாயன்பெருமாளும் வந்ர்த்தைகளே துரைப்பார்
இதுவுமோர்காரியமாய் நீர்போரகாரணமேன்
அடியேனுலாகாதோ நானெழுப்பமாட்டேனே
என்னுலேயாகாதோ எழுப்பிவிடமாட்டேனே
மயிர்கால்முறியாதோ மாதரிடசேனையெல்லாம்
எழுப்பிவிடுகிறேன் ஈஸ்வரரேதப்பாது
அரண்மனைக்குப்போங்களென்ற னுப்பிவிட்டார்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அருச்சுனரையழைப்பது.

சேராம்புராசாக்கள் சீமையிலேவந்துவிட்டார்
அச்சுதானந்தரும் அந்ததல்லவேளையிலே
காலையில்தாமெழுந்து கால்கைகள்சுத்திபண்ணி
பூங்காவனத்திற்குப் போகிறவேளையிலே
மாயன்பெருமாளே கண்டுவணங்கினர்
ஆயன்பெருமாளே அடிபணிந்தாரெல்லவரும்
வாள்விசையனெங்கேயென்று மாயவனுர்கேட்கலுற்ருர்
மைத்துனரர்ச்சுன ரெங்கேயென்ருர்மாயவரும்
பங்கயஞ்சிர்கண்ணுள் பவளக்கொடியாளருகே
சதுரங்கமாடியே இருக்கிருன்தேர்விசையன்
வாள்விசையர்கோமானை வரவழைத்துவாருமென்ருர்
அவரோடுகூடவே அச்சுதருமோடிவந்தார்
அருச்சுனனுந்தேவியரும் ஆசாரவாசலிலே
சொக்கட்டானுடுகிற வேளையில்தோழனவன்
கண்காட்டித்தானழைத்தான் காண்டீபனருச்சுனரை
சைகையைத்தானறிந்து தேர்விசையன்தானெழுந்து
பூசைபண்ணிவாரேனென்று போனானருச்சுனனும்

அரண்மனைகளேழுகட்டு மந்தப்புரங்கடந்து
தெத்துக்கடந்து தெருவீதிவந்தபின்பு
ஆணழகனருச்சுனரே அரிராமர்வந்தார்காண்
மாயன்பெருமாளும் வரவழைத்தாருன்னையென்றார்
எங்கேயிருக்கிறார் எம்பெருமாள்சொல்லுமென்றார்
பிள்ளையார்கோவிலண்டை யிருக்குறார்வாருமென்றார்

அருச்சுனன் வருவது.

என்றதுகேட்டுமவர் இளவிசயன்தான்பார்த்து
பூங்காவனம்புகுந்து புஷ்மலர்பறித்து
மல்லிகைமுல்லை மலர்பறித்தோடிவந்து
மாயனிருபாதத்தில் வணங்கியேதெண்டனிட்டு
கொண்டுவந்தபூமலரைக் குபுகுபென்றுதான்சொரிந்து
முக்காலடிபணிந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வர்ழ்த்தியந்தமாயவரும்

ஸ்ரீகிருஷ்ணன் சொல்வது.

மைத்துனனருச்சுனரே மன்னுயெழுந்திருமென்றார்
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
மைந்தன்மேலாணையிட்டு வந்திரேவாள்விசையா
மற்றுமொருகன்னியரை மணமாலைசூட்டினுய்
மகுடத்துரைச்சியமள் வள்ளாடிபொல்லாதாள்
வெட்டியெறிவாளே வீரமணிவாளாலே
கொல்லநினைத்தாளே கொம்பனைமாதுகன்னி
வைகைநதியாள் வந்தாளேபடைகூட்டி
தண்டெடுத்துவந்தாளே தையலிளங்கொடியாள்
வடகோடிகானகத்தில் வந்துதண்டிறங்கியது
ஆயிரம்கூடாரம் அங்குவந்துபோட்டார்கள்
என்செய்வீர்வாள்விசையா என்றார்பெருமாளும்

அருச்சுனன் சொல்வது.

ஆணலழகுமன்னன் அர்ச்சனனுமேதுசொல்வார்
மதிமயக்கமாச்சுதே மாயவரேயென்னசெய்வேன்

எங்கேயொளித்து இருப்பேன்காண்மைத்துனரே
நான்-எமலோகம்போவேனே ஏழுலகங்கண்டவனே
பிர்மலோகம்போவேனே பெருமாளேசொல்லுமென
நீ-சிவலோகம்போனாலும் தேர்விஜயராசாவே
நீ-பிர்மலோகம்போனாலும் போய்பிடிப்பாளல்லியரும்
நீ-எமலோகம்போனாலும் இழுத்துவந்துசங்கரிப்பாள்
நீ-ஆகாயலோகம்போனாலும் அப்புக்கிரையிடுவாள்
நீ-பாதாளம்போனாலும் போய்பிடிப்பாளல்லியம்மாள்
இனியென்செய்வீர்காண் என்றார்பெருமாளும்
உன்-பாதாரவிந்தத்திலே பாகதிசேர்ந்திடுவேன்
நான்-செத்துமடிந்திடுவேன் ஸ்ரீராமா நீயறிய
நான்-வல்லபிராணனை கல்லோடுமோதிடுவேன்
வேறுகதியில்லையென்று விழுந்தலறிதெண்டனிட்டான்

கிருஷ்ணர் இருவரையுமாண்டவர்போல் செய்தது.

ஆயன்பெருமாளு மருளாளரப்போது
எந்நாளுமுந்தனிட மிடியோடேயெந்தனக்கு
உன்னாலேயென்னபாக்கியம் உண்டுபலன்கண்டேனடா
என்றந்தமாயவரும் இருவரைத்தானழைத்து
பவளநல்லகாட்டிலே பாராளந்தார்கூட்டிவந்து
அருச்சுனன்தன் னுயிரு மன்னவன்தன் னுயிரும்
இருவருயிர்வாங்கி எம்பெருமாளடக்கிவைத்தார்
கதண்டுகொட்டிசெத்தவர்போல்கரியமாலுண்டுபண்ணி
குடலைப்பிடுங்கியே குண்டிசரித்துவிட்டார்
வயிற்றைக்கிழித்து மணிக்குடலைத்தொங்கவிட்டார்
குத்திசரித்து குடலெல்லாந்தொங்கவிட்டார்
துண்டந்துண்டமாகத் துணித்தரித்தாரிருவரையும்
நாய்நரிகள்தீண்டாத நல்லெறும்புமேயாமே
சக்கரத்தைதானெடுத்து சுவாமியார்காவல்வைத்தார்
பத்திரமாயிருமென்று பாராளந்தாரப்போது



ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஓலையெழுதுதல்.

மற்றுமொருமரத்தடியில் வந்துபெருமாளும்
சேமக்குருத்தோலை வாரியந்தமாயவரும்
வண்ணக்குருத்தோலை வாரியந்தமாயவரும்
பொன்னெழுத்தாணி பொருந்தவேகைபிடித்து
ஒப்பனமாகவே ஓலையெழுதுகிறார்
சேராம்புராஜாக்கள் சென்றெழுதும்பாவனைபோல்
வெற்றிமதயானை வீமனவன்தனக்கு
நகுலசகாதேவ ராசாக்கள்யாவரும்
மந்தாரக்குந்தியற்கு மாயன்பெருமாட்கும்
பாஞ்சாலன்பெற்றெடுத்த பதிவிரதை துரோபதைக்கும்
ஆருயிரவரைபன் அண்ணமார்பாண்டியற்கும்
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியல்லியற்கும்
மேகம்பயின்றெடுத்த மின்னொளிநாயகிக்கும்
நாகங்களீன்றெடுத்த நாககன்னிமங்கையற்கும்
சோசாரவள நங்கை சுபத்திரை நாயகிக்கும்
ஊரிமதயானை உத்தமர்கள் நூற்றுவற்கும்
உறவின்முறையாரும் உள்ளவருந்தானறிய
அங்கத்தார்சுற்றத்தார் அனைவோருந்தானறிய
வெள்ளிக்கிழமையில் விடியவந்தநாழிகையில்
சேராம்புராஜாக்கள் துரைகளிடபட்டனத்தில்
பவளம்வெட்டபோனிடத்தில் பார்த்திபனருச்சுனனும்
அச்சுதானந்தர் அன்புள்ளதோழனுமே
கதண்டுகொட்டிமாண்டார்கள்கட்டாகவென்றுசொல்லி
சாவோலைதானெழுதி தலைபுரத்தில்கூடாரம்

ஸ்ரீகிருஷ்ணர் வெட்டியனாய் ஓலைகொண்டுபோதல்.

ஆயன்பெருமாளும் அருளாளரேதுசெய்தார்
வெட்டியானைப்போலாக வேடங்கொண்டாரப்போது
கம்பளியைப்போத்திக் கையில்தடியெடுத்து
தோட்டியைப்போலாகச் சாவோலைகைபிடித்து

178003 -600 008

ஓட்டம்பெரு நடையா வோடுகிறாரெம்பெருமாள்
அல்லிநல்லாள் தானிருக்கும் அவ்வழியேவர[illegible]
கண்டாளே தோட்டி தன்னை கட்டழகியல்லியரும்
மனிதருமில்லாதே மயங்குகின்ற வேளையிலே
தோட்டியை கண்டவளும் துரைச்சியவளே துரைப்பாள்
அண்ணாடா தோட்டியென்று அழைத்தாளே யல்லியரும்
ஏனம்மா யென்னையழைத்தீர் என்றவரும் தெண்டனிட
எவ்வூரு தோட்டி நீ எனக்கறிய சொல்லுமென்றாள்
சேரம்புராசாக்கள் சீமையின் தோட்டியென்றான்
எந்தவூர் பூமிக்கு ஓலைகொண்டு போரீர்காண்
குருநாட்டுசீமைக்குப் போறேனம்மா கொம்பனையே
குருகுலவம்மிசத்தில் குந்திமகனருச்சுனனை
தருமரிட தம்பியராம் தனஞ்செயனருச்சுனை
வெற்றிமதயானை வீமருக்குத்தம்பியராம்
சேரம்புராசாக்கள் துரைகளவர் பெண்ணை
பங்கயஞ்சீர் கண்ணாள் பவளக்கொடியாளை
பதினாறு நாளாச்சு பத்தினியை மாலையிட்டு
கதண்டுகொட்டி மாட்டான் காண்டீபனருச்சுனனும்
ஆகையினாலே அனுப்பினாரென்னையம்மா
ஓலைகொண்டுபோகிறேன்காண் உத்தமியேயென்னாச்சி
அவ்வார்த்தைதான் கேட்டு அலறிவயறெரிந்து
ஓலையைத்தாரும் உத்தமனே பார்ப்பபோசமன்றா இ
எந்திழையாள் முன்னெடுத்து ஈந்தான் மடக்கோலை
மடக்கோலைதானெடுத்து வாசித்துப்பார்த்தாளே
அதிலிருந்தமார்க்கமெல்லாம் அறிந்துபுலம்பலுற்றாள்
விரித்தாள் தலைகூந்தல் விட்டு விட்டெறிந்தாளம்பளத்தி
அப்பிகொண்டாளடிவயற்றில் அறைந்துகொண்டாள்
கோட்டையிடிந்தாற்போல் குத்திக்கொண்டாள் தன்வய
பிச்சிக்கொண்டாள் மார்சதையை பிடித்துக்கொண்டாள்
கோவென்றபத்தமுடன் குமறிப்புலம்பலுற்றாள்

ஐயோ தெய்வமே அனியாயம்பண்ணீரே
எங்கேயோவானம் இடித்ததென்றிருந்தேன்
தப்பாதேவானம் தலையிலிடித்ததுவே
தண்டெடுத்துவந்தேனே சண்டையிட்டுப்போராட
உயிரோடிருந்தால் உற்றசண்டைபண்ணவேணும்
மடிந்தவர் தன்னுடனே வார்த்தைகளேனெந்தனுக்கு
என்-பத்தாவைபறிகொத்து பாரினில் நிற்பேனோ
புருஷனைத்தானிழந்து பூமியிலே நிற்பேனோ
கூடமடிந்திடுவேன் குவலயத்தினில்லாது
மாண்டுமடிந்திடுவேன் வையகத்தினில்லாது
தீப்பாய்ந்துபோவேனென்று சொல்லியழுதாளே
உடன்கட்டையேறுவேனென்று உருகியழுதாளே
அண்ணாவேதோட்டியடா அழகுமைந்தன்தானேனடா
மைந்தன்புலந்திரனை யேத்தி நீமன்னவனே
கொண்டுபோஎன்மாமியிடம் குருநாட்டில்சேருமென.
பஞ்சவரைப்பெற்றெடுத்த பாவையாளென்மாமி
பாட்டியவள்கையிலே பாலனையொப்பியென்றாள்
அப்போதுதோட்டியவன் ஆரிழைக்கேதுசொல்வான்.
அரண்மனைகளென்றால் அஞ்சுவோம்நாங்களம்மா
தந்தமடக்கோலை தையலரே தாருமென்றான்
மடக்கோலைதான்கொடுத்தாள் மாதுவிளங்கொடியும்
ஓலையைக்கைப்பிடித்து உத்தமனுந்தானடந்தான்

புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனுமப்போது
மாதாவைப்பார்த்து மைந்தனுமேதுசொல்வான்
அம்மா-நானையாவென்றால் அடித்தாயேவாய்மேலே
இப்போ-ஆரென்றழுகிறீர் ஆனந்தவாழ்மாரி
புருஷன்மேல்சண்டைக்குப் போவாரோவையகத்தில்.
தண்டெடுத்துப்போகவே தனஞ்சயனார்மாண்டுவிட்டார்
வாளெடுத்துப்போகவே அவர்வைகுந்தஞ்சேர்ந்தாரே

நான்-பவளத்தேர்கேட்ட பாவமல்லோவென்தாயே
கேளாமல்நானிருந்தால் சுகமாயிருப்பாரே
எனக்காகவிங்குவந்து என்தகப்பன்தான்மடிந்தார்
என்தகப்பன்தன்னுடனேஎன்னுயிரை நான்மடிப்பேன்
என்தகப்பன்மாண்டு மினியிருந்தேன்பூமியிலே
நான்-இப்பவேயென்னுயிரை யிழக்கிறேன்மாதாவே
நான்-ஐந்துவயதம்மா அறியாதபாலனுக்கு
இந்தவிதியெனக்கு ஈஸ்வரனுர்கட்டளையோ
என்று-மண்ணில்விழுந்து மைந்தன் புரண்டழுதான்
அப்போது-மைந்தனழுகிற பரிதாபந்தான்பார்த்து
ஐயோசிவனேயென்று அழுகிறபாலன் தன்னை
நாயகியாள்சென்றெடுத்து நல்லதுதம்பியரே
அப்பாமகனே அறிவுள்ளகண்மணியே
இந்தவயதிலே ஈஸ்வரனுர்கட்டளையோ
அறியாதபாலனுக்கு அமைத்தாரேயித்துயரம்
இப்போ-பழிகாரியானேனே பாலன்புலந்திரனே
ஆறுததுக்கமுடன் அழுதுகொண்டுதானிருந்தாள்

கிருஷ்ணர் தருமருக்கு ஓலைகொடுத்தது.

தோட்டியுமான துவாரகாபுரிவாசன்
சில்லென்றகாடுகள் செடிகள்வனங்கடந்து
காடுகடந்து கரிமலைதான்கடந்து
அண்ணாமலையி லசைந்துவருங்காவேரி
வண்டார்மலைமாங்கள் வனங்களெல்லாந்தான்கடந்து
துங்கபத்திரிநாடு துடர்ந்தாரேதோட்டியரும்
குருநாடுதேசத்தில் கொற்றவனும்போய்ப்புகுந்து
அன்புடையதருமரவர் அரண்மனைக்குமுன்னேவந்து
கொற்தவனுர்தருமரவர் கொலுக்குமுன்னேவந்து
கைகட்டி நின்றவனுங் கனகவேதெண்டனிட்டான்
தயவாகத்தோட்டிமுகம் தருமருந்தான்பார்த்து
யாருடையதோட்டி நீ யென்றுரேவானழகர்

நான்.சேராம்புராசாக்கள் தேசத்துதோட்டியென்றான்
இங்கே நீவந்ததென்ன எனக்கறியக்கூறுமென்றார்
சொன்னவுடனேயவன் சுருளோலைகைகொடுத்தான்

தருமர் முதலிய யாவரும்புலம்பல்.

மடக்கோலைகட்டவிழ்த்து வாசித்துப்பார்த்தவரும்
அதிலிருக்குஞ்செய்தியெலாம் அறிந்தாரே தர்மலிங்கம்
வாய்மூடி தருமரவர் வயிறெறிந்துபுலம்பலுற்றார்
மாளவோதம்பியரே உன்னையனுப்பிவைத்தேன்
செல்வத்திருமுகமே தேர்விஜயனருச்சுனரே
என்-கட்டிக்கரும்பேநீ கருவினமேயெங்கொளித்தாய்
தேடக்கிடையாத திரவியமேயெங்கொளித்தாய்
சுவரிலெழுதவொண்ணாச் சித்திரமேயெங்கொளித்தாய்
படத்திலெழுதவொண்ணாப் பார்தீபாஎங்கொளித்தாய்
உன்னைப்பிரிந்துநா னிருப்பேனோபூமியிலே
நானெப்படிமனந்துணிந் திருப்பேனோவாள்விஜயா
என்றதுசொல்லியே ஏங்கியழுலுற்றார்
வெற்றிமதயானை வீமசேனன்கேட்டு
விம்மியழுதானே விழுந்துபுரண்டழுதான்
கூவியழுதானே கொற்றனுமப்போது
நகுலனதுகேட்டு நலமுடனேயோடிவந்து
மடிந்தீரோமன்னாவென்று மண்ணில்புரண்டழுதான்
செத்துமடிந்தீரோ சிவலோகம்போனீரோ
மாண்டுமடிந்தீரோ வைகுந்தம்போனீரோ
உன்னையும்விட்டுநான் இருப்பேனோபூமியிலே
தரையில்புரண்டழுதான் தக்கநகுலனவன்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவன்தான்கேட்டு
அண்ணாவேயென்று அழுதுபுலம்பலுற்றார்
குந்தியம்மாள்தான்கேட்டுக் குஞ்சரமேயென்றழுதாள்
ஐயாமகனேயென்று அழுதுபுலம்பலுற்றாள்
பாஞ்சாலன்தன்மகளும் பத்தினியாள்துரோபதையும்

மாரிழவுகொண்டு மயிரைவிரித்துக்கொண்டு
ஏங்கியழுதாளே இடைதாவடம்புரள
அந்நகரிலுள்ளோர் அனைவருந்தானழுதார்
வர்த்தகருந்தானிகரும் வந்துதுக்கங்கொண்டார்கள்
திக்கெட்டுஞ்சீட்டெழுதித் தேசமெங்கும்பாட்டெழுதி
மாரிழவுகொண்டார்கள் மகாசேனையுள்ளவர்கள்
அங்கவர்கள் துக்கம் அழுதுவந்துகண்டார்கள்
எல்லோருங்கூடியே இரைந்தழுதுகூச்சலிட்டார்
கட்டியழுதார்கள் கடலிரையும்வெள்ளம்போல்
எல்லையளந்த எம்பெருமாள்தான்பார்த்து
குஞ்சிரிப்புக்கொண்டு குலுங்கநகைநகைத்து
நீங்கள் நடவுங்கள் என்றூரே நீலவர்னர்

தருமர் முதலிய யாவரும் பவளக் காட்டிற்கு வருவது.

அப்போதுதருமலிங்கம் அவசரமாய்த்தானெழுந்தார்
தம்பிமார்மூவரும் தானும்நடக்கலுற்றார்
குந்தியம்மாள்தானும் கூடநடக்கலுற்றார்
பத்தினியாள் துரோபதையும் மற்றுமுள்ளவேதியரும்
தங்கவளையம்மாள் தானும்நடக்கலுற்றாள்
பல்லக்கின்மேலேறி நடந்தார்பலபேரும்
வேங்கையடர்ந்தவனம் வெண்களாபூத்தவனம்
கோங்குபருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
சிங்கமுலாவும்வனஞ் சிறுபுலிகள் தூங்குவனம்
யாளிகள்வாழுமந்த அவ்வனத்தைத்தான்கடந்தார்
மயிலோசைகேட்குமந்த மாந்தோப்புதான்கடந்தார்
அண்டரறியாத தண்டவனங்கடந்தார்
வேந்தரறியாத வெளிக்காடுதான்கடந்து
சந்திரசூரியர்கள் காணுவனங்கடந்தார்
அல்லியம்மாள்தானிருக்குமவ்வனத்தில்தான்வந்தார்

தருமர் புலந்திரனை அழைப்பது.

தாரார்புகழுடைய தருமர்பெருமாளும்
கண்டாரேயந்நேரம் கண்மணிபுலந்திரனை

அப்பாபுலந்திரனே அழகுள்ளகண்மணியே
தேனேபசுங்கிளியே தெவிட்டாததெள்ளமுதே
கண்ணே நவமணியே கற்கண்டேசற்கரையே
சொக்கநாதர்கோவிலுக்குத் தூண்டாமணிவிளக்கே
என்தம்பிபுலந்திரனே தனிவிஜயன்புத்திரனே
வைகைக்கரைதனக்கு மண்சுமந்தசொக்கரே
ஆயிரம்பாண்டியற்கு அழகானபேரனையா
வாராய்மகனேயென்று வாரியெடுத்தணைப்பார்
தம்பிநீவாடாவென்று தருமரெடுத்துரைப்பார்
போரஞ்சாமன்னன் புலந்திரனுந்தான்பார்த்து
பெரியப்பாவென்று பிரியமுடன்தெண்டனிட்டான்
அண்ணாவியென்று அடிபணிந்துதெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாரியெடுத்தணைத்து
வாழ்த்தியெடுத்து மகனைமடியில்வைத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
மைந்தன்புலந்திரனை மன்னவனுந்தான்பார்த்து
என்-தங்கக்களஞ்சியமே தார்வேந்தர் பூஷணமே
அரியசிரோண்மணியே அருச்சுனனையெங்கேயென்றார்.

புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
ஐயாவே நீர்கேளும் அடைவாகச்சொல்லுகிறேன்
பாண்டிவளநாட்டாளைப் பவளத்தேர்கேட்டேனப்பா
பாண்டியவளநாட்டில் பவளங்கிடையாது
எனக்குதோஷித்ததென்று எழுதியவோலைவிட்டாள்
களைதாங்கிபோச்சுதென்று கன்னியெழுதிவிட்டாள்
அப்போதுஐயரும் அவரிங்கேவந்தாரையா
ஐயரைநானும் பவளத்தேர்கேட்டேனையா
எடுத்துமடியில்வைத்து என்கண்ணே நல்லதென்றார்
எப்போவருவீரென்று யான்கேட்டேனையாவே
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று

என்பேரிலாணையிட்டு எழுந்தருளிப்போனாரையா
சோர்ப்புகானத்தில் செத்துமடிந்தாரையா
பவளத்தேர்கேட்டுநான் பழிகாரனானேனையா
சும்மாவிருந்தேனானால் சுகமாயிருப்பாரையா
ஐயாவேயென்று அலறினான்பாலகனும்
தாரார்புகழுடைய தருமாவர்கேட்டு
பாலன்புலந்திரனைப் பார்த்துமேபுலம்பலுற்றார்
அறிவுள்ளஐயாவே ஐயாவேயென்றழுதார்
வெற்றிமதயானை வீமனும்பார்த்தழுதான்
நகுலசகாதேவரென்னும் ராஜர்புலம்பலுற்றார்
அங்கவர்களெல்லோரும் அழுதுபுலம்பலுற்றார்
தாரார்புகழுடைய தருமர்பெருமாளும்
மதுரையையாளுகிற மாதுமுகம்நோக்கி
மைந்தரும் நீருமாய் வந்ததென்னசொல்லுமென்றார்

அல்லியரசாணி சொல்வது.

பிறவாமுடிதரித்த பெண்ணரசிசொல்லலுற்றாள்
வந்தேன்மதிகுலைந்தேன் விதியினிடவசத்தால்
முன்னேநடந்த முறையெல்லாம்சொல்லலுற்றாள்
போரஞ்சாமன்னன் புலத்திரவீரியனும்
பவளத்தேர்வேணுமெனப் பலபேரைநான்கேட்க
சேராம்புகானகத்தில் உண்டென்றார்செம்பவளம்
எங்களாலாகாது எடுத்துவருவதற்கு
அருச்சுனராஜாவால் ஆகுமென்றாரெல்லவரும்
மைந்தன்புலந்திரற்கு மகாபயம்வந்ததென்று
ஓலையெழுதியே வுத்தமரே அனுப்பிவைத்தேன்
அதனாலேஅருச்சுனரும் அவரிங்கேவந்தாரையா
பாலன்புலந்திரனும் பவளத்தேர்கேட்டானையா
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
மைந்தன்மேலாணையிட்டு மன்னவருப்போனார்காண்
பதினாறுநாளாயும் பார்த்தன்வரவில்லையென்றாள்

ய்யாரோகுயித்தியங்கள் பண்ணுகிறாரென்றுசொல்லி
தண்டுதளமெடுத்து வந்தேன் தனஞ்செயரே
மதுரைப்படைத்தலைவர் மகாராஜரத்தனையும்
யானைகுதிரைகளும் அண்டவொண்ணாச்சேனைகளும்
கதண்டுகுளவிவந்து கொட்டிமடிந்ததுவே
மைந்தனும்நானும் மரம்போலே நின்றுவிட்டோம்
தருமரதுபாதத்தில் தான்விழுந்துதெண்டனிட்டு
என்னசெய்வேனென்று ஏங்கிமிகவழுதாள்
மைந்தன்புலந்திரனை வைத்துவளர்த்திடுங்கள்
எடுத்துவளர்த்திடுங்கள் என்றந்த அல்லியம்மாள்
தீப்பாய்ந்துபோவேனெனச்சொல்லிப்புலம்பலுற்றாள்
பாராளுந்தருமலிங்கம் பார்த்துமிகவழுதார்
மோதிரக்கையை முகத்தோடேவைத்துக்கொண்டு
மெத்தப்புலம்புகிறார் வேந்தர்தருமலிங்கம்

கிருஷ்ணன் அர்ச்சுனன் இறந்துவிட்டதைக் காட்டுதல்.

எல்லையளந்தொரு எம்பெருமாள்தான்பார்த்து
ஏன்காணழுகிறீர்கள் இப்பெரியகானகத்தில்
மன்னவரருச்சுனனார் மாண்டவிடங்காட்டுகிறேன்
என்றுசொலிமாயவரும் எல்லோரையுமழைத்துவந்து
வாள்விஜயன்பிணத்தை வகையாகக்காட்டலுற்றார்

தருமர் முதலிய யாவரும் புலம்பல்.

தக்கபுகழுடைய தருமர்பெருமாளும்
விஜயன்திருமுடியை வேந்தர்வரவழைத்து
காண்டீபன்தன்சிரசைக் கண்மலரிலொற்றிக்கொண்டு
தம்பியடாவென்று தருமர்மிகவும்புரண்டழுதார்
வீமரவர்பார்த்து மிகவும்புரண்டழுதார்
நகுலசகாதேவர் ராஜர்புலம்பலுற்றார்
அண்ணாவேயென்று அழுதுபுலம்பலுற்றார்
மந்தாரக்குந்தியம்மாள் மாதுபுலம்பலுற்றாள்
சங்கோதியம்மாள் பார்த்துப்புலம்பலுற்றாள்

பாஞ்சாலன்பெற்றெடுத்த பத்தினி துரோபதையும்
மாலையிட்டமன்னவரே மடிந்தீரோகானகத்தில்
என்றந்த துரோபதையும் ஏங்கியழுகலுற்ருள்
மதுரைத்துரைச்சி மாதுநல்லாளல்லியரும்
காண்டீபனருச்சுனனைக் கண்டுமனங்கொதித்து
பார்த்துமேமாரடித்துப் பைங்கிளியும்தானழுதாள்
கூடமடிவேனையா கொற்றவரேயென்றுசொல்லி
மெத்தப்புலம்புகிருள் மெல்லிநல்லாளல்லியரும்
அச்சுதன்தங்கை ஆரணங்குசுபத்திரையும்
என்-கண்ணுனமைத்துனரே காண்டீபனருச்சுனரே
உம்மைவிட்டுநான்பிரிந்து இருப்பேனோபூமியிலே
மாண்டுமிருக்கிறது மன்னவனே நீதியுண்டோ
இனியிந்தச்சீவனை இழக்கிறேனென்றழுதாள்
கோவென்றழுதாள் கோபாலன்தங்கையவள்
பத்தினிமாரெல்லோருந் தாந்தாமாய்த்தானழுதார்
போராஞ்சாமன்னன் புலந்திருமப்போது
அந்த-பாராளுந்தருமரைப் பார்த்தந்தப்பாலகனும்
ஐவருடன்கூட ஐயாவேநான்மடிவேன்
நான்கூடமடிவேனென்று குழந்தையழுகிருனும்
பாலனழுகிற பரிதாபந்தான்பார்த்து
மைந்தன்புலந்திரனை மன்னவருந்தான்பார்ந்து
அறியாதபாலகனே அறிவுள்ள அப்பாவே
இந்தத்துயரமும் வருவானேனுந்தனுக்கு
இது-மாயர்மருத்துவமோ மன்னவனேநாமறியோம்
மைந்தனைத்தானிணைந்து மன்னவருந்தானழுதார்
வெற்றிமதயானை வீமனவன்பார்த்தழுதார்
நகுலசகாதேவ ராஜாக்கள்தானழுதார்
முந்துமுடிதரித்த முருகுழலாள்புத்திரனை
கட்டியழுதார்கள் கடலுடைந்தவெள்ளம்போல்
கூட்டியழுதார்கள் கொம்பனைவாரெல்லாரும்



சேரம்புராசாக்கள் பவளக்கோடியாளை அருச்சுனராசன் எங்கேயென்று கேட்குதல்.

சேரம்புராஜக்கள் தெருவிலுலாவுகையில்
வடகோடிகானகத்தில் வருவானேன்கூச்சலென்று
ஐம்பதுபேருமாய் அரண்மனைக்குள்ளேவந்து
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
மாப்பிள்ளைராயனும் மன்னவனுரெங்கேயென்றார்
பூசைபண்ணிவாரேனென்று போனாரேகானகத்தில்
வடகோடிகானகத்திலென்னமோகூச்சலென்று
அஞ்சலிலேதூதுவரை அனுப்பிவைத்தாரப்போது
அப்போதுதூதுவர்கள் அடுத்தார்களவ்வனத்தை
மாப்பிள்ளைராயர் வைகுந்தஞ்சேர்ந்தார்காண்
பூசைபண்ணிவாரேனென்று போனாரவர்கானகத்தில்
வடகோடிகானகத்திலென்னமோகூச்சலென்று
அஞ்சலிலேதூதுவரை அனுப்பிவைத்தாரப்போது
அப்போதுதூதுவர்கள் அடுத்தார்களவ்வனத்தை
மாப்பிள்ளைராயர் வைகுந்தஞ்சேர்ந்தார்காண்
அவர்களுடசேனைகளும் அனைவோரும்வந்திறங்கி
கட்டியழுகிறார் கானகங்கொள்ளவில்லை

சேரம்புராஜாக்கள் வருவது.

ஐம்பதுபேர்ராஜாக்கள் அபயம்சிவாயமென்று
முன்னறியேன் பின்னறியேன் மும்மூர்த்தியானவரை
அனியாயமென்றுசொல்லி அருஞ்சிறையாவதென்ன
ஐம்பதுபேர்ராஜாக்கள் அவர்களிடதேவியரும்
எல்லாருங்கூடியே ஏகலுற்றார்கானகத்தில்
கானகத்தில்வந்து கதும்பிமிகவழுதார்

பவளக்கோடியாள் புலம்பல்.

கட்டியழுதார்கள் கடலுடைந்தவெள்ளம்போல்
அப்போ-பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பதினான்குதன்வருஷம் பாவிசிறையிருந்தேன்

இந்தப்பழமொழியால் ஈஸ்வரரேயிங்குவந்து
என்னை-மாலையிடச்சொல்லி மயக்கமல்லோபண்ணீரே
அப்படியேமாலையிட்டே னருச்சுனரை நானுமையோ
அண்டமுகடளந்த ஆயர்பெருமாளே
நீ-எத்தனை நாள்காத்திருந்தீர் என்னைசிறையில்வைக்க
எத்தனைபேராஜாக்கள் வந்தார்கள்மாலையிட
நான்.யாருக்குமாலையிடே னென்றிருந்தேனிப்போது
அருச்சுனரைமாலையிட்டு அருஞ்சிறையானேனே
ஐயையோ'தெய்வமென்று அலறியழுகிருள்.
அப்போதுஎம்பெருமாள் ஆயரவர்பார்த்து
மதுரை துரையல்லியரின மனதைக்கலக்கிவிட்டார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் நாயகியும்
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளை
உறறுற்றுப்பார்த்து உளமுமிகக்கலங்கி
வாலைப்பிராயம் வயதுபதினறிருக்கும்
பேரிற்பவளம் மின்னுகிறகாந்தியைப்போல்
கோடிசூரியப்பிரகாசம் போலேயிருக்கின்ருள்
இவைகளெல்லாமறிந்தா ளிளங்கொடியாளல்லியரும்
வாள்விசயன்தோள்மேலே மாலையிட்டாளுத்தமியும்
நாம்-காணுதகாட்சியெல்லாங் கண்டோமிது நெடுநாள்
பதினறுநாளையிலே பாவிசிறைவைத்தார்காண்
என்றுசொல்லியல்லியரும் ஏங்கியழுதாளே
தோராவடிவழகி துரோபதையுந்நான்கேட்டு
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளை
கட்டியழுதார்கள் கமலப்பூநாயகியை
ஐம்பதுபேர்ராசர்களு மவர்களும்தானழவே
ஆறுயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
எல்லோருங்கூடியே யிசைந்தழுதுகூச்சலிட்டார்
அங்கவர்கள் துக்க மடங்கினபிற்பாடு
தக்கபுகழுடைய தருமரவரே துசொல்வார்
இறந்ததோரருச்சுன னு மினிதிரும்பப்போரதில்லை

மாண்டதோருச்சுனனு மறுபடியும்வாறதில்லை
என்தம்பியைத்தானெடுத்து தகனங்கள்செய்யவேணும்
ஆராரைக்கூட்டி அனுப்புவது சொல்லுமென்றார்
அப்போது அல்லியரும் அரசர்க்கெடுத்துரைப்பாள்
ஆதீனக்கர்த்தாவே ஐயாவே நான்பாவி
ஐவருக்குப்பொதுவல்லோ ஆரணங்குதுரோபதையும்
மேகத்தில்வந்துதித்த மின்னொளிநாயகியாள்
பார்ப்பான்மகளான பரிவுடையபோகவதி
நாகம்பயின்றெடுத்த நாககன்னிநாயகியும்
அச்சுதன்தங்கை ஆரணங்குசுபத்திரையும்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
அன்னநடைமாதர்களை அக்கினியில்தள்ளுமென்றார்
அப்போ-ஐம்பதுபேருமாய் அனைவோருமோடிவந்து
தாரார்புகழுடைய தருமரடிவணங்கி
ஐம்பதுபேராசருக்கும் ஆண்டிருக்கபிள்ளையில்லை
ஐம்பதுபேராசர்களும் அருந்தபசுபண்ணுகையில்
எங்கள்-யாவருக்கும்பிள்ளையில்லை என்றந்தஈஸ்வரனார்
பவளக்கொடிமேலே யுண்டுபெண்ணார்பாலகியை
பிள்ளைகலியினால் பெண்ணென்றும்பாராமல்
பெண்ணென்றெண்ணாமல்பிள்ளையைநான்வளர்த்தேன்
பிள்ளையென்றுசொல்லி பெண்மகுடஞ்சூட்டினோம்
வண்ணலட்சங்கோடியுண்டு மாலையிடவந்தவர்கள்
மற்றொருவர்கையில் மணமாலைதீண்டேனென்று
நித்தியகன்னியாகவே இராச்சியத்தையாண்டிருந்தாள்
பதினாறுநாளாச்சு பாவிவந்துமாலையிட்டு
அப்படிப்பட்ட அரசரையனுப்பிவிட்டு
தியங்கியிருப்போமோ திருமகளைத்தானிழந்து
எங்களைக்கூடவேயிளவரசேதள்ளுமென்று
ஐம்பதுபேராசர்களும் அவர்பாதம்போய்பணிந்தார்
தாரார்புகழுடைய தருமரவர்பார்த்துமல்லோ
பாராளுந்தருமரந்தப் பரிதாபம்பார்த்துமல்லோ

மோதிரக்கையை முகத்தோடணைந்துக்கொண்டு
மகாராசர் தருமரவர் வயிறெறிந்துமனங்கலங்கி
என்னசெய்வேன்வாழ்விசையா என்றுமிகவழுதார்
அந்நேரவேளையிலே அரிராமரேதுசொல்வார்

ஸ்ரீகிருஷ்ணர் வைத்தியனாய்வருவது.

பாராளுந்தருமரிடபரிதாபம்பார்த்துமல்லோ
ஏழுமலையளந்த எம்பெருமாளப்போது
எழுப்பிவிடவேணுமென் றெம்பெருமாள்தானெழுந்து
மாயன்பெருமாளும் மனமகிழ்ந்துவாரார்காண்
மந்தமடிப்புகளும் மாணிக்கதொப்பைகளும்
பொன்னால்மிதியடியாம் பொந்திக்கோல்கைப்பிடித்து
வைத்தியன்போலாக மருந்துபையைதோளில்வைத்து
ஆரடாமன்னவனே யாரவர்கானகத்தில்
எவர்காணுமிங்கே இறைச்சலென்னகானகத்தில்
அப்போதருமர் அரசாளும்ராசதுரை
நாங்கள்-குருநாடுசீமை கூச்சல்வந்ததென் றுசொன்னார்
தர்மரென்றுசொல்லுவார் நீதானுதார்வேந்தா
ஆமையா நான்தான் அவதிப்படுகிறேன்
மாண்டதொருமன்னன் மன்னவனேயார்காணும்

வைத்தியருக்கு தர்மர்சொல்லியது.

என்னோடேதான்பிறந்த எழில்விசயர்ச்சுனர்காண்
மாண்டமன்னர்க்கிந்த மாதரெல்லாம்வரிசைஎன்றார்
தாயாருங்குந்தியம்மாள் தங்கையவள்சங்கோதி
இவ்விருவர்தான்தவிர இயலானஐயாவே
மற்றதொருமாதரெல்லாம் மன்னனிடதேவியர்கள்
சிவசிவாவென்று திருச்செவியில்கையைவைத்து
கண்மூன்றுமில்லையோ கைலாசநாதருக்கு
என்றுஉலகளந்த எம்பெருமாள்மனமுருகி
வானவர்கள்தேவருக்கும் வைத்தியனென்காணும்
கதண்டுகொட்டிமடிந்தவரைஎழுப்பித்தருவேனென்றார்

இறந்ததொருமன்னவனை யெழுப்பிவிட்டோமாகில்
எனக்கென்னகொடுப்பீர்காண் யென்றார்பெருமாளும்

தருமர் சொல்வது.

அப்போதுதர்மர் அதிகமனமகிழ்ந்து
அப்படியேநீரும் எழுப்பிவிட்டீராமாகில்
அண்டங்குருநாடு அடங்கலுமும்முதென்றார்
அப்படியேசொன்ன லாகாதுஐயாவே
எழுதித்தரவேணும் என்றாரேயெம்பெருமாள்
தாமமுடியார் தர்மரெடுத்துரைப்பார்
அந்நகருநாடும் ஐந்துபங்காய்பங்கிட்டு
நால்வரிடபங்கை நானெடுத்துத்தாரேனிப்போ
வில்லாளிபார்த்தன் விசையன்பிழைத்தாக்கால்
தந்தேனேயாமாகில் தார்வேந்தாவாங்கிக்கொள்ளும்
எல்லையளந்த எம்பெருமாள்தான்கேட்டு
சந்தோஷப்பட்டு தன்மனதில்தானடக்கி
மதுரைநகராளும் மாதுமுகம்நோக்கி
பத்தாவைத்தானெழுப்பித் தாரேனென்பைங்கிளியே
எனக்கென்னதருவாய் என்றாரேயெம்பெருமாள்
அப்போது அல்லி ஆரணங்குமேதுசொல்வாள்
என்வாழ்வுபாண்டிநாடும் மதுரைப்பதினுயிரமும்
என்-அந்நகரநாடும் அடங்கலுமுன்னுதென்றாள்
அப்படிக்குச்சொன்னல் ஆகாதுஆரணங்கே
எழுதித்தரவேணும் என்றாரேயெம்பெருமாள்
அப்போதுஎம்பெருமாள் அதிகமனம்பூரித்து
ஆயருமப்போது அர்ச்சுனரைச்சுற்றிவந்து
வளயத்திரைபோடும் என்றாரேயெம்பெருமாள்
வளயத்திரை நடுவில் மன்னவரைகொண்டுவந்து
எடுத்துநிறுத்துமென்றார் யெம்பெருமாள்மேகவர்னர்
எடுத்துநிறுத்தினர் யியலானமன்னவரை
பாலுடன்தேனும் பசுவின்நெய்வேணுமென்றார்
அப்படியேகொண்டுவந்து கொடுத்தார்களப்போது

வைத்தியர் சொல்வது.

ஓமம்வளர்த்தி உலகளந்தமாயவரும்
காயம்பட்டமேனியெல்லாங் கையாலேதான்தடவி
மற்றுமொரு நினைவாய் மாயவருமேதுசொல்வார்
பெண்களைப்பார்த்தாற் பொறுக்கமுடியாது
வசைபண்ணும்பெண்டுகளை உறுதிபண்ணிதாருமென
அப்படியேநல்லதென்று அரசரந்ததர்மதுரை
கால்வேறுகைவேறாய் கடுகக்கிடத்திவைத்து
எமலோகம்போனவுயி ரிட்டுவந்தேனிப்போது
வந்ததொருசீவன் வைகுந்தம்போகுதுகாண்
எடுத்தடக்கிகொள்ளு மென்றல்லோஎம்பெருமாள்
எழுந்துநடந்தாரே எம்பெருமாள்மேகவர்னர்
அப்போதுதர்மாவர் அவர்பின்னேதானடந்தார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்பின்னோட
முன்னோடிவந்தவுடன் பெருமாளுநின்றல்லோ
செந்தாமரைபுட்பம் தேவிதனைநோக்கி
விசயனருச்சுனனை வதையொன்றும்பண்ணேனென்று
நிச்சயமாய்ச்சொன்னால் நிசமாயெழுப்பிடுவேன்
என்றுரைக்கமாயவரு மேந்திழையுஞ்சொல்லுவாள்
எங்கள் ஆருயிரவர் ஐயமார்தம்மானை
அங்கயற்கண்ணம்மை அவருடையசீர்பாதம்
என்சீவனுள்ளகாலமெல்லாம் தீண்டேனருச்சனனை
என்றுசொல்லமாது எம்பெருமாள்சம்மதித்து
சோரவளநங்கை சுபத்திரையைத்தான்பார்த்து
நீஎன்னசொல்லுமென்றார் நிகரில்லாமாயவரும்
எங்களண்ணனுடசீர்பாதம் அவரைநான்தீண்டவில்லை
அலைமோதுபார்க்கடலில் பள்ளிகொள்ளுமச்சுதர்காண்
நீஇட்டதோராணை எனக்குமிகப்பாரமல்லோ
சூடாமணிக்கடகத்தில் இருக்கின்றதுபூதமது
அதை-விட்டுவிட்டாயானால் விசையெனழுந்திருப்பார்

மாட்டேனென்றுசொல்லி மறுத்தாள்சுபத்திரையும்
ஆனைமறந்தாளே ஆரணங்குசுபத்திரையும்
பிறவாமுடிதரித்த யெம்பெருமாள்தான்கேட்டு
கோபந்தணலாகி கொம்பனையாளப்போது
விடுகிறையோயில்லையோவேல்பொருதுங்கண்ணளே
வுன்னொருத்திக்குமன்னர் உயிரிழந்துபோனுக்கால்
நாங்களத்தண்டபேரு மருஞ்சிறையாவோமடி
என்றுசொல்லியருச்சுன ராசனைதானெழுப்ப
பூதத்தைவிட்டாள் பொற்கொடியாள்சுபத்திரையும்

வைத்தியனுகிய கிருஷ்ணர் அர்ச்சுனனையெழுப்புதல்.

அப்போதுஎம்பெருமாளங்கமிகக்குளிர்ந்து
அர்ச்சுனராசனை சுற்றிவந்துமாயவரும்
தட்டியெழுப்பினர் தனஞ்செயாருச்சுனரை
அண்ணரிடபாதம் அடிவணக்கிதெண்டனிட்டான்
வாரியெடுத்து மார்போடதானணைத்து
நீர்-வைகுண்டம்போனீரோ வாள்விசையனருச்சுனரே
ஆகாயம்போனீரோ ஆணழகாவருச்சுனரே
என்று-கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
என்னையாவென்றுதருமருஞ்சொல்லிக்கொண்டார்
அப்போதுவாள்விசைய னடிதொழுதுதானெழுந்து
குந்தியம்மாள்பாதம் கொறறவனுந்தெண்டனிட்டான்
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டாள்
வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
விசையனருச்சுனனை வேல்பொருதுங்கண்ணளன்
அவன்-கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
வேல்பொருதுங்கண்ணு விசையா நீஎங்கேயோனுய்
சீனிசர்க்கரை செல்வமேஎங்குபோனுய்
என்றுமே வீமனிருந்தானகமகிழ்ந்து
நகுலசகாதேவர் இராசமுடிமன்னவர்கள்
அண்ணுவேயென்று அருச்சுனரைக்கட்டிகொண்டார்

பொங்கிமனமகிழ்ந்து புகழ்வேந்தர்தாமிருந்தார்.
மைந்தன்புலந்திரனு மன்னவனுமப்போது
அர்ச்சுனர்பாத மடிவணங்கிதெண்டனிட்டான்
தெண்டனிட்டமைந்தனை தேர்விசையர்தானெடுத்து

அர்ச்சுனர் புலந்திரனைக்கேட்பது.

வாழ்த்தியெடுத்து மடியின்மேல்வைத்துக்கொண்டு
முகத்தோடமுகம்வைத்து முத்தமிட்டுபாலகனை
என் தங்கமுடிபெற்ற தார்வேந்தன்புலந்திரனே
ஏன்வந்தாயிங்கேயென்று எழில்விசயர் தான்கேட்டார்

புலந்திரர் சொல்வது.

அப்போதுபுலந்திரனு மருச்சுனர்க்குசொல்லலுற்றார்
குருநாட்டில்தானிருந்து கொற்றவரே நீங்களுந்தான்
மதுரைக்குத்தாங்கள்வந்து மன்னவரேயிப்போது
பவளத்தேர்சொப்பனிட்டு கொண்டுவாரேனென்று நீர்
மூன்று நாளாறுபொழுதிலே வாரேனென்றுசொல்லி
பதினாறுநாளாச்சு பார்த்தாவர்வரவில்லையென்று
மாதுநல்லாளல்லியரும்வந்தாள்படையெடுத்து
அந்த-தாமமுடியாளும் தண்டுதளமெடுத்து
எங்களையர்போனவழி யிதுதானோவென்றுகேட்டான்
ஐயரென்றுசொல்லவே அடித்தாளேவாய்மேலே
அப்படிகோபமாய் வரும்போது அல்லியரும்
சேரம்புகானகத்தில் சென்றோம்தளத்தோடே
தண்டுதளங்களெல்லாந் தயாரித்துயாமிருந்தோம்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
சேராம்புகானகத்தில் சேவிக்குமவேடர்வந்தார்
அந்த-வேடுவரை யப்போதுவேந்தர்கள்தான்பிடித்து
மாதுயிருக்கும் மயிலணையாள்கூடாரம்
கொண்டுவந்துவிட்டார்கள் கொற்றவரும்வேடுவரை
மதுரைநகராளுமெங்கள் மாதுநல்லாளப்போது
நீங்களார்காணுமென்று அல்லியருங்கேட்கலுற்றாள்

சேராம்புகானகம் சேவிக்கும்வேடரென்ருர்
யாருடையசீமையென்று அருங்கிளியாள்கேட்டாளே
பவளக்கொடியாளின் பைங்கிளியின்சீமையிது
என்றந்தவேடுவரும் ஏந்திழைக்குச்சொன்னார்கள்
அப்போதுமாது நல்ல அல்லியருஞ்சொல்லலுற்ருள்
மாதுநல்லகன்னியற்கு மணமாலையாச்சுதடா
பதினாறுநாளாச்சு பைங்கொடிபைமாலையிட்டு
ஒக்கவொருவ னுயிர்த்தோழனுகவந்தான்
அவருக்குமணமாலை ஆச்சுது அம்மாளே
என்றதுகேட்டாள் இளங்கொடியும் அல்லியம்மாள்
கதும்பியெழுந்திருந்தாள் காட்டானைபோலாக
அப்படியாயென்று ஆரணங்குமப்போது
கோபந்தணலாகி கொம்பனையுந்தானிருந்தாள்
கதண்டுகுளவிகளும் காவலரைத்தானுமப்போ
யானைகுதிரைகளை அடல்பெரியசேனையெல்லாம்
கொட்டிமடித்தது கொற்றவரெல்லாரையும்
மதுரைத்துரைச்சி மைந்தனைத்தப்பவிட்டு
அத்தண்டசேனையெல்லா மங்கேமடிந்தார்கள்
செத்துமடிந்ததை செல்வதியாள்தான்பார்த்து
ஈஸ்வரியேபார்வதியே என்றுபுலம்பலுற்ருர்
மெத்தவிசாரமாய் மெல்லியருந்தாமிருந்தாள்
சேராம்பராசாவின் தோட்டிஒருவன்தான்
நீர்-எந்தவூர்போனீர் என்ருளிளங்கொடியும்
குருநாடுசீமைக்குக் கொற்றவர்ஓலைகொண்டு
தருமர்க்குதம்பியராம் அவர்பேருச்சுனராம்
சேராம்புகானகத்தில் சென்றுமடிந்தாரங்கே
தருமர்க்குஓலைகொண்டு வந்தேனென்ருன்சாம்புவனும்
அப்போதுமாது அலரிமிகவழுதாள்
அடித்துப்புரண்டழுதாள் அன்னநடையாளும்
என்னசெய்வேனென்று ஏங்கியழுதாளே
குருநாடுசீமையிலே கொற்றவருந்தேவியரும்

மாண்டயிடத்துக்கு மன்னவர்களெல்லோரும்
எல்லோரும்வந்தார்கள் இறைச்சலிட்டுதானழுதார்
அதனாலேயிங்குவந்தோம் ஐயாவேயென்றுசொன்னான்
பாலன்சொன்னவார்த்தைதனை பார்த்திபன்கேட்டான்
மெத்தஅதிசயமாய் வேந்தர்கள்தாமிருந்தார்
அப்போதுபெண்களெல்லா மதிகமனமகிழ்ந்து
அருச்சுனன்தேவிமா ரெல்லாருந்தானெழுந்தார்
தருமரிடபாதஞ் சாஷ்டாங்கந்தான்பணிந்தார்
தெண்டனிட்டமாதர்களை சீர்பெறவேவாழ்த்தினார்
தம்பிமார்வந்து தாளிணையைப்போற்றிசெய்தார்
கண்டுகளிகூர்ந்தார் காண்டீபனருச்சுனனை
அப்போது அல்லியரு மர்ச்சுனனைத்தான்பார்த்து
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடியாளப்போது
மூன்றுநாளாறுபொழுதில் வாரேனென்றீர்சுந்தரரே
பதினாறுநாளாகப் பார்த்தரிந்ததினால்
தண்டுதளமெடுத்து தார்குழலும்வந்தேனிங்கே
காண்டீபனருச்சுனரே காளையரேயும்மையுந்தான்
அலைகடல்பள்ளிகொள்ளும் ஆயனுந்தானறிந்து
என்னசெய்வாளோ என்றுமனதிலெண்ணி
இவ்விதம்பண்ணினால் இளங்கொடியுமேதுசொல்வாள்
என்று-மாயவனார்செய்த மயக்கமிதுவென்றறிந்தேன்
அப்போ-எல்லவருங்கூடியேயிருக்குமந்தவேலையிலே
சேராம்புராசாக்கள் எல்லோருந்தானெழுந்து
தர்மரைதான்வணங்கி சாஷ்டாங்கதெண்டனிட்டு
வளம்பெரியபட்டணத்தை வண்மையாய்நீபார்க்க
எல்லவரும்வாருங்கள் எங்கள்மேல்தயவுவைத்து
சாஷ்டாங்கமாகவே தெண்டனிட்டராசாக்கள்

தர்மர்முதல் அனைவரும் அரண்மனைக்குப் போகுதல்.

அந்தப்பட்டணத்தைநோக்கி பரிவுடனேதான்வந்தார்
அப்போதுதர்மதுரை அதிகமனமகிழ்ந்து
எல்லவர்களுங்கூடி ஏகரித்துதானடந்தார்

போராரர்களெல்லோரும் பொங்கிமனங்குளிர்ந்து
போனார்கள் நால்வருமாய் பொற்கொடியாளரமனைக்கு
பாராளுந்தருமருக்குப் பவளக்கொடியாளும்
மாணிக்கசிங்காசனம் மன்னருக்குச்சோடித்து
நாடு ஆளுகிற கொற்றவரேயிருமென்றாள்
ற்றிமதயானை வீமதுரைராஜருக்கு
த்தினசிங்காசனம் நலமுடனேசோடித்து
இதன்மேலிருமென்று ரிளங்கொடியுமப்போது
நாமக்கொடியுடைய நகுலனவன்றனக்கு
சிங்காசனங்களிட்டுவீற்றிருமென்றாளப்போது
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவராசருக்கு
பொன்னிழைத்துவைத்து சிங்காதனம்போட்டு
இதன்மேலிருமென்று ரிளங்கொடியாளப்போது
புலந்திராசனுக்குப் போட்டார்சிங்காதனங்கள்
எடுத்துமவள்வைத்து இருமையாதம்பியரே
என்றுமவள்சொல்லி இளங்கொடியுமப்போது
விசையனார்தேவியட்கு விதவிதமாய்வார்த்தைசொல்லி
அவரவர்க்குத்தக்கதோ ராசனங்கள்போட்டுவைத்தார்
தேவிமாரெல்லோருந் திறமுடனேதானிருந்தார்
பார்த்தீபனருச்சுனனும் பள்ளியறையுட்புகுந்து
பாராளுந்தருமதுரை பார்த்துமனமகிழ்ந்து
இம்மாது நல்லகன்னியவள் மரியாதையுள்ளவள்காண்
இறப்புக்கும்பிறப்புக்கும் இனியொருபெண்வேணுமே
என்றுமனங்குளிர்ந்து இருந்தார்சந்தோஷமாக
மதுரைத்துரைச்சியரும் மனம்பொருந்தியல்லியரும்
மாதினுடபட்டணத்தில் மகாசேனையுள்ளதெல்லாம்
அரண்மனையிருபுறமும் ஆஸ்தானமண்டபமும்
பள்ளியறையெங்கும் பார்க்கமுடிபோகவில்லை
அந்தப்-பவளப்புதுமைகளைப்பார்த்தாளே அல்லியரும்
இடம்பெரியவாசலது எழுநூறுகாதவழி
தூணுக்குத்தூணுமங்கே தொண்ணூறுகாதவழி

ஆயிரங்காதவழி அழகானவாசலது
பவளக்கால்செப்பனிட்டுப் பாங்காயலங்கரித்து
பொற்றூணும்கற்றூணும் குங்குமநற்றூணும்
தூணுக்குத்தூணுமங்கே தூண்டாவிளக்கெரிய
குளிர்ந்ததங்கத்தூணும் குங்குமநற்றூணும்
தூணுக்குத்தூணுமங்கே தூண்டாவிளக்கெரிய
இட்டிருக்குமாசனமு மேன்மணிச்சிங்காசனமும்
வாடாததாமரையும் வந்துநிழல்காட்ட
முத்துமரகதமும் முழுப்பவளத்தூணுமங்கே
தங்கத்தால்பொம்மைகளும் தனிவயிரமாலைகளும்
வாழைகமுகுகளும் வண்ணப்பலாச்சோலைகளும்
சேரவேநாட்டிச் செம்பவளத்தூணிருத்தி
நின்றவிடந்தோறும் நிலைதோறும்சம்பரமும்
கண்டவிடந்தோறும் கண்ணாடிமாலைகளும்
காடைவிளக்குகளுங் கைவிளக்குதேர்விளக்கும்
தாமமுடியாளுக்குச் சம்பரநல்விளக்கும்
பவளப்புதுமைதனைப் பார்க்கமுடியாது
கண்டவிடந்தோறும் கனத்தபவளமாலை
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகிக்கு
எங்கும்பவளமா யிருக்குதரண்மனைக்குள்
பங்கயஞ்சீர்கண்ணாள் பைங்கிளியாள்கையிலே
அந்தப்-பவளநிறமும் பாரித்தகண்ணழகும்
சோதியழகுமவள் துய்யமுகத்தழகும்
வடிவழகுகொம்பனையும் வையகத்தில்கண்டதில்லை
இந்த-மாதினிட உபசரணை மரியாதைதான்பார்த்து
மதுரைதுரை அல்லியரும்மனங்குளிர்ந்தப்போது
பவளக்கொடியாளைப் பைங்கிளியைத்தான்பார்த்து
வாருமிங்கேயம்மாவென்று வார்த்தைமிகப்பேசி
பாஞ்சாலன்பெற்ற பைங்கிளியாள்துரோபதையும்
அலைகடலிற்பள்ளிகொள்ளும் அச்சுதனார்தங்கையரும்
கொம்பனைமாரெல்லோரும் கூடிவிளையாடினார்கள்

மாமியர்குந்தியம்மாள் மருமகளைத்தான்பார்த்து
என்-கண்ணுளன்மங்கையரே கட்டழகிவாருமென்று
மார்போடேதானணைத்து மருமகளைமுத்தமிட்டு
என் அறிவுள்ளநாயகமே அழகுமுடிபொறுத்து
...ட்டுநாளங்கே யிருந்தார்கள்யாவருமாய்
...ருந்துகள்பண்ணியே வெகுமானந்தான்கொடுத்து
...ளத்தால்பல்லக்கு பாரித்தார்யாவருக்கும்

பவளக்கோடியாள் புலந்திரனுக்குச்சொல்வது.

பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளும்
மைந்தன்புலந்திரனை மடிமேலெடுத்துவைத்து
என்-கண்ணுனகண்மணியே காண்டீபன்தன்மகனே
குருநாட்டையாளுகிற கொற்றவர்கள்தன்மகனே
தங்கமுடிபெற்ற தனஞ்சயனுர்புத்திரனே
நவரத்தினபொன்முடியே நாயகியாள்தன்மகனே
கண்ணோடேதானணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
வாரியெடுத்து மடிமீதில்வைத்துக்கொண்டு
மதுரைநாடாளுகிற மாதுதுரைமகனே
பவளக்கொடியாளும் பைங்கிளியாளேதுசொல்வாள்
என்-தங்கக்களஞ்சியமே தார்வேந்தர்தம்பியரே
உந்தனைத்தொட்டு உண்மைபெறலாச்சுதையா
நீ-பவளத்தேர்வேண்டியே பத்தாவைக்கேட்டதினுல்
எம்முடன்-பத்தாவுமிங்குவந்து பாவித்தார்கானகத்தில்
கானகத்தில்வேட்டைவந்தேன் கண்டுவிட்டார்பார்த்தர்
அங்கிருந்ததோழனும் அழுகிறதைத்தான்கேட்டு
தாதியரை-போய்வாருமென்று சொன்னேனேஐயாவே
தாதியவள்பார்த்துத் தார்குழலாளோடிவந்து
ஆரோதெரியாது அரசர்படைவென்றவர்போல்
காணுகுதுஎன்தாயே கடுகெனவேபோகவேணும்
என்றதுசொல்லவே ஏறினேன்தண்டிகைமேல்
அப்போதுபோயிறங்கி அவரைநான்பார்த்தேனப்பா
என்-மார்பின்சரப்பளியை வாங்கியேநான்போட்டேன்

தாதியைக்கட்டுமென்று தண்டிகையில்வந்துவிட்டேன்
கட்டியேதாதியருங் கடுகியேயோடிவந்தாள்
மார்பின்சரப்பளியை வாங்கிவரச்சொன்னேனையா
தாதியவள்போய் சரப்பளியைக்கேட்டாக்கால்
தருகிறதில்லையென்றார் தனஞ்சயனாரப்போது
தாதியவள்வந்து தருவதில்லையென்றாளப்போ
அப்போதரண்மனைக்கு வந்துவிட்டேனப்பாளுன்
கொலுமுகச்சாவடியில்கொம்பனையுந்தானிருந்தேன்
அன்னவடிவெடுத்து வந்தார்கொலுமுகத்தில்
அவர்-ஆடலும்பாடலும் அதிசயத்தைத்தான்பார்த்து
கூவுகிறவோசைகளும் குயிலென்று நானிருந்தேன்
அன்னமென்றுசொல்லி அணைத்துப்பிடித்துவந்து
தாதியைத்தானழைத்து தையலவள்கைகொடுத்தேன்
கூண்டிலடையுமென்று கொற்றவனேசொன்னேனையா
அப்போது-அன்னவுருமாறி அர்ச்சுனராளுரையா
மன்னவனார்ச்சுனனும் மதியைக்குலத்தாரே
மணமாலைசூட்டினார் மன்னவனேதம்பியென்றாள்
என்பத்தாவின்புத்திரனே பார்வேந்தர்தன்மகனே
குருநாட்டையாளுகின்ற கொற்றவனார்தருமதுரை
வெற்றிமதயானை வீமதுரைராசர்
நாமக்கொடியுடைய நகுலனவன்றனையும்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவராசரையும்
ஐவரைப்பெற்றெடுத்த அம்மாவேகுந்தியம்மாள்
மதுரைநாடாளுகிற மாதுநல்லாளல்லியரும்
பாஞ்சாலநாயகியாள் பத்தினியாள்தேவியரும்
மாயவர்தங்கை மங்கைசுபத்திரையும்
விசயனார்தேவி மெல்லியவர்கள்யாவரையும்
என்கண்குளிரப்பார்க்க வந்ததேகண்மணியே
இல்லாமற்போனால்இவர்களையறியேனையா
என்றவர்கள்சொல்ல என்றவருந்தான்கேட்டு
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடிமாரெல்லோரும்

பவளக்கொடி புலந்திரனுக்குப் பவளத்தேர்கொடுத்தது.

பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளும்
பவளத்தேரொன்று பாலனுக்குச்செப்பனிட்டு
மெத்தவினேதமாய் வெகுவாயலங்கரித்து
மைந்தர்புலந்திரற்கு வேண்டியதுதான்கொடுத்தாள்
பவளத்தேர்மேலே பாலகனையேற்றிவந்து
திருஷ்டிகழித்தாளே தேன்மொழியாளப்போது
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளும்
மாமியார்குந்தியம்மாள் மயிலினைக்கப்போது
பாதஞ்சரணமென்று பணிந்தாளேதேன்மொழியும்
மந்தாரக்குந்தியம்மாள் மருமகளைத்தானெடுத்து
வாழ்த்திவிடைகொடுத்து மங்கையருமப்போது
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
என்றுசிரஞ்சீவியாய் என்னளும்வாழ்ந்திருப்பாய்
பங்கயஞ்சீர்கண்ணுள்பவளக்கொடியாளும்
பாராளுந்தருமருக்குப் பாதஞ்சரணமென்றுள்
சாஷ்ட்டாங்கமாகத் தையலருந்தான்பணிந்தாள்
வாழ்த்திவிடைகொடுத்தார் வீமதுரைராசாவும்
வெற்றிமதயானை வீமதுரைராசருக்கு
நகுலசகாதேவ நாமமுடிமன்னருக்கு
மைத்துனர்களிருவருக்கும் மாதுசரணமென்றுள்
தருமபுரியாளுந் தனஞ்செயனைப்போது
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாட்கு
வேண்டியவுடுப்புகளும் வேணதுயிலாடைகளும்
பொன்னுலலங்கரித்து பொற்பவளத்தண்டிகையும்
சந்தோஷமாகத் தையலர்க்குத்தான்கொடுத்தார்
என்னளுஞ்சுகமாக விருந்தரசு ஆளுமென்றூர்
அப்போவிடைகொடுத்தார் ஐயருமங்கிருந்தார்
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளும்
விசையரந்தஅர்ச்சுனரை மெல்லியருந்தான்பார்த்து
குருநாடுசீமைக்குக்கொற்றவரேபோரீரோ

பதினாறுதன்வருடம்பாவிசிறையிருந்தேன்
ஒன்றுமறியாமல் உத்தமியும்நானிருந்தேன்
கோடானகோடியுண்டு கொம்பனையைக்கேட்டவர்கள்
மாலையிடவந்தவர்கள் மட்டுமிதமில்லையையா
ஆரையுந்தீண்டேனென்று அருஞ்சிறைநானிருந்தேன்
ஏறெடுத்துப்பார்த்தவர்கள் ஏனென்றுகேட்டதில்லை
ஆறுமில்லைவையகத்தில் அர்ச்சுனரேயென்றுசொல்
மணமாலையிட்டீரே மாயவர்தன்னருளால்
பதினாறுநாளையிலே பத்தாவேளந்தனையும்
செய்யாதகோலமெல்லாஞ்செய்துவிட்டீரர்ச்சுனரே
குருநாடுசீமைக்குக் கொற்றவரேபோரீரோ
என்றுசொல்லிகன்னியரு மேங்கியழுகிறாள்
பொங்கியழுதுமே பொற்கொடியாளப்போது
மயங்கியேதானழுதாள் மயிலனையாளப்போது
அவளைப்பார்த்தாரருச்சுனரும் பாரமுடியாளை
மயங்கியழுகிறதை மன்னவருந்தான்பார்த்து
பொங்கியழுகிறதைப் போர்விசையன்தானறிந்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
மாணிக்கத்துப்பட்டியால் மாதினிடகண்துடைத்து
நீ-அழவேண்டியகாரியமேன் அன்னப்பசுங்கிளியே
குருநாட்டுச்சீமைக்குக் கொற்றவனார்தம்முடனே
நானோடுறவாய் நாயகமேநான்போயி
யெல்லோருஞ்சேர்ந்து இருக்குமந்தவேளையிலே
நானும்வருவேன் நாயகமேயென்றுசொல்லி
தங்குவேனோபூமியிலே தரிப்பேனோஅங்கேநான்
என்சோதிமணிவிளக்கே தெள்ளுமணியாளே
உன்னைப்பிரிந்துநான் இருப்பேனோபூமியிலே
கடுகவருகிறேண்டி என்கட்டழகிநாயகமே
நான்-ஓடிவருவேண்டி ஒருநொடிக்குள்ளாக
கலால்நடவாமல் காற்றாய்வருவேண்டி
என்றதுசொல்லவே இளங்கொடிக்குஅர்ச்சுனனும்

பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
அப்போதுவதுசொல்வாள் அன்னபசுங்கிளியும்
நான்-தங்கியிருப்பேனோ தரிப்பேனோபூமியிலே
என்செய்வேன்விசையா என்றழுதுகொண்டிருந்தாள்
ந்தக்கருத்துக்கோ என்னைவந்துமாலையிட்டீர்
ப்படியென்றால் இணங்கேனேமன்னவனே
னக்கென்னகெதியாச்சு என்று அழுதுகொண்டு
ஈஸ்வரரேபார்வதியே யெனக்கென்னவிதிவிதித்தாய்
ண்டமுலகளந்த ஆயர்பெருமாளே
எல்லோருங்கூடியே யிருந்தீரோஎந்தனுக்கு
இந்தக்கருமத்துக் கினியென்னசெய்வேனையா
என்றுசொல்லிமாது இளங்கொடியாள் தானழவே
காண்டீபனர்ச்சுனனும் காளையவனப்போது
பங்கயஞ்சீர்கண்ணாள் பவள்க்கொடியாளும்
தங்கமுடிதரித்த தனஞ்சயநாயகமே
நான்-இங்கேயிருப்பேண்டி யிளங்கொடிநாயகமே
எனக்கும்பெரியவர் இயலானவீமரவர்
அவருக்குமூத்தவர் அழகானதருமலிங்கம்
போகட்டென்றுநாமிருந்தால்பேச்சுக்கிடமல்லவா
பொறுக்கமுடிகூடாது புத்தியுள்ளநாயகமே
அடி-அதனாலேகண்ணே அவரோடுறவாகவே
போய்வாரேன்பெண்ணே என்றானிளவரசன்
அப்போதுமாது பைங்கிளியுமேதுரைப்பாள்
தடுவருவேனென்று கட்டழகாவெந்தனுக்கு
எனக்குஒரு நிச்சயங்கள் செய்துகொடுமென்றாள்
காண்டீபனருச்சுனருங் காளையவரேதுசொல்வார்
தர்மர்மேலாணையிட்டுத்தையலர்க்குத்தான்கொடுத்து
இனியானால்நம்புவையோ ஏலப்பசுங்கிளியே
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
மன்துகுழைந்தாளே மாதுநல்லாள்கன்னியரும்
அர்ச்சுனனுமப்போது அதிகமனம்பூரித்து

மதுரையில்விடைபெற்றுமன்னனடக்கலுற்ருன்
அங்கேவிடைபெற்று ஐவருந்தானடந்தார்
மதுரை திசைநோக்கி வருகிருர் துரைகளெல்லாம்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அல்லியுட
பாளையத்தை யெழுப்பிவிடுதல்.

அண்டமுலகளந்த ஆயர்பெருமாளும்
மதுரைத்துரைச்சி மகாசேனையுள்ளதெல்லாம்
கதண்டுகுளவிகள் கொட்டிமடிந்தவரை
சேனைபரிவாரம் சேனைகளுள்ளதெல்லாம்
யானைகுதிரைகளை அத்தண்டசேனைகளெல்லாம்
தட்டியெழுப்பிவிட்டார் தனஞ்செயனுரெம்பெருமாள்
தூங்கிவிழித்தாற்போல் துரைமார்கள் தானெழுந்தார்

தருமர்முதலியயாவரும் அவர்களிடஞ்செல்லுதல்.

எழுப்பிவிட்டமாயவனு ரேகினுரப்போது
தருமாபுரியாளும் தருமதுரையெல்லோரும்
குந்தியம்மாள்தன்னுடனே கொற்றவருந்தேவியரும்
எல்லவருங்கூடியே ஏகோபித்துத்தானடந்தார்
அல்லிநல்லாள்பாளையத்தில் வந்தார்களப்போது
செத்துமடிந்ததொரு சேனைகளெல்லவரும்
எப்போதும்போல விருக்கவேகண்டார்கள்
மதுரைத்துரைச்சி மனங்குளிர்ந்தாளப்போது
பாளையங்களுள்ளதெல்லாம் பயணங்களாச்சுதப்பா
ஆனைகுதிரைகளும்|ஆள்பெரியசேனைகளும்
சேனைபசுந்துகளும் சேனைகளெல்லவரும்
கொடிகள்கொடிசீலைகள் குடைகளும்சூழ்ந்துவர
யானைகுதிரையின்மேல் அடிபடுதுடங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைகிளம்புகுது
எக்காளஞ்சின்னம் எழில்பெறவேதாதுவனும்
பூரிகைடமாரம் பூமியதிருதங்கே
அல்லிப்பெருமாளும் அழகுபுலந்திரனும்

பாஞ்சாலநாயகியாள் பத்தினியாள் துரோபதையும்
மந்தாரக்குந்தியம்மாள் மாமியாருந்தான் கூட
ஆனையம்பாரிமேல் அனைவோருந்தானடந்தார்
பார்க்கமுடியவில்லை பைங்கொடியாள்ராணுவங்கள்
காடுசெடிகள் கடுந்தணலாகுதங்கே
[..]லுகளும்முள்ளுகளும் கடுகிப்பொடியாகுதங்கே
[..]ந்தூளுஞ்செந்தூளுங் கதிரோனைக்கப்புதங்கே
[..]ளையம்போகிற அதிசயத்தைத்தான்பார்த்து
காண்டிபனருச்சுனனும் காளையவன்தானினைந்து
[..]ப்படிக்கு அதிசயமாய் இவள்வரக்காரியமேன்
இது-நமக்காகவந்து நம்முயிரைக்கொல்லவல்லோ
மாயன்பெருமாளும் மகாதேவர்தருமத்தினால்
ஆயன்பெருமாள் அருளாளர்கிருபையினால்
நாம்-தப்பிப்பிழைத்தோம் தார்வேந்தர்தருமத்தால்
பாராளுந்தருமதுரை பாக்கியத்தால்வந்தோமே
இளங்கொடியாள்மாதருக்கு எதிரொருவரில்லையே
தப்பாமல்தலையறுப்பாள் தாமமுடியாளும்
பொல்லாதஅல்லியவள் போருக்கும்வல்லவள்காண்
மைந்தன்மேலாணை மறந்தபாவியென்றுசொல்லி
சத்தியந்தப்பினார் தார்வேந்தரென்றுசொல்லி
கழுமரத்திலேற்றி கடுஞ்சிறையில்வைப்பாளே
என்றுமனதினுள்ளே எண்ணியவனர்ச்சுனனும்
அப்போ-தெல்லோருங்கூடியே ஏகரித்துத்தானடந்தார்
அந்த-மதுராபுரியில் வாழ்வரசிப்பட்டணத்தில்
போனார்களவருமாய்ப் பொற்கொடியாளரண்மனைக்கு
அர்ச்சுனனார்தேவிமார் எல்லோரும்போய்நுழைந்தார்
இ[..] பாராளுந்தருமருக்கும் மற்றுமுள்ளமன்னவர்க்கு
சிங்காதனங்கள் சோடித்தாளப்போது

குருநாட்டையாள் தருமர் கூடவேதானிருந்தார்
ஐவரையும்பெற்றெடுத்த ஆரணங்குகுந்தியம்மாள்
பாஞ்சாலிநாயகியாள் பத்தினிதுரோபதையும்
மற்றவரையெல்லாம் வாருமென்றுதானழைத்தாள்
அவரவர்க்குஆசனங்கள் போட்டாளேயல்லியரும்
அப்போமூன்றுநாளங்கே முடிமன்னர்தாமிருந்தார்
விருந்தமுதுசெய்து மெத்தவுபசரித்தாள்
எல்லவற்கும்வெவ்வேறாய் ஈந்தாள்வெகுமானம்
வெகுமானம்பெற்று விடைபெற்றுத்தானடந்தார்
அப்போ-பாராளுந்தருமதுரைபாலகனைத்தானெடுத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
நான்போய்வாரேன்கண்ணே பொன்னின்புலந்திரனே
என்றுசொல்லித்தருமர் இருமென்றாரப்போது
வெற்றிமதயானை வீமதுரைராசாவும்
என்-அப்பாபுலந்திரனே ல்அலிமகனாரே
என்-கட்டிக்கரும்பே காளைபுலந்திரனே
போய்வாரேன்கண்ணே புலந்திரராசாவே
என்றுசொல்லிவீமர் இருவென்றாரப்போது
நாமக்கொடியுடைய நகுலரவர்பார்த்து
தம்பிபுலந்திரனே தார்வேந்தர்தம்பியரே
குருநாடுசீமைக்குக் கொற்றவனேபோய்வாரேன்
என்றவர்சொல்லி இருமென்றாரப்போது
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவன்தான்பார்த்து
தங்கமணியே தார்வேந்தர்புலந்திரனே
குருநாடுசீமைக்கே கொற்றவனேபோய்வாரேன்
என்றவர் சொல்லி இருமென்றாரப்போது
மந்தாரைக்குந்தியம்மாள் மயிலனையாள்ப்போது
புலந்திரனைத்தானெடுத்துப் பெருக்க மனமகிழ்ந்து
ஐவர்கலிதீர்த்த என்னப்பா புலந்திரனே
குருநாட்டையாளுகின்ற கொற்றவர்தன்மகனே
நான்-போய்வாரேனென்று புலந்திரனைமுத்தமிட்டு

அர்ச்சுனனார்தேவிமார் எல்லாருமப்போது
அப்பாபுலந்திரனே அதிரூபசித்திரமே
நாங்கள்-யாவரும்போய்வாரோம் என்றார்களப்போது
என்றுசொன்னாரப்போது இயலானதேவிமார்கள்
பாண்டபனருச்சுனனுங் காளையவனப்போது
மந்தன்புலன்திரனை மன்னவனும்தான்பார்த்து
போய்வாரேனென்றார் போர்விசயராசாவும்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
வுண்ணுவே நீர்போனால் வாரதில்லையையாவே
போனால்வருவதில்லை என்றான்புலந்திரனும்
ஆனாலழகுமன்னன் அர்ச்சுனனுங்கூறுவான்
என்னாளும்போலே இனியிருக்கமாட்டேனப்பா
கடுகவருவேனப்பா காளைபுலந்திரனே
நம்புவேனேவென்று நவின்றான்புலந்திரனும்
நம்பியிருவென்று நாயகனுஞ்சொல்லினான்
அல்லியரைப்பார்த்து அர்ச்சுனனுமேதுசொல்வான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகமே
குருநாடுசீமைக்குக் கொம்பனையேபோய்வாரேன்
அப்போது அல்லியரும் ஆரணங்குதான்மயங்கி
கண்ணீர்சொரியவிட்டாள் கட்டழகியப்போது
வேண்டாங்காண்மாதே விசாரப்படவேண்டாம்
மெய்யாய்வருகிறேன் மெல்லியரேநம்பென்றான்
எந்நாளும்போலே இராதேநீயங்கேயென்று
போய்வாருமென்று பொற்கொடியுந்தெண்டனிட்டார்
மாதுவிடைகொடுக்க வாள்விசையன்தானெழுந்து
தர்மரும் வீமரும்தானடந்தார்பொட்டெனவே
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி

இருங்காண்மன்னவரேஎன்றுசொன்னாள்குந்தியம்மாள்
பொல்லாவனங்கடந்து போய்ச்சேர்ந்தார்குருநாடு
அவரவர்களாசனத்தில் அமர்ந்தார்கள்பஞ்சவர்கள்
இந்தக்கதைதன்னை இவ்வுலகில்கேட்டவர்கள்
கேட்டார்கிளைதழைத்துக் கீர்த்தியுடன்வாழ்க
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்ற முசியாமல்வாழ்ந்திருப்பார்

வஞ்சி விருத்தம்

வாழிவாழிவானவர் வாழிவாழிமாமறை
வாழிவாழிமாதவர் வாழிவாழிவையமே

பவளக்கோடி மாலை
முற்றிற்று

மதுரைத் தமிழ்வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களியற்றிய.

பதிவிரதா பராக்ரமம் அல்லது

சாவித்ரி சத்யவான் சரித்திரம்.

நண்பர்களே ! கவனியுங்கள் ! கவனியுங்கள் !!

நமது தமிழ் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய "நல்லதங்காள் சரித்திரத்திலுள்ள பாடல்களைப்படித்த கனவான்கள் அவர் பாடல்களையே படிப்பதற்குப் பிரியங்கொண்டு வாயூறாதவர்கள் இல்லை" என்பது யாவருமறிந்த விஷயமல்லவா?

ஷை நாயுடவர்களியற்றிய இந்தச் சாவித்ரி சத்யவான் சரித்திரத்தில் கலிங்க தேசத்தரசன் ராஜ தர்பாரில் தேசவிசாரணை செய்யும் ஆடம்பரமான பாடல்களும், சால்வபுரியரசனுடன் போர்புரிந்து நாட்டைக் கைப்பற்றும் வீராவேசமான பாடல்களும், வசனங்களும் ராஜ தந்திர முறைப்படியும், மிக்க ஆக்ரமரோஷ விதிப்படியு மிருக்கும்.

சாவித்ரி தன் சகிமார்களுடன் நந்தவனத்திலுலாவும் காட்சியமைந்த பாடல்களும், சிம்மத்தால் துரத்தப்பட்ட சாவித்ரி சத்யவானால் ஆதரிக்கப்பட்ட சமயத்தும், இருவர்க்கும் ஏற்படும் காதல் கலப்பின் சமயத்தும் உள்ள பாடல்களும் தர்க்க வசனங்களும் வெகு சிருங்காரமா யிருக்கும்.

எமராஜன் தர்பாரில் எமபடர்களிடத்தில் அகப்பட்டுத் திண்டாட்டப்படும் சண்டாளன் ஒருவன் தான் செய்த தீயசெய்கைகளைச் சொல்லிப் புலம்புதல் படிக்கப்படிக்கக் கொண்டாட்டமா யிருக்கும். இப்பாடல்களைப் படித்தோர்களும், கேட்டோர்களும் எத்தகையினராயினும் அவர் தீயவழிகளில் மனதைச் செலுத்த மாட்டார்களென்பது திண்ணம்.

சத்யவான் உயிர் நீங்கும் சமயம் இருவர்க்கும் பிரிவாற்றாமையால் ஏற்படும் சோகரசமான பாடல்களைப் படித்தோர் கல்மனதுடையவராயினும் அங்கு கலங்காதிருக்க முடியாதென்பதில் ஐயமில்லை.

பதிவிரதா சிரோமணியாகிய சாவித்ரி தன் விரதமகிமையால் எமனுடன் பின்தொடருஞ்சமயம் இருவர்க்கும் ஏற்படும் தர்க்கமும், கணவனின் உயிர்மீட்கும் பாடல்களும், வசனங்களும் படிக்கப்படிக்க உருக்கமும், இன்பமுமாயிருக்கும். இங்கு தம்பதிகளின் அன்பின் தகைமை வெளிப்படும்.

இச்சரித்திரத்திற்கென அமைந்த தமிழருமையான வசனசாதுர்யங்கள் வாசிக்கத்தகுந்தது, இன்னிசையமைந்த பாடல்கள் படிக்கத்தகுந்தது. இடத்திற்குத் தக்கவாறு அமைந்த புதிய வர்ணமெட்டுகள் கேட்கத்தகுந்தது. சொற்பக் காப்பிகளே தயார். 1-2பாகங்கள் விலை அணா--8.

,, நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி	,,	0—4—0
,, இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து	,,	0—2—0
,, ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன்	,,	0—[illegible]—0.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.